

நூறு கோடி ரூபாய்
வைரம்
இந்திரா சௌந்தர்ராஜன்
GOODWILL'S

# நூறு கோடி ரூபாய் வைரம்

## 1

**வை**ரம் !

நவரத்தினங்களில் ஒளிக்கதிர்களை ஸ்வீகரித்து அதை வெகுவேகமாய் திருப்புவதில் நிகரில்லாத ஒரு சாதனம். இதற்கு மனிதர்களின் எண்ணங்களை கலைக்கின்ற கூட்டுகின்ற, குழப்புகின்ற சக்தியும் உண்டு.

மிகச்சரளமாகப் பேசிக்கொண்டிருந்த ஒரு பித்த உடம்புக்காரர் திடீரென்று பேசமுடியாமல் திணறி உளறத் தொடங்கினார்.

அவர் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தில் பருத்த வைர மோதிரம் தரித்திருந்த ஒருவர் நுழைந்தது தான் காரணம். இவரின் வைரக்கதிர் அலைகள் பேச்சாளரின் எண்ணக் கூட்டத்தை எவ்வளவு கலைக்க முடியுமோ அவ்வளவு கலைத்தது.

இன்றைய யுகத்து பாஷையில் சொல்வதானால் வைரம் ஒரு ரிமோட். இது நமக்குத் தெரியாத, புரியாத நிலையில் பல விஷயங்களை இயக்குகிறது. இதுதான் உண்மை.

tamilebooks.net

இந்த வகையில் ஒரு கோல்ஃப் பந்தின் அளவுக்கு ஒரு வைரம் இருந்தது. இதற்கென்று பிரத்யேகமாக 'லலாட வைரம்' என்றே ஒரு பெயரும் இருந்தது.

புருவ மையத்தில் இருக்கும் திரைக்கும் அதைச் சார்ந்த பகுதிக்கும் பேர்தான் 'லலாடம்!' இந்த லலாடம் யோகத்தால் மட்டுமே திறக்கும். இந்த வைரமும் அதை வைத்திருப்பவரின் லலாடத்தைத் திறந்து அவருக்கு யோக சித்தியை தரக்கூடியதாம்!

இந்த லலாட வைரத்திற்கு வேறு பல சக்திகளும் இருந்தன.

*—நவரத்தின ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*இண்ட்டர்வியூவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் கதிர். இருப்பதில் சுமாரான வெள்ளைப் பேண்ட்டையும், அதற்கு மேட்ச்சாக ஒரு வெள்ளைச் சட்டையையும் தேடிப் பிடித்து எடுத்தான். அதில் உதிர்ந்து போயிருந்த ஒரு பட்டனையும் தைத்து முடித்து அதை அணிந்து கொண்டவன், நேராக ரசம்போன பழைய கண்ணாடி முன்னால் நின்று ஒரு பார்வை பார்த்தான்.*

*லட்சணமாகத்தான் இருந்தது!*

*முகத்தில் அனாவசியமாய் முடிக்கூட்டமில்லை. மீசை கிருதா எல்லாம் திருத்தமாய் வெட்டப்பட்டு ஒரு அமைதி யான- அழகான வாலிபன் அவன் என்று சொல்லாமல் சொல்லிற்று.*

*ஒரு மனிதனுக்கு தோற்றம் மிக முக்கியம். சுத்தமான உடை, மெல்லிய விபூதிக் கீற்றுடைய நெற்றி, அடக்கி வாரப்பட்டிருக்கும் தலைமுடி- அளவான மீசை, வெள்ளையடித்தது போல மின்னும் பற்கள்- துறுதுறு வென்ற விழிகள்- இதெல்லாம் யாருக்கும் பிடிக்கும்.*

tamilebooks.net

கூடவே ஆப்கனில் அமெரிக்கா முதல் குண்டை என்று எப்பொழுது போட்டது என்பதில் இருந்து, மேயர் தேர்தலில் ஸ்டாலின் வாங்கிய ஓட்டு வரை தகவல்களைச் சொல்லத் தெரிந்த ஒரு நாக்கும் இருந்து விட்டால் எந்த இண்ட்டர்வியூவிலும் ஒரு ரவுண்டு கட்டலாம்.

இதற்கு மேல் நேரம் என்றும் ஒன்று இருக்கிறது.

இண்ட்டர்வியூ செய்யும் அதிகாரிக்கு விசாலமான மனசும் இருக்க வேண்டும். பாரபட்சமில்லாமல் மதிப்பெண் போடும் உதார குணமும் இருக்க வேண்டும். மிகமிக முக்கியம்- எந்த ஒரு மந்திரியோ இல்லை எம்.எல்.ஏ.வோ 'நம்ம பையன் ஒருத்தன் வருவான்- கவனிச்சுக்குங்க...' என்று சொல்லாமல் இருக்க வேண்டும்.

கூட்டிக் கழித்தால் கையில் ஒரு பாதியும், வெளியில் மறுபாதியும் இருப்பதுதான் உண்மை. அந்த மறுபாதி நமக்குச் சாதகமாய் இருப்பதையும், இல்லாததையும் தான் சிலர் அதிர்ஷ்டம் என்கின்றனர். இன்னும் சிலர் நேரம் என்கின்றனரோ?

கதிருக்கு அவன் வரையில் மிக நிறைவாகவே இருந்தது. பிரம்மன் கொடுத்த உடலை இதற்கு மேல் இம்ப்ரசிவாக வடிவமைத்துக் கொள்ள முடியாது. புத்தியும் சூரியப் பிரகாசம்.

ஆந்த்ராக்ஸ் கிருமியின் உட்கூறுகள் எப்படிப்பட்டது என்பதில் இருந்து அஜித் நடித்துக் கொண்டிருக்கும் 'ரெட்' படத்தின் கதை வரை எதைக் கேட்டாலும் பட்பட்டென்று பதில் சொல்ல முடியும்.

ஆனால் அந்த அதிர்ஷ்டம்... அல்லது நேரம்?

அதை நினைக்கும்போது மட்டும் கவலையாக இருந்தது. இன்று அது எப்படி இருக்கப் போகிறதோ? என்ன பாடுபடுத்தப் போகிறதோ...? அதனாலான கவலை

tamilebooks.net

ரூகத்தில் ஓடியது. பவுடர் பூசியிருந்தும் மங்கின பேட்டரி டார்ச் போல ஒருவித கலக்கம் சன்னமாய் தென்பட்டது.

ஷூ ரேக்கில் நண்பன் கௌதமனின் புதிய ஷூ அடங்கி இருந்தது. கௌதமனும் நைட் ட்யூட்டி பார்த்துவிட்டு வந்து குறட்டையில் இருந்தான். இந்த ஷூ திரும்ப அவனுக்கு இரவு ட்யூட்டிக்கு போகும்போதுதான் தேவைப்படும். நடுவில் மூக்குத் துவாரத்தில் பட்டாசைச் செருகி அதன் திரியில் நெருப்பு வைக்க- அது காதைச் செவிடாக்கும்படி வெடித்தாலும் அசரமாட்டான் கௌதமன். 'சத்தம் போடாதிங்கப்பா- மனுஷன் தூங்கறேன்ல' என்று முணங்கிவிட்டு திரும்பப் படுத்துக்கொள்வான்.

'மனுஷனாடா நீ...? நீயெல்லாம் உன்னை மனுஷன்னு சொல்லிக்கலாமா?' -என்று உடன் இருக்கும் நண்பன் பிரபுவும், கதிரும் திரும்பக் கேட்டு சடைத்துக் கொள்வார்கள். எனவே தைரியமாக அந்த ஷூவை காலில் ஏற்றிக் கொண்டான்.

பிரபு, கௌதமன் இருவருமே கதிருக்கு நண்பர்கள். கௌதமனுக்கு ஒரு கெமிக்கல் தொழிற்சாலையில் உத்யோகம். பிரபு டிவி. சீரியல்களில் ஓரஞ்சாரமாக நின்று நடித்து வருபவன்.

'அடுத்த ரஜினி நான்தான்...!' -என்று தினமும் டயரியில் எழுதி வைத்துப் படிக்கறவன். அதற்கு சப்போர்ட்டாய் ரஜினியைப் போலவே கறுப்பாயும் ஒல்லியாயும், தாய்மொழியை தமிழாகக் கொள்ளாமல் தெலுங்கை தாய்மொழியாகக் கொண்ட மணவாள்ளு.

இவர்களுக்கு நடுவில் திருநெல்வேலி பக்கம் அம்பாசமுத்திரத்தில் இருந்து வந்திருக்கும் வீரதீர பராக்ரமன்தான் கதிர்.

tamilebooks.net

தினமும் இண்ட்டர்வியூவாய் அட்டெண்ட் பண்ணு வதுதான் இப்போதைக்கு வேலை. மிச்ச நேரத்தில் நண்பர்களுக்காக சமைத்து வைப்பது. அவர்கள் துணிக்கு இஸ்திரி போடுவது, அவர்கள் குடித்துவிட்டு போட்ட சிகரெட்டைக் கொண்டு திருட்டு தம் அடிப்பது என்பதெல்லாம் எக்ஸெக்ட்ரா... எக்ஸெக்ட்ரா...

இதோ இப்பொழுது கூட ஒரு பிரபல நிறுவனத்தில் வேலைக்காக இண்ட்டர்வியூவிற்கு புறப்பட்டு விட்டான். எதிரில் வேலைக்காரி தனம் வந்தாள். ஒரே ஒருவேளை கூட்டி தண்ணீர் பிடித்து வைத்துவிட்டுச் செல்ல இவளுக்கு மாசம் நூத்தம்பது ரூபாய்!

வெள்ளையும் சொள்ளையுமான கதிரைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தாள்.

"சிரிக்காதே தனம்... தினம் இப்படி சிரிக்கறதே உனக்கு வழக்கமாப் போச்சு..." -கதிரும் முணங்கினான்.

"சிரிக்காம என்னத்த பண்ண...? நீயும் தினம் தினம் இப்படி சலவை பண்ணின பட்டுத் துணியாட்டம் தான் போறே. ஆனா எவனும் உன்னை சீந்த மாட்டேங் கறானே..."

"அதுக்கென்ன பண்றது. எல்லா இடத்துலையும் காசு வேலை செய்யுது. திறமையை யார் பார்க்கரா?"

"தெரியுதுல்ல... அப்பால எதுக்கு நம்பிகிட்டு போறே... பேசாம வேற ஏதாவது தொழில் பண்ணலாம்ல?"

"என்ன பண்ணச் சொல்றே...? செரைக்கறதா இருந்தா கூட ஐநூறு ரூபா அறுநூறு ரூவாய்க்கு சீப்பு கண்ணாடி சோப்பு பிளேடு வாங்கணும். நான் எங்கே போவேன் அதுக்கு...?"

-கதிர் அவளிடம் வருத்த முழக்கம் புரிந்துவிட்டு நடக்கத் தொடங்கினான்.

tamilebooks.net

தன் வீட்டு வாசலில் ஒரு பிரம்பு நாற்காலியை போட்டுக் கொண்டு அதில் அமர்ந்தபடி பேப்பர் படித்துக் கொண்டிருந்த அருணாசலம் என்பவர் கதிரின் முழக்கத்தைக் கேட்டு பேப்பரைப் படித்தபடி திரும்பிப் பார்த்தார். என்ன நினைத்தாரோ, அவனைக் கூப்பிட்டார்.

"ஹலோ தம்பி... இப்படி கொஞ்சம் வாங்க!"

அவனும் நெருங்கினான்: "என்ன சார்?"

"உங்க பேர்தானே கதிர்?"

"ஆமாம் சார். உங்களுக்கு என்னைத் தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கேன். தனம் உங்க மூணு பேரையும் பத்தி அடிக்கடி சொலவா... குறிப்பா உங்களைப் பத்தி நிறையவே சொல்லியிருக்கா."

"அப்படியா?"

"ஆமாம்... டெய்லி இப்படி பளிச்சின்னு இண்ட்டர் வியூக்கு போறீங்களே -ஒருத்தர் கூடவா கன்ஸிடர் பண்ணலை?"

"பண்ணியிருந்தால் நான் ஏன் சார் இப்படி அலையப் போறேன்?" -செத்த குரலில் திருப்பிக் கேட்டான் கதிர்.

அவர் உடனே அவனை தீவிரமாய் பார்த்தார்.

"உங்களைப் பார்த்தா எனக்கு பரிதாபமா இருக்கு. நான் உங்களுக்கு ஒரு உதவி செய்யறேன். நிச்சயமா இந்த முறை வேலை கிடைச்சிடும் உங்களுக்கு..." -என்று உடனேயே ஆதரவாகவும் பேசினார்.

"ரொம்ப தேங்க்ஸ் சார்... ஏதாவது சிபாரிசுக் கடிதம் தரப் போறீங்களா?"

"அதெல்லாம் எதுக்கு... அதோட அதை எல்லாம் தரும் அளவிற்கு நான் பெரியவன். இது வேற விஷயம்."

tamilebooks.net

"வேற விஷயமா? என்ன சார் அது?"

"சொல்றேன். அதுக்கு முந்தி ஒரு கேள்வி. நீங்க எந்த கிழமை பிறந்தீங்கன்னு ஞாபகம் இருக்கா?"

"என்ன சார் கேள்வி இது. வெள்ளிக்கிழமை பொறந்த வன் சார் நான். நல்லாத் தெரியும் சார். எதுக்கு சார் இதை எல்லாம் கேக்கறீங்க?"

"ரொம்ப நல்லதாப் போச்சு. உள்ற வாங்க..." -அவனை உள்ளே அழைத்தார். அவனும் உள்ளே சென்றான்.

வீட்டின் உள் பாகம் கோவில் போல இருந்தது. சுவரிலும் பெரிதாய் ஒரு சாமியாரின் படம். இடுப்பில் ஒரு கோவணத்துடன் ரமண மகரிஷியைப் போல நின்ற நிலையில் கையைக் காட்டியபடி அருளிக் கொண்டிருந் தார். அவர் காலிலும் உடம்பிலும் பெரிய செப்பு வளையங் கள்! அந்த படத்திற்கு பெரிதாக மாலையும் போடப்பட் டிருந்தது. ஊதுபத்தியும், தசாங்கமும் ஊட்டி மலைமேகம் போல உள்ளே வாசத்தோடு சுற்றி வந்து கொண்டிருந்தன.

அந்த பக்தி பூர்வமான சூழ்நிலையே அவனுக்கு ஒரு புதிய தெம்பைத் தருகிற மாதிரி இருந்தது.

"யார் சார் இந்த சாமியார்?" -பரவசத்தோடு கேட்டான்.

"இவரா... இவர் பேர் பொட்டுசாமி. ரொம்ப சக்தி வாய்ந்த சாமியார் இவர்..."

அடுத்த நொடியே ஒரு சின்னச் சிரிப்பு அவன் உதட்டில் தவழத் தொடங்கியது.

"ஏன் சிரிக்கறீங்க?"

"இல்ல... இந்த சாமியாருங்கல்லாம் ஏன் இப்படி வினோதமாவே பேர் வெச்சுக்கறாங்கன்னு தெரியலை. அதான் அதை நினைச்சு சிரிச்சுட்டேன்..."

tamilebooks.net

"அப்டியா... பேரை வெச்சு காலத்தைச் சொல்லலாம். அது தெரியுமா உங்களுக்கு?"

"பேரை வெச்சு காலத்தையா...? எப்படி?"

"ஆமாம்.. 1950க்கு முந்தி வரையிலும் தாத்தா பேர்தான் பேரனுக்கு. அதாவது ஒரு குடும்பத்துல ராமசாமின்னு ஒருத்தர் இருந்தா வரிசையா நாலு ராமசாமி வந்துடுவாங்க. இது ஒரு காலம்.

அப்புறமா சுதந்திர போராட்ட காலத்துல தலைவர்கள் பேரை தன் மக்களுக்கு வைக்கறது... உதாரணமாக காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ் இப்படி....

அடுத்து கொஞ்சம் மாடர்னா, அதாவது 70கள்ல ரமேஷ், சுரேஷ், மோகன், நாதன்னு ஒரு ரவுண்ட். இப்ப கௌசிக், ஆகாஷ், விகாஷ், பிரசன்னா, இப்படி... பேரும் காலமும் எப்பவும் தொடர்போடதான் இருக்கும்."

"ரொம்ப வித்யாசமான ஆராய்ச்சி சார் உங்களுக்கு. எனிவே எனக்கு இண்டட்டர்வியூக்கு டயமாயிகிட்டு இருக்கு..."

"ஓ.. அ'யம் சாரி. இருங்க வரேன்" –அவர் ஹாலில் அவனை விட்டு விட்டு உள்ளே சென்றார். அடுத்த நிமி டமே திரும்பி வந்தவரின் கையில் ஒரு வைர மோதிரம்!

"கைய நீட்டுங்க..."

"என்ன சார் இது?"

"இது பொட்டுசாமி ஆசிர்வாதம் பண்ணித் தந்திருக்கற வைரமோதிரம்."

"வைரமோதிரமா...?!"

"ஆமாம். இதை போட்டுகிட்டு இண்டட்டர்வியூவுக்கு போங்க. உங்களுக்கு வேலை உறுதி!"

tamilebooks.net

–அவர் பதிலோடு கையில் அந்த மோதிரத்தையும் மாட்டிவிட்டார்.

கதிருக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

"சார்... இந்த வைர மோதிரத்தைப் போய் எனக்கு..," –தடுமாறினான்.

"வீதியில போய்கிட்டிருந்த ஒரு நபரைக் கூப்பிட்டு யாராவது விலை உயர்ந்த வைரமோதிரத்தை மாட்டி விடுவாங்களான்னு தானே யோசிக்கிறீங்க?"

"அதுமட்டுமில்ல சார்... இது எப்படி சார் இண்ட்டர் வியூவில் எனக்கு வேலை வாங்கித் தரும்? வைர மோதிரம் லாம் போட்ருக்கே. பெரிய கைபோல இருக்குன்னு இண்ட்டர்வியூ பண்றவரை டிஸ்கரேஜ்தான சார் பண்ணும்?" அவரை மடக்கினான்.

"அப்படின்னா இண்ட்டர்வியூவும்போது மட்டும் கழட்டி பாக்கெட்டுல போட்டுக்கங்க. என்ன இப்போ?"

"சார்ர்ர்..."

"என்ன தம்பி...?"

"இதோ விலை எவ்வளவு சார் இருக்கும்?"

"என்ன... ஒரு லட்சத்தி பத்தாயிரம் இருக்கும். முப்பது சென்ட் வைரம் இது. சென்ட் வைரம் இன்னிக்கு நாலாயிரத்துல இருந்து நாற்பதாயிரம்லாம் விக்குது."

"நிஜமாவா?"

"சரி பொய்யின்னே வெச்சுக்குங்க. இது ஒண்ணுமே இல்லை. வெறும் கண்ணாடின்னு கூட நினைச்சுக்குங்க. கிளம்புங்க– டயமாகுதுல்ல?"

–அவர் தோளில் கை வைத்து மெல்லத் தள்ளியும் விட்டார்.

tamilebooks.net

"அது இல்ல சார்... லட்சத்தி பத்தாயிரம் ரூவா மோதிரத்தை என்னை நம்பி..."

"நான் என்ன இதை உங்களுக்கேவா தரேன். வீட்ல பீரோவுல தூங்கிக்கிட்டிருக்கற மோதிரத்தை 'பயன்படட்டுமே'ன்னு தரேன். அவ்வளவுதான். இண்ட்டர்வியூ முடிஞ்சு வந்ததும் திரும்பித் தந்துடப் போறீங்க... அவ்வளவுதானே?"

–அவர் சர்வ சாதாரணமாக ஏதோ குடிப்பதற்காக ஒரு டம்ளர் தண்ணீர் தந்த பாவனையோடு பேசினார். அதே சமயம் உள்ளிருந்த ஒரு இளம் பெண் எட்டிப்பார்த்தாள்.

நிலாவுக்கு கண்ணும், மூக்கும், உதடும் வைத்துப் பார்த்த மாதிரி அப்படி ஒரு அழகு.

"வா வசந்தி... தம்பி யார் தெரியும்ல?"

–அவர் கேட்க அந்த பெண் தலையாட்டினாள்.

"இவங்க...?"

"என் பொண்ணு வசந்தி."

"அப்படியா? ஹலோ..."

"இந்த தெருவுலையே இருக்கீங்க. பாத்ததில்லையா?"

"இல்லை. இப்பதான் பார்க்கறேன்."

"அப்படியா... வசந்தி ரொம்ப வெட்கப்படற டைப். அவ்வளவா வெளிய வரவே மாட்டா... சரி சரி நீங்க இண்ட்டர்வியூ அட்டெண்ட் பண்ணிட்டு நல்ல சேதியோடு வாங்க பார்ப்போம்..."

–அருணாசலம் துரத்தினார். கடிகாரமும் மணி ஒன்பதரை என்கிற செய்தியோடு டணங் என்றது. மேற்கொண்டு எதையோ பேச வாயெடுத்தவன் நேரம் கருதி மலங்க

tamilebooks.net

*மலங்க அவரையும் மோதிரத்தையும் மாறி மாறி பார்த்த படி புறப்பட்டான்.*

## 2

இந்தியாவில் இமயமலைச் சாரலில் பனி நதிகள் பல இருக்கின்றன. அவைகளுக்கு சில பெயர்கள். இவற்றில் ஒன்று 'துளசி' நதி. இதன் ஓட்டமும் நீட்டமும் மிக அதிகம். இந்த நதிக்குள் தான் சாளக்ராமம் எனப்படும் ஒருவித கற்கள் கிடைக்கின்றன.

புதன்கிழமைகளில் பிறந்தவர்கள் இந்த சாளக்கிராமக் கற்களை கூடுதல் விலைக்கு வாங்கி இதற்கு நாமமிட்டு மஹாவிஷ்ணு என்று மனதார நம்பி வணங்கி வரவேண்டும்.

குறிப்பாக இதன் முன் ஹயக்ரீவ ஸ்தோத்திரத்தை தினமும் பாராயணம் செய்யவேண்டும். அப்படிச் செய்கின்றவர்களுக்கு நிச்சயம் மூன்றுவித நன்மைகள் ஏற்படும். மாணவர்களாயின் கணிதத்தில் முதல் நிலைக்கு வருவர், கலைஞர்களாயின் விருதுக்குரிய வெற்றிப் படைப்புக்களைத் தருவர்.

கற்களில் சாளக்ராமம் மந்திர ஒலியை டேப் நாடா போல் தன்னில் பதித்துக் கொண்டு அதை நமது உடலின் புதயந்திரச் சக்கர ஆதாரத்துக்கு பாசிடிவ் ரேங் பவராக திருப்பி அனுப்பும் வல்லமை உடையது. இதோடு ஒரு வைரக்கல்லும் சேரும்போது இந்தச் செயல்பாடு பல மடங்காகிறது.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா.*

*விக்டோரியா லைப்ரரி!*

tamilebooks.net

பெயர் பலகையே ஒரு மாதிரி இருந்தது. அடிக்கப்பட்ட பெயிண்ட் உதிர்ந்து, மரச்சட்டமும் பெயர்ந்து கவனிப்பார் இன்றிக் கிடந்தது. பலகையைக் கடந்து உள்ளே போனால் விஸ்தாரமான ஹால். லண்டனைச் சுற்றியுள்ள கிராமங் களில் இருக்கும் தேவாலயங்கள் இப்படித்தான் இருக்கும். தரைக்கும் கூரைக்கும் இடையில் எண்பது அடி உயரம் பக்கவாட்டில் சூரிய வெளிச்சம் ஊடுருவத் தோதாக மடக்கிச் சாத்தும் விதத்தில் கண்ணாடி ஜன்னல்கள். அந்தக் கண்ணாடியெல்லாம்கூட வெளிர்பச்சை நிறத்தில் சூரியக்கதிரைச் சற்று அழுக்காகித் தான் உள்ளே விட்டது.

வரிசைக்கு பதினாறு தூண்கள் என்று நான்கு வரிசை. ஒரு பத்து வருட பனைமரத் தண்டின் உயரம். அந்த தூண்களுக்கு கருந்தேக்கால் ஆன மர பீரோக்கள்.

ஒவ்வொரு பீரோவிலும் அடுக்கடுக்காய் புத்தகங்கள்! எந்த பீரோவில் எந்த மாதிரி புத்தகங்கள் உள்ளது என்பதை பீரோமுகப்பில் உள்ள குறிப்பு ஒன்று சொன்னது.

இந்த பீரோக்களுக்கு இடையே அமர்ந்து வாசிக்கத் தோதாக மிக நீளமான மேசைகளும் மேசையை ஒட்டி அந்த நாளைய பள்ளிக்கூடங்களில் வாத்யார்களுக்கு என்று போடப்பட்டிருக்கும் நாற்காலிகளும் கிடந்தன.

அவைகளுக்குக் கீழே அந்த இடத்தை ஒரு பள்ளிக்கூட மைதானம் போலக் கருதி விளையாடும் சுண்டெலிக் கூட்டம்!

சமயங்களில் படித்துக் கொண்டிருப்பவர்கள் கால்களில் கிடுகிடுவென்று ஏறித் தொடையைக் கடித்துவிடும் அளவு அதற்கு தைரியமும் இருந்தது.

இதனாலேயோ என்னவோ யாரும் அந்த லைப்ரரிக்கு வருவதேயில்லை. லைப்ரரி மையத்தில் ஒரு வெள்ளைக்கார பாதிரியாரின் படம். பின் அவரே கோட்டும் சூட்டும்

tamilebooks.net

போட்ட பல இந்தியவர்களோடு தோள் மேல் கைபோட்டு போஸ் கொடுத்தபடி இருந்தார். அவர்களில் ஒருவராக அமெரிக்கன் கிராப்போடு இருந்த ஒருவர் மட்டும் நெற்றியில் சந்தனப் பொட்டோடு மிக வித்யாசமாக, இருந்தார்.

போனால் போகிறது என்று இந்த லைப்ரரியை காலை யில் மட்டும் ஒரு முறை சவரி முத்து என்னும் கிழவன் வந்து கூட்டிவிட்டு போவான். அப்பொழுது எஸ்தர் என்பவள் மட்டும் வந்து பைபிள் வாசித்துவிட்டுப் போவாள்.

இன்றும் சவரிமுத்து விளக்குமாறும் கையுமாக லைப்ரரிக்குள் நுழைந்தான். எலிகளில் சில பீரோ மேலெல்லாம் கொட்டமடித்துக் கொண்டிருந்தன.

"கர்த்தரே... இதுங்களோட தொல்லைத் தாங்கலியே... ஒடுங்கடா நாயுங்களா..." –சலிப்பும் கோபமுமாக விளக்கு மாற்றை வீசி எறிந்தான்.

கீச்சுகீச்சு கீச்சு என்று அவை துள்ளிக் குதித்து ஓடி மறைந்தன. எரிச்சலாக வந்தது சவரிமுத்துவுக்கு.

மெல்ல குனிந்து கூட்டத் தொடங்கினான். அங்கங்கே எலிகளால் கடித்துத் துப்பப்பட்ட காகிதத் துண்டுகள். "என்னா அநியாயம் பண்ணுதுங்கப்பா இதுங்க... இன்னிக்கு இந்த மாதிரி புத்தகமெல்லாம் எங்கையாச்சும் கிடைக்குமா? ஃபாதராண்ட சொல்லணும். 'வெச்சுகிட்டா நல்லா வெச்சுக்குங்க. இல்லாட்டி யார்கிட்டையாவது கொடுத்துடுங்க'ன்னு..."

–முனங்கிக் கொண்டே கூட்டி முடித்தான். வெளியே வந்தான். ஓதிய மரங்கள் நிழலைப் புரட்டிக் கொண்டிருந் தன. மெத்து மெத்து என்று மர இலைகளும் உதிர்ந்து கிடந்தன.



tamilebooks.net

வதக்கு வதக்கு என்று அதன்மேல் நடந்தான். இடையில் சர்ச்சுக்கு போகும்போகும் சிமெண்ட் ஸ்லாபில் போடப் பட்ட பாதை குறுக்கிட்டது. அதன்மேல் ஃபாதர் கேபிரி யேல் நடந்துபோய்க் கொண்டிருந்தார்.

சவரிமுத்துவைப் பார்த்தவர் சற்று தேங்கினார்.

"ஸ்தோத்திரம் ஃபாதர்!"

"ஆசீர்வாதம். சவரிமுத்து -அப்புறமா வந்து என்னைப் பார்..."

"சரி ஃபாதர் -ஒரு விஷயம்."

"என்ன சவரிமுத்து?"

"யாருமே வராத இந்த லைப்ரரியை நாம இன்னும் வெச்சுக்கத்தான் வேணுமா ஃபாதர்!"

"நீ என்ன சொல்ல வர்றே...? சுருக்கமா சொல்லு."

"எலிங்க தொல்லை தாங்கலை. புத்தகமெல்லாம் அந்துப் பூச்சியும் சிலந்தியுமா இருக்கு. யாருக்காவது கொடுத்துட லாமே..."

"நீயும் அடிக்கடி இதைப்பத்தி பேசறே. நானும் ஒரு முடிவுக்கு வந்து லண்டன் திருச்சபைக்கு எழுதிப்போட் டேன். அவங்ககிட்ட இருந்தும் பதில் வந்தாச்சு. புத்தகங் களை ஏலம் விட்டு முடிச்சுட்டு லைப்ரரி ஹாலை பிரேயர் ஹாலா மாத்தறதா முடிவு பண்ணியிருக்கோம்."

"சந்தோஷம் ஃபாதர். ரொம்ப சந்தோஷம்!"

"நாளைக்கு பேப்பர்ல விளம்பரம் கூட வரப்போகுது!"

சிட்டி பஸ்ஸை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கியிருந் தான் கதிர்.

tamilebooks.net

கையில் அந்த வைர மோதிரம்! அடிக்கடி அதை பெருமிதம் பொங்கப் பார்த்தான். லேசாக மழை பெய்திருந்ததில் சாலையில் அங்கங்கே மழைநீர். அதை கலைத்துவிட்டபடி பறக்கும் ஆட்டோக்கள் அவன் வெள்ளைப் பேண்ட்டை விட்டேனா பார் என்கிற மாதிரி மிரட்டிக் கொண்டிருந்தன.

இண்ட்டர்வியூ நடைபெறும் ஆபீஸ் சற்று தூரத்தில் இருந்தது. அதை அடைவதற்குள் அழுக்காகி விடுவோமோ என்று அச்சமாகக்கூட இருந்தது.

சாலையில் அவ்வளவு மேடு பள்ளம்!

ஒரு இடத்தைத் தாண்டிக் குதிக்கும்போது படகுக்கார் ஒன்று உரசிக் கொண்டு தாண்டிப் போனது. போகிற போக்கில் பச்சக் என்றும் மழைநீரை வாரித் தெளித்து விட்டுத்தான் போனது.

தேவுடா...! வெள்ளைப் பேண்ட்டின் சரிபாதி பாகம் செம்பழுப்புப் புள்ளிகளால் நிரம்பி விட்டன.

"ஏய்ய்...!" கோபத்தில் கத்தி விட்டான் கதிர்.

கடந்து சென்ற காரும் நின்றது. பதட்டத்துடன் காரில் இருந்து ஒரு பெண் இறங்கினாள். அதிசயம்- புடவை கட்டியிருந்தாள்! -தலைவாரி பூ பொட்டு என்று குடும்ப லட்சணமாய் மின்னினாள். "அ'யாம் வெரி சாரி.." -என்றபடி அவனருகில் வந்தாள். "புடலங்கா... பார்த்தீங்களா டிரஸ்ஸை... இதோட எப்படி....?" -கையை உதறிக் கொண்டு பற்களைக் கடித்தான். உடனே அவன் பேண்ட்டை பார்த்து அவளும் கையை உதறிக்கொண்டாள். "இஃப்யூ டோண்ட் மைன்ட் என்கூட வாங்க ஒரு நல்ல பேண்ட் வாங்கித் தரேன். ப்ளீஸ்.." என்று குழையவும் செய்தாள்.

tamilebooks.net

"அட என்ன மேடம் நீங்க. இன்னும் பத்து நிமிஷத்துல நான் ஒரு இண்ட்டர்வியூ அட்டெண்ட் பண்ணனும். இப்படி பண்ணிட்டீங்களே."

"நான் என்ன வேணும்னா பண்ணினேன். நான் வரும்போது நீங்களும் வந்துட்டீங்க."

"யார் வந்தாங்கறதா இப்ப கேள்வி... இப்ப என்னை சிக்கல்ல கொண்டு வந்து நிறுத்திட்டீங்களே..."

"உங்களுக்கு இண்ட்டர்வியூ எங்கே?"

"கேட்டு என்ன பண்ணப்போறீங்க. திரும்பவும் சாரி சொல்வீங்க. யாருக்கு வேணும் உங்க சாரி..."

"ப்ளீஸ். கோவிசுக்காம உங்களுக்கு இண்ட்டர்வியூ எங்கன்னு சொல்லுங்க. நான் என் அப்பாகிட்ட சொல்லி அவங்களோட பேசச் சொல்றேன்.

"என்ன மேடம் நீங்க... உங்கப்பா என்ன பெரிய கவர்னரா- அவர் சொன்னா கேக்கறதுக்கு?" -சீறினான் கதிர்.

"கவர்னர்லாம் இல்ல... ஆனா அப்பா சொன்னா கன்சிடர் பண்ணுவாங்கன்னு நம்பறேன்."

"அதெல்லாம் யார் சொன்னாலும் கேக்க மாட்டாங்க. நான் இப்படியே போறேன். குறைந்த பட்சம் டயத்துக் காவது போய் சேர்றேன். ஒண்ணு மட்டும் நிச்சயம். எனக்கு மட்டும் இன்னிக்கு வேலை கிடைக்கலான்னா அதுக்கு நீங்கதான் காரணம். இந்த பாவம் உங்களைச் சும்மா விடாது..."

-சொன்ன வேகத்தில் திரும்பி நடப்பது போல ஓட ஆரம்பித்தான். அந்த இக்கட்டிலும் அவன் நடப்பதைப் பார்த்து அவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. திரும்பி நடந்து காரில் ஏறியவள் காரை சற்று தூரம் சென்று திருப்பினாள்.

tamilebooks.net

ஓடிக்கொண்டிருக்கும் அவனை பின்தொடர ஆரம்பித்தாள். அவன் 'அஷோக் கம்ப்யூட்டர்ஸ்' என்று பெயர் பலகை தொங்கும் ஒரு பில்டிங்குக்குள் நுழைந்து கொண்டிருந்தான். காரில் இருந்தபடியே அதைப் பார்த்தவள் முகத்தில் ஒரு சின்னப் பரவசம்!

இண்டர்வியூ ஹாலில் ஒரு பட்டாளமே உட்கார்ந்திருந்தது. மிடுக்கான டை கட்டிக்கொண்டும். ஸ்ப்ரே வாசத்தோடும் கும்மென்று அதில் சிலர்.

கதிரைப் பார்த்த ஒரு ஜோதிகா ரகசியமாய் சிரித்தாள்.

ஒவ்வொருவரையும் பர்சனல் மேனேஜர் அறைக்கு அனுப்பிக் கொண்டிருந்த அட்டெண்டர் கூட கதிரை ஒரு மாதிரி பார்த்தான். கண்ணாலேயே இப்படியா இண்டர்வியூக்கு வருவாங்க?' என்று கேட்காமல் கேட்டான். கதிருக்கு கூசியது. கர்ச்சீப்பை எடுத்து சேற்றுப் புள்ளிகளை முடிந்தவரை துடைத்துவிட்டு கொணடான். பக்கத்தில் குடிப்பதற்காக வாட்டர் கூலர் வைத்திருந்தார்கள். அதில் கர்ச்சிப்பை நனைத்து உள்ளே அழைக்கப்படும் வரை துடைத்துக் கொண்டே இருந்தான். அந்த வெள்ளைப் பேண்ட் துவண்டு யானைக் கால் வட்டம் போல லொட லொடவென்றாகிவிட்டது.

அழுகை வரும் போலக்கூடத் தோன்றியது. அடக்கிக் கொண்டான். கைகளை சொடக்கு போட்டு உதறினான். அப்பொழுது மீண்டும் அந்த வைர மோதிரத்தைப் பார்த்தான். சுமாரான அளவில் கோபம்கூட வந்தது.

'இதை போட்டுகிட்டு போனா வெற்றி நிச்சயமாக்கும்... அருணாசலம்... கவுத்திட்டீங்களே சார்'-என்று மனசில் அவருக்கு தந்தி அடித்தான். பின் வெகுவேகமாய் அதைக் கழற்றி சட்டைப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

tamilebooks.net

"மிஸ்டர் கதிர்!" - அட்டெண்டர் கூவினான். "யெஸ்..." -என்று எழுந்து லேசாக உடம்பு நடுங்க உள்ளே சென்றான்.

உள்ளே பர்சனல் மேனேஜர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"சிட் டவுன்..." -அவனும் உட்கார்ந்தான்.

"M.Sc., Computer Science ஆ...?"- கேட்டபடி அவன் ஃபைலைத் திறந்தார்.

"ஆமாம் சார்..."

'வழியில யார் கூடையாவது சண்டைப் போட்டீங் களோ?" - நிமிராமல் கேள்வி மட்டும் கேட்டார்.

"நோ சார்.. ஒ கார் வந்து சேத்தை வாரி இறைச்சிடுச்சு சார்...அதான்!"

"அப்ப அப்படியே திரும்பி வீட்டுக்குப் போயிருக்க வேண்டியதுதானே... இப்படியா சேறும் சகதியுமா வருவீங்க...?"

"அது வந்து சார்..."

"எது வந்து"

"இது எதிர்பாராம நடந்த ஒண்ணு. இதுக்காக இண்ட்டர்வியூவை நான் விட்டுட்டா அப்புறம் இந்த வேலை...?"

"இப்பமட்டும் இந்த வேலை உங்களுக்கு கிடைச்சிடும்னு நம்பறீங்களா?" -அவர் கொக்கி போட்டார்.

"அப்படின்னா டிரெஸ்ஸை வெச்சுத்தான் நீங்க ஒரு நபரை மதிப்பீங்களா...?"

"ஆள்பாதி... ஆடைபாதி... கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"சார்..."

tamilebooks.net

"நாளைக்கு ஒரு ஆர்டர் கேன்வாஸ் பண்ணப்போகும் போது இப்படி ஆகுதுன்னு வையுங்க. ஆர்டர் என்ன ஆகும்?"

"இதெல்லாம் நம்ம கைலையா சார் இருக்கு?"

"யெஸ்... ஒரு ஆட்டோவுல வந்திருந்தா இப்படி ஆகியிருக்காதுல்ல?"

"அதுக்கு என்கிட்ட வ...ச...தி... இல்லை சார்!"

"ஸோ.. நீங்க மிடில் கிளாஸ்கூட இல்லை. வெரி லோயர் கிளாஸ்னு சொல்லுங்க."

"ஆனா சப்ஜெக்ட் எல்லாம் ஃபர்ஸ்ட் கிளாஸ் சார்."

"கேட்ட கேள்விக்குதான் பதில் சொல்லணும்."

"சாரி சார்..."

"சரி நீங்க போகலாம்..."

–அவர் சொன்ன பிறகும் எழுந்திருக்காமல் அவரை வெறித்தான்.

"உங்களத்தான்.. நீங்க போகலாம் மிஸ்டர் கதிர்." –அவர் குரலில் அதட்டல் சேர்ந்தது. அவனும் மிரண்டு அரை மனதோடு எழுந்தான். தலையைத் தொங்கப்போட்டபடி வெளியே வந்தான். அடுத்து சென்ற அந்த ஜோதிகா ஒரு வெட்டுச் சிரிப்பு சிரித்தபடி உள்ளே சென்றாள்.

கதிரின் கண்களை கண்ணீர் மூடிவிட்டது. சமாளித்துக் கொண்டு பாக்கெட்டில் கர்ச்சீஃபுக்காக கையைவிட்டான்.

வைரமோதிரம் நெருடியது. மோதிரமா இது.. துரதிருஷ்டம் பிடித்தது... மனசு சபித்தது. அருணாசலத்தையும் ஒரு மரத்தில் கட்டி வைத்து கற்பனையிலேயே சவுக்கால் அடித்தான்.

tamilebooks.net

'ரோட்ல போய்ட்டுருந்தவனைக் கூப்பிட்டு ஆசையைக் கிளப்பிவிட்டு இப்ப புலம்ப விட்டுட்டியேய்யா- நல்லா வாங்கிக்க... சுடீர்... சுடீர்... சுடீர்...!'

"கால்களைக் கழுவிக் கொண்டு பொட்டுச்சாமி புகைப்படம் முன்னால் உள்ள பலகையில் தியானத்தில் அமரப்போனார் அருணாசலம்.

பஸ்ஸர் ஒலி திரும்பிப் பார்க்க வைத்தது-

வாயிற்படிக்கட்டில் கதிர்.

"வாங்க தம்பி... கங்ராஜுலேஷன்ஸ்!" -என்றபடி சிரித்தார்.

"என்ன சார் கிண்டலா?" -கொதிப்போடு உள்ளே நுழைந்தான்.

"என்ன தம்பி... அதான் வேலை கிடைச்சிடிச்சுல்ல?"

"ஆமாம் சார்... உங்களை இனிமே திட்டித் தீக்கறது தான் இனிமே என் வேலை. ஏன் சார் இப்படி வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிறீங்க?"

"என்ன தம்பி. எதுக்காக என்மேல் உங்களுக்கு இவ்வளவு கோபம்?"

"பின்ன... நானே அறைவாங்காத குறையா திரும்பி வந்திருக்கேன். உள்ளே நுழையும் போதே வேலை கிடைச்சுட்ட மாதிரி கங்கிராஜுலேஷன்னா என்ன சார் அர்த்தம்?"

"அப்ப வேலை கிடைக்கலையா?"

"பிடிங்க சார் உங்க மோதிரத்தை... வேலையாம் வேலை. கிடைச்சிருந்தா இப்படியா உங்க முன்னால பேசிக்கிட்டிருப்பேன்."

tamilebooks.net

“அப்ப உங்க அட்ரசுக்கு ஒரு அப்பாய்ன்ட்மெண்ட் ஆர்டர் வந்ததே அது என்ன?”

“என்னது? அப்பாய்ன்ட்மெண்ட் ஆர்டரா... எனக்கா?”

“ஆமாம். யாரோ ஒருத்தர் மிஸ்டர் கதிர்வீடு எதுன்னு கேட்டுகிட்டு வந்தார். நான்தான் வீட்டை காட்டினேன். அப்படியே எதுக்குன்னும் கேட்டேன். ‘அஷோக் கம்ப்யூட்டர்ஸ்ல இருந்து வறோம். அவர்கிட்ட அப்பாய்ன்ட் மென்ட் ஆர்டரை தரணும்’னாங்க. சரிதான் இண்ட்டர் வியூ முடிஞ்சு திரும்பிட்டீங்க போல பின்னாலயே ஆர்டர் வந்துருக்காட்டம்னு நான் நினைச்சுக்கிட்டிருக்கேன்.”

அவர் பேசி முடித்த நொடி நாலு கால் பாய்ச்சலில் அங்கிருந்து ஓடினான் கதிர். வீட்டுக்குள் நுழைந்தவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. டேபிள் மேல் ஆர்டர் உள்ள கவர். என்வலப்பில் அஷோக் கம்ப்யூட்டர்ஸ் என்கிற பெயர்.

கைகள் படபடக்க கவரை எடுத்துத் திறந்து பார்த்தவனுக்கு நெஞ்சையடைத்தது. எடுத்த எடுப்பிலேயே மேனேஜராக துவக்கம். சம்பளம் ஆண்டுக்கு ஐந்து லட்சத்து சில்லரை.

ஓ!

குபிரென்று வியர்த்தது.

குதூகலம் பீறிட்டது.

‘எல்லாம் வைரம் காட்டிய வேலையா? இப்படிக்கூட நடக்குமா?’

ஹேய்ய்ய்ய்...!” –தன்னைமறந்து கத்தியபடி ஒரு எகிறு எகிறினான் கதிர்.

சப்தம் அருணாசலம் காதில்கூட விழுந்தது. சிரித்துக் கொண்டார்.

tamilebooks.net

# 3

நவரத்தினங்களில் வைரத்தைப்போலவே சிறப்பினை உடையது முத்து. இந்த இரண்டுமே மிகச் சிறந்த உயிர்கள். தாவர வகையைச் சேர்ந்தது வைரம். ஒரு தாவரம் மரமாகி அது மண்ணில் மட்கி கரியாகி அந்த கரிதான் வைரமாகிறது. இவ்வளவும் காற்றுகூட புக முடியாத நிலத்துக்குள் நிகழும் ஒரு அற்புதமாகும். அதேபோல் காற்று புகமுடியாத நீருக்குள் நிகழும் அற்புதத்தால் உருவாவதுதான் முத்து.

கிரகமாகிய சந்திரனின் கிரணங்களோடும் அலையோடும் இதன் கிரண வீச்சும் அலையும் இயைந்து போவதால் இதை சந்திரனின் பிரதிநிதியாககூட சொல்லலாம்.

எவர் உடலில் சந்திர சக்கரம் சரியான சுழற்சியில் இல்லையோ அந்த குறைபாட்டை முத்து நீக்கித்தரும். வைரமும் முத்தும் சேர்ந்தால் செயல் வீரமும் அதில் இனிமையும் மிக இருக்கும்.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா.*

*மறுநாள் பேப்பரில் விளம்பரம் வெளியாகியிருந்தது. திருச்சபைக்கு சொந்தமான விக்டோரியா லாரன்ஸ் நூலகத்து பழைய நூல்கள் வரும் ஞாயிறன்று ஏலம் விடப்படும். நேரில் வந்து ஏலம் கோரலாம். புத்தகங்களின் தன்மையை பொறுத்து ஏலம் நிர்ணயிக்கப்படும்.*

*–விளம்பரத்தைப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான் ஸ்ரீவத்சன். நேராக படுக்கை அறையில் எப்பொழுது எமன் வருவான் என்பது போல் படுத்த படுக்கையில் இருக்கும் அவன் அப்பா சேஷாத்ரி எதிரில் போய் நின்றான்.*

*“அப்பா...”*

tamilebooks.net

"என்னப்பா?"

"இன்னிக்கு பேப்பர்ல ஒரு விளம்பரம் வந்துருக்குப்பா..."

"என்ன விளம்பரம்?"

"விக்டோரியா லாரன்ஸ் லைப்ரரில புத்தங்களை ஏலம் விடப் போறாளாம்."

"அப்படியா?"

"இந்த லைப்ரரிக்கு தானே தாத்தா தினமும் போவார்னு நீ சொல்வே...?"

"ஆமாம்... அதுக்கென்ன?"

"தாத்தா எழுதின புத்தகம்கூட இந்த லைப்ரரிலதானே இருக்கு?"

"யாருக்கு தெரியும்...? அது அங்கதான் இருக்கோ இல்லை வீணாப் போயிடுத்தோ...?"

'நான் வேணும்னாபோய் பாக்கட்டுமா?"

"நான் தேடியே கிடைக்கலை. அந்த லைப்ரரி ஒரு சமுத்திரம். தேடறது கஷ்டம்பா..."

"ஏலம் போய்ட்டா சுத்தமா ஒண்ணும் பண்ண முடியாதே..."

"அதுக்கு என்ன பண்ணச் சொல்றே. நமக்கு அதிர்ட மில்லைன்னு விடவேண்டியதுதான்." –சேஷாத்ரி முக்கல் முனங்களோடு சொல்லி முடித்தார். ஸ்ரீவத்ஸன் வெளியில் வந்தான். தீவிரமாக யோசித்தான். பின் மாடி ஏறினான்.

மாடியில் லாஃப்டில் பழைய தட்டு முட்டுச் சாமான் கள். ஒரு நாற்காலியை தூக்கிப் போட்டு பரண்மேல் ஏறினான். லாஃப்டில் வசதியாக உட்கார்ந்து கொண்டு அங்கு கிடந்த ஒரு ட்ரங்குப் பெட்டியைத் திறந்தான்.

tamilebooks.net

நெஞ்சையடைக்கிற மாதிரி புழுதி பறந்தது; நாக்கு கரித்தது-மூக்கு சிமிண்டியது-நெஞ்சு கமறியது. பெட்டிக் குள் கண்ட கச்சடாக்கள். அதில் ஒரு டைரியும் இருந்தது. நீலவண்ண அட்டை மையத்தில் 1921 என்கிற மஞ்சள் மங்கல் எழுத்துக்கள்.

அதை எடுத்துக்கொண்டு கீழே குதித்தான்.

தனது மேஜையை தேடிச் சென்று ஏறி அமர்ந்து கொண்டு பக்கங்களைப் பிரித்தான்.

முதல் தேதியில் உள்ள விஷயத்தை அவன் இப்பொழுது படிப்பதோடு சேர்த்தால் இது மூன்றாவது முறை!

'இன்று புத்தாண்டு... திருவரங்கத்து ரங்கநாதனை சேவிக்கும் வாய்ப்பு கிட்டியது. அப்போது அவரது மேனிமேல் ஏகத்துக்கும் ரத்தினாபரணங்கள். பட்டரிடம் 'அதை சற்று அருகில் பார்க்க முடியுமா' எனக் கேட்டேன். பார்க்கமுடியாது. தோஷம் தாக்கும் என்றார். பிறகு நான் சொன்னேன்.

-நானொரு நவரத்தின ஆராய்ச்சியாளன். அதனாலேயே பார்க்க ஆசைப்படுவதாக சொன் னேன். அவரோ திருமஞ்சனத்தின்போது ஆபரணங் களை அகற்றுவோம். அப்போது பார்க்கலாம் இருந் தாலும் தர்ம கர்த்தாவின் அனுமதியும் வேண்டும் என்றார். பிறகு தர்மகார்த்தா அனுமதியுடன் அந்த ஆபரணங்களைப் பார்த்தேன். அரங்கனின் சன்னதியை சுக்ரனின் ஸ்தலமாக புராணங்கள் சொல்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு தோதாக ஆபரணங்களில் வைரத்தின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இந்த வைரக் கதிர்கள்தான் சேவிப்பவர்களின் மேனி மேல் பட்டு தேகச் சக்கரங்களில் சுழற்சியை சீர் செய்வதைப் புரிந்து

tamilebooks.net

கொண்டேன். அதில் ஒரு வைரம் 'லலாடம்' என்பதும் தெரிந்தது.

இது யோகம் தரும் ஸ்வைரம். குறிப்பாக ஒருவரது சரீரத்தில் எத்தனை வியாதி உபாதை இருந்தாலும், அதை இந்த லலாட யோக வைரம் போக்கிவிடும். உள்ளங்கையில் அந்த வைரத்தை மூடிக்கொண்டு சுக்ரனுக்கு உரிய காயத்ரியை 108 முறை சொன்னேன். அலுப்பும் களைப்புமான எனது தேகத்தில் ஒருவித சுறுசுறுப்பு அந்த நொடியே பரவியது. உண்மையில் லலாடம் மிக அற்புதமானது. வீட்டிற்கு ஒரு லலாடம் இருப்பது மிக நல்லது... இதை வாங்கி எல்லோராலும் வைத்துக் கொள்ள முடியாது. சிலருக்கு இது எதிர் விளைவை உருவாக்கிவிடும். எனவே அவர்கள் அரங்கனை வந்து தரிசித்தாலே இதன் ஒளிக்கதிரோடு அரங்கனின் அருட்கதிரும் பட்டு நிச்சயம் ஆரோக்யம் மிகும்.

இவைகளைப் பற்றி எல்லாம் நான் ஒரு புத்தகமாய் எழுதப் போகிறேன். அதற்கு 'நவரத்தின சாராவளி' என்று பெயரையும் தேர்வு செய்து வைத்திருக்கிறேன்.

அரங்கன் அருள் நிச்சயம் இந்த நவரத்தின சாராவளியை நான் எழுதிமுடிக்க ஒத்தாசிக்கும் என நம்புகிறேன்.'

-டைரிக்குறிப்பை படித்த ஸ்ரீவத்ஸனுக்குள் பொறி பறக்கத் தொடங்கியது.

புறப்பட்டுவிட்டான்!

கௌதமனும் பிரபுவும் கதிரையே வெறித்துக் கொண்டிருந்தனர். கதிர் குதித்துக் கொண்டிருந்தான்.

tamilebooks.net

நேற்றுவரை நண்பர்களுக்கு சேவகம் செய்து கொண்டிருந்தவன் இப்பொழுது 'மேனேஜர், மேனேஜர்' என்று சொல்லிச் சொல்லிக் குதித்தான்.

"ரொம்ப ஆடாதடா கதிர்... ஆர்டரை நல்லா பாரு. கதிர்னு வேற யாராவது கூட இருக்கலாம்ல?"

"போதுண்டா நக்கல். பொறாமைப் படாதீங்கடா. பெரிய மனசு இருந்தா வாழ்த்துங்க. இல்லாட்டி வாய மூடிகிட்டு சும்மா இருங்க."

"அது சரி... இந்த வேலை நிஜமா அந்த வைர மோதிரத்தாலதான் கிடைச்சிருக்கா?"

"ஆமாம்... அருணாசலம் சார் வெற்றிதான்னு சொல்லிக் கொடுத்தார். அதேமாதிரி வேலை கிடைச்சிடிச்சு. இத்தனைக்கும் இண்டர்வியூவுல ஆபிசர் கிழிச்சுக் கேப்பையை நட்டுட்டான். நொந்து போய் திரும்பி வந்தேன். இங்க வந்தா வீட்ல ஆர்டர். இது மிராகிள் இல்லாம வேற என்ன?"

"நம்ப முடியலையே...ஹைடெக் பார்ட்டி மாதிரியே பேசமாட்டேங்கறானே..."

"ஹைடெக்காவது லோடெக்காவது... கம்ப்யூட்டர் வாங்கற. அதுக்கே பூஜை போடறதில்லையா? அதை என்னான்னு சொல்வே- நம்பிக்கை சார்ந்த விஷயம் தானே அது?"

"அப்ப வைரம் தான் வேலைக்கு காரணமா?"

"சும்மா நோண்டாதே கௌதம்- சந்தேகமா இருந்தா அருணாசலம் சார்கிட்டே போய் பேசு!"

"டொக்... டொக்...!"

tamilebooks.net

கதவு தட்டப்படும் சப்தம்.

எழுந்து போய் திறந்தார் அருணாசலம்.

வாசலில் கௌதமன்-பிரபு!

"உள்ள வாங்க..."

-அவர்களும் உள் நுழைந்தனர். அவர் உட்காரச் சொல்லாமலே உட்கார்ந்தனர். பொட்டுச் சாமியின் படத்தைப் பார்த்தனர்.

"என்ன விஷயம்...?" அருணாசலம் பேச்சை ஆரம்பித்தார்.

"ஒரு வைர மோதிரத்தை கொடுத்து என் நண்பனுக்கு பெரிய ஜாலக் வேலையெல்லாம் காட்டினீங்கன்னு கேள்விப்பட்டேன்." -பிரபு இளமைத் திமிருடன் பேசத் தெரியாமல் பேசினான்.

"ஜாலக் வேலையா?"

"வேற அதை எப்படி சொல்றது? மோதிரம் போட்டுகினு போனேன். வேலை கிடைச்சிடிச்சுங்கறான். எப்படின்னே புரியலை."

"ஓஹோ! இப்ப உங்களுக்கு அந்த சந்தேகமா?"

"ஆமாம் சார்... எப்படி சார்.. எப்படி சார் ஒரு வைரம் வேலை வாங்கித் தரும்? அது என்ன எம்ப்ளாய்மென்ட் ஆபீசா இல்லை அப்பாய்ண்மென்ட் ஆர்டர் போட்ற ஆபீசரா... எப்படி சார்... எப்படி?"

"லலாடம் ஞானத்தையே தரும். வேலைதானா ஒரு பெரிய விஷயம்?" -அருணாசாலம் எப்போதும் போல சிரித்தார்.

tamilebooks.net

"லலாடம்னா...?"

"அது அந்த வைரத்தோட சக்தியை குறிக்கற பேர்."

"அதான் எப்படிங்கறேன்...?" -அருணாசலம் பதில் சொல்லாமல் டேபிளில் கிடந்த ரிமோட்டை எடுத்து பட்டனை அழுத்தினார். டீ.வி. ஓடத் தொடங்கியது.

"என்ன சார்... நாங்க கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாம டீ.வி.யை போடறீங்க...?"

-மீண்டும் சிரித்தார் அருணாசலம்.

'இந்த ரிமோட் டீ.வி.யை ஓடவிடுது. அதனால ஆட்ட பாட்டமெல்லாம் நம்ம கண்ணுக்குத் தெரியுது. இதே மாதிரிதான் லலாட வைரமும்..."

"அப்ப அந்த வைரமோதிரம் ஒரு ரிமோட் கண்ட்ரோலா?"

"ரிமோட் ஒரு சுண்டைக்கா... லலாடம் ஒரு அற்புதம்."

"எப்படி சார்... எப்படி? புரியலை."

"ரிமோட் எப்படி செயல்படுதுன்னு தெரியுமா?"

"தெரியாது.. ஆனா இதை தெரிஞ்சுக்க முடியும். அதுக்கு பின்னால விஞ்ஞானிகள், எலக்ட்ரானிக்ஸ் எஞ்ஜினியர்கள் இருக்காங்க. அவங்ககிட்ட கேட்டா சொல்வாங்க."

"இதைப்பத்தியும் தெரிஞ்சுக்க முடியும். இதுக்கு பின்னால ரிஷிகள், நவக்கிரக நாயகர்கள் இருக்காங்க."

"என்ன சொல்றீங்க நீங்க. வைரம் ஒரு காஸ்ட்லியான கரி. மின்னக்கூடியது. உப்பு புளி மாதிரி கிடைக்காது. வெரி வெரி ரேர் மெடீரியல். அதனால உலகத்துல இதுக்கு மதிப்பு அதிகம். அவ்வளவுதான். இதுக்குமேல இதுல என்ன இருக்கு?"

tamilebooks.net

"இது ரொம்ப மேலோட்டமான கருத்து தம்பீ. இதுக்கு மேல இதுல விஷயம் இருக்கு. அதை நீங்க தெரிஞ்கிட்டு ஆகப்போறது ஒண்ணுமில்லை. எப்படியோ உங்க நண்பனுக்கு வேலை கிடைச்சில்ல. விடுங்க."

"பாத்தீங்களா உங்களால பதில் சொல்லத் தெரியலை. நழுவறீங்க."

"ஆமாம் தம்பி. எனக்கு பதில் சொல்லத் தெரியலை. நான் நழுவறேன்."

-துளியும் பதட்டமின்றி அருணாசலம் சொன்னது கௌதமனையும், பிரபுவையும் என்னவோ செய்தது.

"என்ன சார் நீங்க... நாங்க கேக்கறது பார்த்து நீங்களே டெஸ்ட் பண்ணி தெரிஞ்சுக்குங்கன்னு எங்களுக்கும் அந்த வைர மோதிரத்தை கொடுப்பீங்கன்னு பார்த்தா பல்டி அடிச்சு துரத்தி விட்றீங்களே..."

"அப்ப அந்த வைரத்தை சோதிக்க நினைக்கறீங்களா?"

"புத்தி பூர்வமா சொன்னா அப்படித்தான். ஆனா உணர்ச்சிபூர்வமா சொல்லப்போனா அதனால எங்களுக்கும் எதாவது கிடைக்காதான்னு ஆசையா இருக்கு."

-கௌதமன் போட்டு உடைத்தான். அருணாசலம் திரும்ப சிரித்தார். "மனுஷா... மனுஷா..." என்றவர் எழுந்து சென்று மோதிரத்தை எடுத்து வந்தார்.

அவர் உள்ளங்கையில் அது மின்னியது.

அவர்கள் பார்வையும் அதில் விழுந்தது.

"இதை நான் உங்களுக்கு தரணும்னா ஒரு கண்டிஷன்..."

"என்ன சார்?"

"உங்கள்ல யாரும் சனிக்கிழமை பிறக்கலியே..."

tamilebooks.net

-அடுத்த நொடியே இருவரும் திருதிருனெ விழித்தனர்.

"என்ன முழிக்கிறீங்க?"

"இரண்டு பேருமே சனிக்கிழமைதான் சார் பிறந்தோம்."

"அப்ப இது உங்களுக்கு வேண்டாம். இது உங்களுக்கு பயன்படாது."

"என்ன சார் இது புதுக்கதை?"

"கதை இல்லை. நாள் நட்சத்திரம் கிழமைங்கறது உங்க உடம்புல இருக்கற பஞ்ச பூதங்களைப் பத்தியும் அவைகள் இயங்கற விதத்தையும் சொல்லுவது. சனிக்கிழமை பிறந்த உங்களுக்கு இரும்பு ரொம்ப தோதா இருக்கும். அடுத்து கெமிக்கல் சமாச்சாரங்கள். வைரம் எதிர் வேலை செய்யலாம்.

"எதிர் வேலைன்னா...?"

"சுருக்கமா சொல்றேன் -நல்லது நடக்காம போகலாம்."

"அப்படின்னா சனிக்கிழமை பிறந்தவன் வைரத்தையே தொடக்கூடாதா?"

"அப்படி இல்லை. சனிக்கிழமைங்கறது ஒரு பொது வான விஷயம். அன்னிக்கு சுக்ரன் உச்சத்தில் இருந்து அதுல ஒருத்தர் பிறந்தா அவங்களை வைரம் எதுவும் செய்யாது. இப்படி பலகாரணிகள் இருக்கு."

"எதுக்கும் எங்களுக்கும் கொடுங்களேன். என்ன தான் நடக்குதுன்னு பார்க்கறோம்."

"இதுக்குதான் நான் இதை யாருக்கும் கொடுக்காம வெச்சிருந்தேன். இப்ப ஒருத்தருக்கு கொடுக்கப்போய் மாட்டிக்கிட்டேன்."

"அப்படி எல்லாம் இல்லை சார். நாளைக்கே திருப்பிக் கொடுத்துட்றோம். ப்ளீஸ் சார்..."

tamilebooks.net

*"சரி- வெளிய இதை பத்தி பிரஸ்தாபிக்காதிங்க. இரண்டு பேரும் ஒரு நாள் ஒரு நாள்னு வெச்சிருந்துட்டு திருப்பிக் கொடுத்துடணும். என்ன?"*

*"சரி சார்... தேங்க்யூ சார்..."*

*"தம்பிகளா! ரொம்ப ஜாக்ரதையா வெச்சுக்கணும். இதை நான் ஆசைக்காக வாங்கி வெச்சிருக்கல. இது நான் கும்புட்ற இந்த சாமியார் எனக்கு ஆசீர்வாதம் பண்ணித் தந்தது. பலகாரணங்களை உத்தேசம் பண்ணித்தான் இதை நான் கதிர் தம்பிக்கே தந்தேன்."*

*-அவர் பதிலில் இனம்புரியாத ஒரு மர்மம் ஒளிந் திருந்தது. ஆனால் அதை புரிந்து கொள்ளும் நிலையில் அவர்கள் இரண்டு பேருமே இல்லை.*

*அவசர அவசரமாக கௌதம் அதை தன் மோதிர விரலில் மாட்டிக்கொண்டான்.*

*மனதுக்குள் அவன் தினம் விரட்டிக் கொண்டிருக்கும் அந்த பணக்காரப் பெண்ணான கவிதாவின் முகம் கண்ணடித்தது.*

## 4

**பொ**துவில் வைரங்களுக்கு தனித்தனியே பெயர் கிடையாது. அதில் தோஷமுள்ளது- இல்லாதது என்று இரு ரகங்கள் மட்டுமே உண்டு. இதை எல்லோராலும் கண்டறிய முடியாது. இது உருவாக்கும் விளைவுகளை வைத்து இதற்கு சிலர் பெயர் வைத்தார்கள். அந்த வகையில் பொட்டுச்சாமி என்பவர்தான் தனது லலாடம் திறக்க பேருதவி புரிந்த ஒரு வைரத்துக்கு லலாட வைரம் என்று பெயர் வைத்தார்.

tamilebooks.net

இதற்கு மதிப்பு போட்டால் நிச்சயம் நூறு கோடியைத் தொடும். இதை ஒரு புத்த பிட்சு வைத்திருந்தார். அவரிடம் இருந்து ஒரு திருடன் அதை அபகரித்தான். அவனை அந்த வைரம் படாதபாடு படுத்திவிட்டது. வைரம் தான் தனது கஷ்டங்களுக்கு காரணம் என்று அறிந்தவன் அதை பொட்டுச் சாமியிடம் தந்தானாம். இதன் பின்னே இப்படி ஒரு கதை உண்டு.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*விக்டோரியா லாரன்ஸ் லைப்ரரி!*

*அதனுள் நுழைந்திருந்தான் ஸ்ரீவத்ஸன்.*

*அதிசயமாக அன்று லைப்ரரியில் ஓரளவு கூட்டம். ரேக் ரேக்காக சிலர் புத்தகங்களை தேடிக்கொண்டிருந்தனர். ஸ்ரீவத்ஸனும் தன் தாத்தா எழுதிய 'நவரத்தின சாராவளி'யை தேடத் தொடங்கினான்.*

*அதுமட்டும் கிடைத்துவிட்டால் போதும். அதற்காக ஒரு வைர வியாபாரி எத்தனை ஆயிரம் வேண்டுமானாலும் தரத்தயாராக இருந்தார்.*

*ஒருநாள் அவர் வீடு தேடி வந்திருந்தார்.*

*"வணக்கம். என்பேர் சிவராமன். நான் ஒரு டைமண்ட் மெர்ச்சன்ட்!"*

*"சந்தோஷம் உங்களுக்கு என்ன வேணும்?"*

*"புரொபசர் ஸ்ரீவத்ஸாவை பாக்கணும்-பேசணும்னு வந்தேன்."*

*"அவர் காலமாகி வருஷமாச்சே..."*

*-ஸ்ரீவத்ஸனின் அப்பா சேஷாத்ரி சிவராமனுக்கு மெல்லிய அதிர்ச்சியை அளித்தார்.*

tamilebooks.net

"அப்படியா...?"

"உங்களுக்கு தெரியாதா?"

"தெரியாது... நான் மும்பைல இருக்கேன். அபூர்வமான, சில வைரங்களை வாங்கி விற்க விரும்பறேன். ஆனா அதை யார் வாங்கினாலும் அவங்க ரொம்ப சிரமப்பட்றாங் கன்னு கேள்விப்பட்டேன். அதனாலதான் ஸ்ரீவத்ஸவாவை கன்சல்ட் பண்ணவந்தேன்.

"அ'யம் சாரி... அப்பா இப்ப இல்லை."

"எனக்கு அதிர்ஷ்டமில்லை. ஆமாம் அவர்தன் வித்தையை உங்க யாருக்கும் கத்துத் தரலையா?"

"இல்லை... நான் பேங்க் ஆபீசர். எனக்கு இந்த லைன்ல இண்ட்ரஸ்ட்டும் இல்லை."

"அப்படியா... அது சரி அவர் ஒரு புத்தகம் எழுதியிருக் கறதா கேள்விப்பட்டேன். அதாவது கிடைக்குமா?"

"வெரி சாரி... அவர் சம்பந்தப்பட்ட எந்த விஷயங்களும் எங்ககிட்ட இல்லை. ஒரே ஒரு காப்பி கொஞ்ச நாள் இருந்தது. அதையும் செல்லரிச்சிடிச்சு."

"ஓ... என்ன சார் நீங்க. ஃபாரின் கன்ட்ரீஸ்லகூட அந்த புத்தகம் பத்தி பலர் பேசக் கேட்ருக்கேன். அது இருந்தாகூட போதும் என் வியாபாரத்துக்கு அது பெரிய உதவியா இருக்கும்."

"அதுக்கு என்ன பண்ண முடியும். வேணும்னா விக்டோரியா லைப்ரரிக்கு போய் தேடிப்பாருங்க. அங்க கிடைக்கலாம்."

"அப்படியா... தேங்க்யூ வெரிமச்!"

–அந்த சிவராமன் எழுந்து வெளியேற ஆரம்பித்தபோது ஸ்ரீவத்ஸன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

tamilebooks.net

புரொபசர் ஸ்ரீவத்ஸவாவை போலவே உருவம்.

சிவராமன் திகைத்தார்.

"போட்டோல இருக்கற ஸ்ரீவத்ஸவா மாதிரியே இருக்காரே இவர்..."

"ஆமாம் அவன் தாத்தா மாதிரி.... அதான் தாத்தா பேரையே வெச்சிருக்கேன்." -பின்னால் இருந்து சேஷாத் ரியே பதிலைச் சொன்னார்.

"எனி ஹவ் இவரைப் பார்க்கும்போது புரொபசரைப் பாக்கற மாதிரியே இருக்கு. வெரி ஹேப்பி! ஒரு வேளை உங்களுக்கு அந்த புத்தகம் கிடைச்சா எனக்கு தகவல் தாங்க. .

"அதுக்கு நான் ஐம்பதாயிரம் ரூபாய்கூட தரத் தயாரா இருக்கேன்."

"நிச்சயமா...?"

-சிவராமன் அட்ரஸ் கார்ட்டை கொடுத்துவிட்டு போய்விட்டார்.

ஸ்ரீவத்ஸன் கேட்டான்.

"என்னப்பா இது... ஒரு புத்தகத்துக்கு ஐம்பதாயிரம் தரேங்கிறாரே.

"அப்படின்னா பாத்துக்கோ உன் தாத்தா எவ்வளவு பெரிய திறமைசாலின்னு."

"அப்படி என்ன அந்த புத்தகத்துல இருக்கு?"

"வைரங்களைப் பற்றி அப்பா எப்பப் பார் ஆராய்ச்சி பண்ணிண்டிருப்பார். அப்படியே நவரத்தினக்கற்களையும் வெச்சிண்டு நோண்டிண்டு இருந்தார். அதை எல்லாம் பத்தி அதுல எழுதியிருக்கார் நான்கூட படிச்சிருக்கேன்.

tamilebooks.net

ஆனா அப்ப எனக்கு சின்ன வயது. அருமை தெரியலை. இப்ப தெரியவரும்போது புத்தகம் கைல இல்லை."

"லைப்ரரில இருக்கலாம்னு சொன்னீங்களே?"

"ஆமாம். அப்பா லைப்ரரிக்கு சில காப்பிகள் கொடுத்' தார். எப்பப்பார் அவர் அந்த லைப்ரரிலதான் பழியா கிடப்பார்."

"அங்கபோய் தேடிப்பார்த்தேளே..."

"ஐம்பதாயிரத்து ஆசைப்பட்டுண்டு தேடிப்பாத்தேன். என் கண்ணுல படலை. நான் போனப்பல்லாம் அது அங்க இல்லை. யாராவது எடுத்துண்டு போயிருக்கலாம் இல்லையா?"

'திரும்ப கொண்டு வந்தும் வெச்சிருக்கலாமில்லயா?"

"இருக்கலாம். இப்பல்லாம் அது சொன்னபடி லலாட வைரம் மட்டும் எங்க இருக்குன்னு தெரிஞ்சுதுன்னா என் உடம்பை அதை வெச்சே குணப்படுத்திண்டுடுவேன்."

"லலாட வைரமா?"

"ஆமா... ரொம்ப அபூர்வ ஜாதி வைரம். அது ஒருத்தர் கிட்ட இருந்தா அவா புத்தி அப்படி வேலை செய்யுமாம். உடம்புல எந்த வியாதி இருந்தாலும் நீங்கிடுமாம்."

"நிஜமாவா?"

"நிஜம் பொய்யை சோதிச்சுப் பார்த்தாதானே உணர முடியும். பொதுவுல உன் தாத்தா ஒரு சத்யசாந்தன். உண்மைக்குப் புறம்பானதை ஒத்துக்காதவர். அவரே லலாடம் பற்றி எழுதியிருந்ததனால -தான் நான் இதை சொல்றேன்."

-இப்படியாக அப்பா பிள்ளைக்குள் பேச்சு வார்த்தை நடந்து முடிந்தது. நடுநடுவே சிவராமனும் போன்

tamilebooks.net

பண்ணிக்கொண்டேயிருந்தார். ஸ்ரீவத்ஸனுக்கும் அப்படி என்னதான் அந்த புத்தகத்தில் இருக்கிறது என்று ஒரு ஆர்வம் தொத்திக் கொண்டுவிட்டது. எதற்கும் தேடிப்பார்ப்போமே என்று வீடு முழுக்க தேடினான். அப்பொழுதுதான் தாத்தாவின் டைரி கண்ணில்பட்டது. அது ஆர்வத்தை இன்னமும் அதிகமாக தூண்டிவிட்டது. அதே சமயம் அப்பா சேஷாத்ரிக்கு வாத நோய் வந்து அவரைப் படுக்கையில் தள்ளிவிட்டது.

வாழ்வாங்கு வாழ்ந்தவர்...

படுக்கையில் சுருண்டுவிட்டார். ஸ்ரீவத்ஸனுக்கு தாத்தா லலாட வைரம் பற்றிச் சொன்னது ஞாட'கத்தில் வந்தது. அது கிடைத்தால் அப்பாவை வியாதியில் இருந்து விடுவித்து விடலாம். தாத்தா அதைப்பத்தி ஜனவரி 20 தேதி குறிப்பில் இன்னொரு விதமாக எழுதியிருந்தார்.

'புத்தபிட்சுவிடம் இருந்து களவுபோன வைரம் கைமாறி இறுதியில் ஞானவேலிடம் போய்ச் சேர்ந்தது. அது அவரிடம் போன நேரமோ இல்லை அதன் சாகஸமோ ஞானவேலுக்கு கிண்டி குதிரை ரேஸில் ஜாக்பாட் அடித்தது. கிட்டத்தட்ட பதினைந்து லட்ச ரூபாய் அதை அப்படியே வைத்து ஒரு பிரபல கம்பெனியின் ஷேரை வாங்கினார். அநத் ஷேரின் மதிப்பும் ஆறுமாதத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு போய்விட்டது. அதே சமயம் அவரை தொழுநோயும் ஆக்ரமிக்கத் தொடங்கிவிட்டது. அப்பொழுது தான் ஒரு உண்மையை ஞானவேல் உணர்ந்தார். வைரம் காசை மட்டும் வாரித்தரவில்லை. நோயையும் கூடவே வாரித் தந்துவிட்டது.

நோயில் இருந்து விடுபடவேண்டுமானால் அதை யாராவது ஒரு சன்யாசிக்கு தானமாகத் தர வேண்டும் அப்பொழுதுதான் தப்பிக்கலாம் என்று அவருக்கு நாடி

tamilebooks.net

ஜோதிடத்தில் குறிப்பு வந்தது. அப்பொழுது ஞானவேலுக்கு அணுக்கமாக இருநதவர் பொட்டுசாமிதான்.

அவரிடம் போய் வைரத்தை ஒப்படைத்து காலில் விழுந்தார். பொட்டுச்சாமியும் அதை வாங்கிக்கொண்டு அவரது உடம்பை வருடி ஆசீர்வதித்தார். ஒரு அதிசயம் போல ஞானவேல் மூன்றே மாதத்தில குணமாகிவிட்டார்.

சிலரை வியாதியில் இருந்து விடுவிக்கும் லலாட வைரம் சிலரை வியாதிக்கு ஆட்படுத்துவது ஒன்றும் ஆச்சரிய மில்லை. ஜாதக பலத்திற்கு ஏற்ப அது தன் வேலையைக் காட்டுகிறது.”

–என்று அந்த குறிப்பில் எழுதியிருந்தார்.

எல்லாமாய் சேர்ந்து ஸ்ரீவத்ஸனை பொட்டுச்சாமி யையும் தேடவிட்டது.

ஒருவேளை அவரைப்பற்றி விஸ்தாரமாக ‘நவரத்தின சாராவளி’யில் எழுதியிருப்பாரோ என்பது அவன் சந்தேகம்.

புத்தகம் கையில் கிடைத்து விட்டால் எல்லாம் தெளிவாகிவிடும்.

கிடைக்க வேண்டுமே?

ஸ்ரீவத்ஸன் ரேக் ரேக்காய் புத்தகங்களை உருவிப்பார்த் துக் கொண்டிருந்தான்.

பதினோரு மணிக்கு உள்ளே நுழைந்தவன் மணி ஐந்தாகியும் விடவில்லை.

மெல்லிசாக இருட்ட வேறு தொடங்கிவிட்டது.

கதவை அடைக்கும் உத்தேசத்தோடு சவரிமுத்துவும் உள்ளே நுழைந்தான்.

tamilebooks.net

"எந்த புத்தகத்தை தம்பி இப்படி தேட்றீங்க?" கேட்டாள்.

"என் தாத்தா எழுதின ஒரு புத்தகம் இங்க இருக்கறதா கேள்விப்பட்டேன்."

"உங்க தாத்தா பேர்..."

"ஸ்ரீவத்ஸவா!" -அவன் பேரைச் சொல்லும்போது ஃபாதர் கேபிரியேலும் உள்ளே நுழைந்திருந்தார். பேரைக் கேட்ட மாத்திரத்தில் விருட்டென்று திரும்பி ஸ்ரீவத்ஸ னைப் பார்த்தார்.

பின் வெகுவேகமாக அவனருகில் சென்றார்.

"தம்பி யாரு?"

"என்பேர் ஸ்ரீவத்ஸன். புரொபசர் ஸ்ரீவத்ஸவா பேரன்!"

"ஓ... புரொபசர் பேரனா... உங்க தாத்தா எப்பப்பார் இங்கதான் இருப்பார். அவர் எழுதின ஒரு புத்தகம்கூட என்கிட்ட இருக்கு."

-ஃபாதர் கேபிரியேல் இன்ப அதிர்ச்சியளித்தார்.

"அப்படியா.. நவரத்தின சாராவளிதானே?"

"எக்ஸாக்ட்லி..."

"ஓ தேங் காட்... அதைத் தேடித்தான் ஃபாதர் நான் இங்கே வந்தேன். காலைல இருந்து தேடிகிட்டு இருக்கேன்."

"என்கூட வாங்க... தரேன்..."

-அவர் அழைக்க அவரைத் தொடர்ந்தான். வழியில் அந்த புகைப்படம் கண்ணில் பட்டது. ஃபாதர் ஒருவரோடு நெற்றியில் சந்தனப் பொட்டும், அமெரிக்கன் கிராப்புமாய் புரொபஸர் ஸ்ரீவத்ஸவா.

tamilebooks.net

"அட தாத்தாவோட போட்டோ..." சட்டென்று கூவினான். ஃபாதர் கேபிரியேலும் ஆமோதிக்கிற மாதிரி சிரித்தார்.

"நீங்களும் அவரைப் போலவே இருக்கீங்க..." என்று கண்ணைச் சிமிட்டினார். ஸ்ரீவத்ஸன் அதை ரசித்தான். தொடர்ந்து நடந்தான். சர்ச்சை ஒட்டியிருந்தது. கேபிரியேல் ஃபாதரின் அறை. சிறிய அறை- வெள்ளை பெயின்ட்டில் உள்பாகத்தை மூழ்கடித்திருந்தார்.

பீரோவில் இருந்து ஜன்னல் திரைச் சீலை வரை எல்லாமே வெள்ளை.

"உங்களுக்கு வெள்ளை நிறம்னா ரொம்ப பிடிக்குமா ஃபாதர்?"

"ஆமாம்... இதுகூட உங்க தாத்தா சொன்ன ஆலோசனைதான்.

"அப்படியா...?"

"அதுமட்டுமல்ல. ஒரு முத்து மோதிரம் செய்து போட்டுக்கச் சொன்னார். அன்றிலிருந்து ரொம்ப அமைதியா இருக்கு என் வாழ்க்கை."

"ஆச்சரியமாயிருக்கே..."

"உங்க தாத்தாவே ஒரு ஆச்சரியப் புதையல் தானே?"

-சொன்னபடியே பீரோவைத் திறந்து ஒரு பாலீதீன் கவருக்குள் இருந்த அந்த புத்தகத்தை நீட்டினார். பழுப்பேறிப்போய் தொட்டாலே பொடிந்து விடும் விதத்தில் மிரட்டியது அது. அதில் நண்பர் கேபிரியேலுக்கு என் அன்புப் பரிசு என்று எழுதி கையெழுத்தும் போட்டிருந்தார்.

ஸ்ரீவத்ஸனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

tamilebooks.net

நூறுமுறை நன்றி என்றபடி வாங்கிக் கொண்டான்.

"இந்த புத்தகத்தை படிச்சுட்டு திருப்பிக்கொடுத்துடணும்."

-ஃபாதர் ஒருமாதிரி கைகளை ஆட்டியபடி அன்புக் கட்டளை இட்டார்.

"ஷ்யூர் ஃபாதர். அவ்வளவையும் ஜெராக்ஸ் பண்ணிகிட்டு உங்களுக்கே தந்துட்றேன்."

-கைகுலுக்கிவிட்டு புறப்பட்டான்.

## 5

பௌர்ணமியும் பிரதோஷமும் திங்கட்கிழமையும் ஒன்று கூடிவரும் நாளைக்கு ஒரு அபூர்வ சக்தி உண்டு. பிரதமரும் ஜனாதிபதியும் முதலமைச்சரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பட்டிக்காட்டுக்கு வருவதைப் போன்றது அது. அப்படியானால் அந்த பட்டிக்காடு பட்டிக்காடாகவா இருக்கும்? எங்கு பார்த்தாலும் போலீஸ், ஒரு துப்புரவு, சீரான மின்விநியோகம், போக்குவரத்தில் ஒழுங்கு என்று எல்லாம் இருக்குமல்லவா? அப்படி ஒரு சக்தி இந்த நாளைக்கு. இந்த நாளில் பச்சை மரகத லிங்கத்துக்கு செய்யப்படும் பாலபிஷேகமும் அந்த அபிஷேக பாலும் ஒரு அருமருந்து. கர்மா காரணமாக உடம்பை பீடித்த நிலையில் வளரத்தொடங்கி இருக்கும் காசம், புற்று இவைகளை இந்தப் பாலின் ஜீவசத்து கரைத்து வெளியேற்றி விடும். பச்சைமரதகம் பிரதோஷ காலத்தில் தணலில் போட்ட இரும்பைப் போல சுடரொளி கூடியும் நெடுந்தூரம் வரை கதிர்களைப் பாய்ச்சும். இமைக்காமல் இந்த காட்சியைப் பார்ப்பது ஒரு யோக ரகசியம்.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

tamilebooks.net

ஜனத் திரளோடு கிடந்தது அந்த பஸ் ஸ்டாப். அதில் கௌதமனும் கிடந்தான். கையில் அருணாசலம் தந்த வைர மோதிரம். அதை ஒரு பார்வையும், சாலையை ஒரு பார்வையுமாய் பார்த்தபடி இருந்தான்.

அவன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த பணக்காரப் பெண்ணான கவிதாவின் கார் டிராஃபிக்கில் கண்ணில் பட்டது.

அவனுக்குள்ளும் இதயம் படபடக்க ஆரம்பித்தது. கார் அவனைத் தாண்டிக்கொண்டு சென்று நின்றது. காரிலிருந்து கவிதாவும் இறங்கினாள்.

பஸ் ஸ்டாப்பை ஒட்டி இருக்கும் பொட்டிக் ஷாப் ஒன்றில் நுழைந்தாள்.

கௌதமனும் பின்னாலேயே அந்த பொட்டிக் ஷாப்பினுள் நுழைந்தான்.

"வா மயிலே வா...!" என்று மனதில் வரவேற்றபின் அவள் நைட்டியும், சுடிதாரையும் ஆராய்வதை ரசித்தான்.

கடையின் பணிப்பெண் அவனிடம் வந்தாள.

"If you want anything?"

"Yes... Yes... Just I am looking..." என்று வழிந்தான்.

"So you don't want to buy?"

" No... No... I want to buy... I want to buy..."

-என்று மிடறுகட்டியவன் ஏதோ ஒரு டீஷர்ட்டில் கையை வைத்தான். பார்வை என்னவோ கவிதா மேலேயே இருந்தது.

"அவங்ககூட வந்திருக்கீங்களா?" -அந்த பணிப்பெண் கேட்டாள்.

tamilebooks.net

"யெஸ் யெஸ்... நோ... நோ..." -உளறல் அவனிடம் கொப்பளித்தது.

கவிதாவும் திரும்பிப் பார்த்தாள். நெருங்கி வந்தாள். ஒரு மாதிரி சிரித்தாள்.

'ஆ... வைர மோதிரம் வேலை செய்கிறதோ?' அவன் மனதுக்குள் குதித்தான்.

"ரொம்ப ஜொள்ளுவிட்றே... என்னை ஃபாலோ பண்ணிட்டே இருக்கே. திஸ் ஈஸ் லாஸ்ட் வார்னிங். நாளைக்கு இதே மாதிரி உன்னை பார்த்தா உன் வீட்ல கஞ்சா முளைக்கும். நீ கம்பி எண்ணுவே. ஜாமீன்லகூட வரமுடியாது." -என்று சிரித்துக் கொண்டே மிக மிக மிருதுவான குரலில் அவன் காதில் அமிலம்போல் சொல்ல வேண்டியதைக் கரைத்தாள்.

சப்த நாடியும் கௌதமனுக்கு சில்லிட்டு விட்டது. அவளும் போய்விட்டாள்.

டீ ஷர்ட்டுக்கு பில் வந்தது.

எண்ணூத்தி ஐம்பது ரூபாய்!

பின் மண்டையில் யாரோ ஊசியால் குத்தியமாதிரி இருந்தது. பாக்கெட்டில் கையை விட்டான்.

ஐம்பத்தைந்து ரூபாய் சில்லரைதான் அகப்பட்டது.

கேஷ் கவுண்டர் முன்னால் போய் தலையை சொறிந்தான்.

"என்ன சார்...?"

"சாரி பணம் எடுத்துக்காம வந்துட்டேன்."

"அதனால என்ன... ஒரு பையனகூட அனுப்பறோம் கொடுத்து விடுங்க."

tamilebooks.net

"அது... அது..."

"என்ன சார்...?"

"சரி அனுப்புங்க..."

ஒரு ஒற்றை நாடி அரை டிராயர் பையன்கூட வர ஆரம்பித்தான்.

கௌதமனுக்கு கிறு கிறுத்துவிட்டது. வீட்டிலும் அவ்வளவு பணமில்லை. மாசக்கடைசி வேறு. டீ ஷர்ட்டும் தனது சைஸ் கிடையாது. என்ன செய்யலாம்?

புத்தி குறுக்கில் ஓடியது–

பையன தெராட்டில் விட்டுவிட்டு கம்பி நீட்டவேண்டியதுதான். தோதாக ஜனசந்தடி வேறு... ஒரு இடத்தில் வேகமாக நடந்து அப்படியும் இப்படியும் வளைந்து சென்று ஒரு எஸ்.டி.டி. பூத்தில் சட்டென்று நுழைந்து அங்கு போன் பேசியபடி இருக்கும் நபரின் பின்னால் மறைந்தான்.

'கடவுளே...! இப்டி ஒரு கஷ்ட காலமா?'

மனது அரற்றியது. வைர மோதிரம் சிரித்தது.

'ஆத்தாடி! எல்லாம் உன்னோட வேலையா? இந்த தொரத்து தொரத்தறியே..!' – அழுகையே வந்தது. அதன்பின் உள்ளே நுழைந்த பாவத்துக்கு கண்ட கண்ட நம்பரை சுழற்றி 'எங்கேஜ்டா இருக்கு' என்று பூத்காரன் காதில் பூ வைத்து விட்டு வெளியில் வர "சார்..." என்றான். அந்த சிறுவன்!

"நீ இன்னும் போகலையா?"

"என்ன சார் அலைய விட்றீங்களா?"

"சர்தான் போடா..." –கத்திவிட்டு விடு ஜுட்... அவன் ஓட, பொடியன் துரத்த எதிரில் கார்ப்பரேஷன் நாய்

tamilebooks.net

வண்டி ஒன்று கொடூர புகையை கக்கியபடி வந்து கொண்டிருந்தது. வளைந்து ஓட பக்கத்தில் இடமுமில்லை. ஓட்டத்தைக் குறைத்து தேங்கி நிற்பதற்குள் அந்த வண்டி ஒரு இடி இடித்தது.

சினிமாவில் வரும் ஸ்டண்ட் காட்சி போல உடம்பு ஆகாசத்தில் சுழன்றபடி மேலேறியது. அப்படியே தலைகீழாக தரையில் வந்து மோதியது!

பவ்யமாக வைரமோதிரத்தை நீட்டிய பிரபுவை ஆச்சரியமாக பார்த்தார் அருணாசலம்.

"சார்! நாங்க இந்த விளையாட்டுக்கு வந்தது பெரிய தப்பு. கெளதமன் இப்ப ஆஸ்பத்திரியில இருக்கான். நான் ஒரு பாட்டில் ரத்தம்- கதிர் ஒரு பாட்டில் ரத்தம் கொடுத்தோம். இன்னும் கண்ணு திறக்கலை. எனக்கு புரிஞ்சு போச்சு. நைஸா மோதிரத்தை உருவிகிட்டு வந்துட்டேன்." பிரபுவிடம் மூச்சிறைத்தது. கூட வந்த கதிர் அமைதியாக பார்த்தான்.

"நான் தான் சொன்னேனே... சிலருக்கு இது ஒத்துக்காது!"

"ஒத்துக்காதா... ஓட ஓட விரட்டி அடிச்சிடிச்சு சார். அவன் கண்ணத் திறந்தாதான் தெரியும் எவ்வளவு தண்டச் செலவு இருக்குன்னு..."

"கவலைப் படாதீங்க. ஒரு ரட்சைதரேன். அதை அவர் கைலகட்டுங்க. ரொம்ப வேகமா குணமாயிடுவார்."

"நிஜமாவா சார்...?"

"ஆமாம். இருங்க வரேன்." - அவர் உள்ளே சென்றார். அப்பொழுது அவரது பெண் வசந்தி மெல்ல எட்டிப் பார்த்தாள். அவள் பார்வை கதிர்மேலேயே இருந்தது.

சிரித்தாள். கதிரும் சிரித்தான்.

tamilebooks.net

"ட்யூட்டியில ஜாய்ன் பண்ணிட்டீங்களா?"

"இல்லை... இன்னும் இரண்டு நாள் இருக்கு!"

"அடிக்கடி வந்துட்டு போங்க..."

"ஷ்யூர்... ஷ்யூர்!"

–அருணாசலமும் உள்ளிருந்து வந்தார்.

அவர் கையில் ஒரு ரட்சை.

"இந்தாங்க... இதை அவர் கைல கட்டுங்க."

"நல்லது சார்... ஆமா நீங்க உண்மைல யார். சாமி யாரா?"

– பிரபு சாதாரணமாகத்தான் கேட்டான். அருணாசலம் சிரித்துவிட்டார்.

"உங்கள மாதிரித்தான்பா நானும். பொட்டுச்சாமியார் தரிசனம் என்னை அவர் பக்தனாக்கி ஆன்மீகத்துல இழுத்து விட்றுச்சு. அதனால அடிக்கடி அவரைப் போய் தரிசனம் பண்ணிட்டு வருவேன். அப்ப அவரும் இந்த மாதிரி ரட்சைகள் கொடுப்பார்கள். எப்பவும் பிறருக்கு உதவியா இருக்கணும். இதுதான் அவர் தன் சிஷ்யர்களுக்கு அடிக்கடி சொல்ற அருள்வாக்கு. நானும் முடிஞ்ச அளவு உதவியா இருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம் சார். அப்ப நாங்க வரோம்."

–கதிரும், பிரபுவும் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தனர். பிரபு வெளியே வந்த நொடி.

"அப்பாடா தப்பிச்சோம்." –என்று பெருமூச்சு விட்டான். கதிர் பாக்கெட்டில் கையைவிட்டு வெளியே எடுத்தான். கையில் அருணாசலத்தின் ஒரிஜினல் வைர மோதிரம்!

tamilebooks.net

## 6

பச்சை முத்தை அரைத்தால் பசைபோலவும் நுரை கூடியும் வரும். அதை சந்தனத்தில் சேர்த்து நிதமும் பூசி வந்தால் கன்னங்கரேல் என்று கருத்த தோலும் செந்நிறத்துக்கு மாறி வரும். கூடவே தீராத தோல் நோயையும் இது தீர்க்கும். இந்த முத்து சிலர் கைகளில் தங்கவே தங்காது. அந்த நாளில் கறுப்பு முத்துக்களில் மாலை கட்டி கழுத்தில் போட்டுக் கொள்வார்கள். கறுப்பு முத்தணிந்த ஒரு பெண் பிறரால் பெரிதும் நேசிக்கப்டுவாள். என் ஆய்வில்கூட இதை கண்டறிந்தேன். ஒரு மத்திமமான அழகுடைய பெண்ணுக்கு கருமுத்தில் மாலையணிவித்து சிறிது காலம் கவனித்தேன். அவளது திருமணத்தின்போது அவளது முறைமாமன்கள் அவள் கழுத்தில் தாலி கட்ட போட்டியிட்டார்கள். எப்பேர்ப்பட்டவரையும் கருமுத்துவின் கதிர்கள் யோசிக்க வைத்து விடுகிறது! •

*– ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*உற்சாகமாய் வீட்டுக்குள் நுழைந்தான் ஸ்ரீவத்ஸன் நேராக அப்பா சேஷாத்ரி எதிரிலும் போய் நின்றான்.*

*"அப்பா புத்தகம் கிடைச்சிடுத்து... கிடைச்சிடுத்து..."*

*"அப்படியா... எங்கே?"*

*-அவர் படுத்த நிலையில் ஒரு கையை நீட்ட அவர் வசம் புத்தகத்தை தந்தான். நடுநடுங்க அதை வாங்கியவரை எழுப்பி அமர்த்தினான். வசதியாக பக்கங்களை பிரித்துக் காட்டினான்.*

*"இதான்... இதான்... இதே தான்..." -அவர் குரல் தழுதழுத்தது.*

*"இதை நான் முழுசா படிக்கப் போறேன்பா. லலாடம்கற ஒரு வைரம் யாரோ ஒரு பொட்டுச்சாமி*

யார்கிட்ட இருக்காமே? அவரைப் பத்தி இதுல ஏதாவது இருக்கான்னும் தேடப் போறேன்."

"தாத்தா டைரியைப் படிச்சியாக்கும்?"

"ஆமாம்... அது வந்துட்டா உங்க வியாதி குணமாயிடும் இல்லையா?"

"பைத்தியக்காரா. லலாடம் என்ன லேசுப்பட்டதா? அது ஞானம் தர்ற வைரம். அப்பா அதைப் பத்தி அடிக்கடி சொல்வார். வைரத்துக்கு அந்த பேரை வெச்சவரேகூட அவர்தான். அதுக்கு அப்பவே பலகோடி மதிப்பு."

"அப்ப பலகோடி மதிப்பு வைரத்தையா ஒருத்தர் பொட்டுசாமிக்கு தானமா கொடுத்தார்?"

"ஆமாம். குறைந்தபட்சம் இதை கொஞ்ச நாள் வெச்சுண்டுட்டு திருப்பித் தந்துடலாம் இல்லையா?"

"இது அதீத ஆசை. குண்டு மணி தங்கத்தைகூட இந்த காலத்துல யாரும் தரமாட்டா. நீ போய் அதுக்கு குறி வைக்கறியே."

"என்னமோ தெரியலப்பா... அது எனக்கு கிடைக்கும்னு உள்ளுணர்வு சொல்றது."

"வேண்டாத வேலை அது... அதையெல்லாம் உட்டுட்டு இந்த புத்தகத்தை நீ ப்ரிண்ட் போடப்பார். அந்த வைரவியாபாரி சிவராமுக்கு தகவல் தா."

"நிச்சயமா..."

-ஸ்ரீவத்ஸன் புத்தகத்தோடு நகர்ந்தான். தொலைபேசியில் சிவராமன் எண்களைத் தட்டினான்.

"மிஸ்டர் சிவராம்! அந்த புத்தகம் கிடைச்சிடுச்சி. நேர்ல வர்ரீங்களா வாங்கிக்க."

'ஷ்யூர்! ஷ்யூர்!"

tamilebooks.net

-போனை வைத்தான். ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்தவன் புத்தகத்தை விரித்தான்.

முதல் பக்கத்தில் 'இந்த நவரத்தின சாராவளியை மகான் பொட்டுசாமிக்கு சமர்பிக்கிறேன்' என்று பொட்டுச்சாமி யின் இளம்பிராயத்து படத்தை போட்டு சமர்ப்பணம் செய்திருந்தார் ஸ்ரீவத்ஸவா.

அடுத்த பக்கம் ஒருகதை போல தொடங்கியது.

இனி அதன் போக்கில்...

## என்னுரை

அடியேன் சாரங்கபாணி என்கிற ஸ்ரீவத்ஸவா. வாசக நெஞ்சங்களுக்கு புரியும் அனேக நமஸ்காரங்கள். இப்பவும் நீங்கள் வாசிக்கும் இந்த 'நவரத்தின சாராவளி' என்னும் இந்த பொஸ்தகமானது அடியேனது அயராத உழைப்பா லும், முயற்சியாலும் பிரசவித்த ஒன்று என்றால் மிகையே இல்லை.

இப்பவும் பொஸ்தகம் என்றால் நாவல், பொஸ்தகம் என்றால் குட்டிக்குட்டி கதைகள் என்று எண்ணிக் கொண்டும் அதையே ஒசத்தியாக படிப்பவர்க்கும் நடுவில் அடியேனது இந்த பொஸ்தகம் எந்த அளவு வரவேற்பை பெறும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று இதில் எங்கும் கற்பனையே கிடையாது. இதில் உள்ள அவ்வளவும் சத்யம்-இதில் உள்ள அவ்வளவும் உண்மை. இதை எழுதுவதற்கு முன்பாக நான் கிட்டத்தட்ட அனு மானமாக நாற்பது வருஷத்தை நவரத்தின ஆராய்ச்சியில் கழித்தேன்.

ரத்தினாராய்ச்சி ஒன்றும் லேசுப்பட்ட விஷயமில்லை. இதில் எனக்கு பல துக்ககரமான அனுபவம் எல்லாம் நேரிட்டது.

tamilebooks.net

சுத்தமான வைரத்தையும், முத்தையும், நற்பவழத்தையும், மரகதத்தையும், கோமேதகத்தையும், நீலத்தையும், புஷ்ப ராகத்தையும், மாணிக்கத்தையும், வைடூரியத்தையும் தேடிப் பிடிக்கப்பட்டபாடும், அதை புரிந்து கொள்ள பட்டபாடும் கொஞ்ச நஞ்சமல்ல. இதில் வைரத்துக்கு அசாத்ய சக்தி இருப்பதை எனது அனுபவங்கள் எனக்கு புரியவைத்தன.

ஒரு லட்டின் அளவுக்கான வைரம் ஒன்று காட்டிய வித்தை கொஞ்ச நஞ்சமல்ல. அதற்கு நமது லலாடத்தை திறக்கும் சக்தி இருப்பதை கண்டறிந்து அடியேனே அதற்கு 'லலாட வைரம்' எனப் பெயரிட்டேன்.

ஒரு அளவிற்கு மேல் வைரம் மட்டும் பெரிதாக இருக்கவே கூடாது. அப்படி இருந்தால் அது யாருக்கும் பயன்படாமல் தன்னிச்சையாக ஒரு மகரிஷியைப் போல சக்தி கொண்டு மனிதர்கள் வசம் செயல்படும் என்பதே என் முடிவு.

நமது கோஹினூர் வைரம்கூட இப்படித்தான் பல சமஸ்தானாதிபதிகள் அகால மரணம் அடைந்ததன் பின்னாலும், வெற்றிகளை குவித்ததன் பின்னாலும் அவர்கள் வாங்கி வைத்திருந்த வைரங்களே காரணமாக இருந்தன.

இதை இப்படிக்கூட சொல்லலாம். யாருக்கெல்லாம் உயர்வும், தாழ்வும் ஏற்படவேண்டும் என்று விதி இருக்கிறதோ அவர்களுக்கே இந்த வைரங்கள் கிடைக்கின்றன.

விதி இதன் ரூபத்தில் தனது கணக்கு வழக்கை நன்றாகவே தீர்த்துக் கொள்கிறது. சுருக்கமாக சொல்வதானால் விதியின் மிக வலிய ஆயுதம் நவரத்தினங்கள். அதில் விதியின் அணு ஆயுதம் போன்றது வைரம்.

tamilebooks.net

இந்த பொஸ்தகத்தை வாசிப்பவர்களுக்கு ஒரு ரகசியமும் தெரியவரும். அந்த ரகசியத்துக்கு ஒரு மதிப்பு வைத்தால் அது நிச்சயம் ஒரு சதம் கோடியை உடையதாக இருக்கும்.

அதிர்ஷ்டமிருந்தால் அந்த ரகசியத்தைக் கண்டு பிடித்து அந்த ஒரு சதம் கோடியை வாசக பந்துக்களில் யாரும் அடையலாம். மற்றபடி வைரம் நீங்கலாக மற்ற ரத்தினங்கள் ஏதெல்லாம் செய்யும். எப்படியெல்லாம் நம்மை ஆட்டு விக்கும் என்பதை நானறிந்த விதத்தில் எழுதியுள்ளேன்.

இந்த பொஸ்தகம் இரண்டு காரணங்களுக்காக எழுதப்படுகிறது.

ஒன்று நம்முடைய மானுட சமூகம் நவரத்தினங்களின் மகிமையை அறிந்து கொண்டு அதற்கேற்ப பயனுற வேண்டும்.

அடுத்து அடியேனின் குருநாதரும் கலியுக வரப்ரசாதியு மான பொட்டு ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி இதை வாசிப்ப வரில் யாரேனும் ஒருவரால் என்று வேண்டுமானால் நிகழலாம். அதாவது இந்த பொஸ்தகத்தில் கடைசிப்பிரதி அழியும் காலம் வரைகூட அதற்கு வேளை வராமல் போகலாம்.

இதை மனசில் கொண்டு பொஸ்தகத்தை வாசிக்கவும். நவரத்தினங்களால் ஷேம சௌக்யங்களையும் அடையவும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி க்ருபாகடாக்ஷ ப்ராப்தி ரஸ்து...

ஸ்ரீஸ்ரீ நவக்கிரக தேவதாயக்ருபாகடாக்ஷ ப்ராப்தி ரஸ்து

ஸ்ரீ வெங்கடேஸ பத்மாவதி சமேத குபேரக்ருபாகடாக்ஷ ப்ராப்தி ரஸ்து

**வாசச கோஷம் ஷந்தவ்ய தாஸன்**
**ஸாரங்கபாணி என்கிற ஸ்ரீவத்ஸ...**

tamilebooks.net

–என்னுரை என்னும் அந்த முன்னுரையே ஸ்ரீவத்ஸனை தாடையை தட்டிவிட்டது.

இந்த புத்தகம் நிச்சயம் ஒரு வழிகாட்டும் என்று நினைத்தது எவ்வளவு சரி என்றும் தோன்றியது.

அது என்ன ரகசியம்?

அதன் மதிப்பு ஒரு சதம் கோடியாமே... அப்படியானால் நூறு கோடி ரூபாய்!

வாவ்!

மும்பை ஜுஹுபீச்!

அழுக்கு நீரலைகள் குதித்து கும்மாளம் போடும் கரைப் பகுதி. பட்டம் விட்டுக் கொண்டும், பந்து விளையாடிக் கொண்டும் சிறுவர்கள். விரும்புகின்றவர்களை முதுகில் சுமந்து கொண்டு ஓடும் மட்டக் குதிரைகள். சுத்தமான ஆக்ஸிஜனுக்காக மார்பை தூக்கிக் கொண்டு காற்றாட வந்திருக்கும் மார்வாடிகள்.

நடுவில் படுவேகமாக நுழைந்து க்ரீச்சிட்டு நின்றது, ஒரு ரத்த வண்ண வேகன் கார்! உள்ளிருந்து வெளிப்பட்டவர் பிரபல வைர வியாபாரி சிவராம். இறங்கியவர் நாலாபுற மும் பார்த்தார்.

"ஹல்லோ சிவராம் ஜீ..." – என்றபடி எங்கிருந்தோ ஓடி வந்தனர், இரண்டு தமிழ்நாட்டு இளைஞர்கள்.

சிவராம் அவர்களைப் பார்த்தவுடன் மத்தாப்பானார்.

"ஆதித்யன், சுந்தரம்! அந்த புத்தகம் கிடைச்சிடிச் சாம்யா' –என்றுதான் பேச்சையே ஆரம்பித்தார் சிவராம்.

"நிஜமாவா?" –இது ஆதித்தன்.

tamilebooks.net

"ஆமாம்.. நம்ம குருஸ்வாமி சொன்னது வீண் போகலை. ஒரு காப்பி- ஒரே ஒரு காப்பி சென்னைல ஒரு பாதிரியார் கிட்ட இருந்துருக்கு."

"எப்ப கைக்கு வரும்?"

"நான் நளைக்கு காலைல எட்டு மணி ஃப்ளைட்டை பிடிச்சு உடனே போகப்போறேன். ஐம்பதாயிரம்னு நான் சொன்னது அந்த சேஷாத்ரிக்கு பெரிசா தெரிஞ்சிருக்கு. அதான் புத்தகம் கிடைச்ச உடனே அதோட உண்மையான மதிப்பு தெரியாம அவன் மகன் எனக்கு போன் போட்டுட்டான்."

"அச்சா சிவராம்ஜி. உடனே போங்க. நாளைக்கு புத்தகத்தோட வாங்க. மத்ததை அப்புறமா பேசிக்கலாம்."

"அதுசரி குருஜி எப்படி இருப்பார்...? நான் இந்த விஷயத்தை சொல்ல பலமுறை போன் செய்தேன். ரிக்கார்ட் யுவர் மெஸ்ஸேஜ்னு தான் வாய்ஸ் வந்துச்சு. எதாவது நிஷ்டைல இருக்காரா?"

"ஆமாம்... நாங்களும் அவரைப் பாக்கப்போயிட்டு நிஷ்டைல இருக்கறது தெரிஞ்சு திரும்பிட்டோம். குருஜி நாலு நாளா நிஷ்டைல இருக்கார். கலையவே இல்லை. என்னான்னே தெரியல."

"அஞ்சலி மாதா இல்லையா?"

"இருக்காங்க. எப்ப நிஷ்டைல இருந்து விடுபடுவார்னு தெரியலைங்கராங்க."

"எதுக்கும் இப்ப போய் பார்க்கலாமா?"

"தாராளமா"

-அவர்கள் பேசிக் கொண்டே காரில் ஏறினர். கார் திரும்பவும் சீறியது.

tamilebooks.net

**பை**குல்லா குப்தா காலனி.

'ஸ்ரீஸ்ரீ துர்க்கா மாதா பீடம்' என்கிற ஹிந்தி எழுத்துப் பெயர்ப் பலகை தாங்கிய ஒரு கோயில் முகப்பு. கச்சிதமாக கார் அதன் முன்னால் தேங்கியது. சிவராமன் கெடிகாரத்தைப் பார்த்தார். மணி 5.30. உள்ளே நுழைந்தார். ஸ்டீரியோவில் ஆஷா போன்ஸ்லேயில் பஜன்பாடல் ஒன்று கசிந்து கொண்டிருந்தது. ஏராளமாய் மராத்திய கூட்டம் தளதள வெள்ளை உடம்போடும் தலையில் குல்லாவோடும் துர்கா மாதா தரிசனம் செய்ய வந்தும் போயும் கொண்டிருந்தனர். கோவிலை ஒட்டிய ஒரு சின்ன வெள்ளை பங்களா! அதன் முகப்புகூட கோபுரம் வடிவத்திலும். காவிக் கொடி ஒன்று உச்சியில் பறக்கத் தெரிந்தது.

சுற்றிலும் ஒரு பூந்தோட்டம். தோட்டத்துக்கு நடுவில் கறுப்பு மார்பிளில் நடைபாதை. அதில் நடந்து அந்த வெள்ளை பங்களாவின் பக்கவாட்டு வழி ஒன்றின் வாசலுக்குள் நுழைந்து உள்ளே சென்றனர்.

சிலீரிட்டது செண்ட்ரலைஸ்டு ஏ.சி. போன்ஸ்லேயின் தேன்குரல் அங்கேயும் கசிந்து கொண்டிருந்தது. எதிரில் அஞ்சலி மாதா என்ற துர்கா மாதா பீடத்தின் செக்ரட்டரி.

"நமஸ்தே மாதாஜி..."

"ஆவோ ஷிவ்ராம்..." - என்றாள் மாதாஜியும். அவர்கள் ஹிந்தியில் சம்சாரித்துக் கொண்டனர். அதன் தமிழாக்கம்.

"மாதாஜி! குருஜிய பாக்க முடியுமா?"

"நிஷ்டைல இருக்காரே ஷிவ்ராம்."

"முக்கியமான விஷயம். அவர்கிட்ட சொன்னா சந்தோஷப்படுவார்."

"அ'யம் சாரி... ரொம்ப நாளைக்கு பிறகு இப்பதான் இவ்வளவு நாள் நிஷ்டைல இருக்கார். அதுக்கு ஏதோ

tamilebooks.net

*காரணம் இருக்கு. கலைக்க முடியாது. கலைக்கவும் கூடாது.”*

*“சரி... அவரை சேவிக்கணும். அதுக்காவது அனுமதி கிடைக்குமா?” -மாதாஜி நிறைய தயங்கிவிட்டு பின் அரை மனதாக “ஷ்யூர்... ஆனா சின்ன சப்தம் கூட போடக் கூடாது!” -என்றாள்.*

*“சரி மாதாஜி...”*

*“வாங்க போகலாம்...” - மாதாஜி அவர்களை படி வழியாக ஒரு பாதாள அறைக்கு அழைத்துச் சென்றாள். சலவைக்கல் படிகள். பனித்துண்டு போல் பாதங்களை கவ்விப்பிடித்தன. இறங்க இறங்க சாங்க வாசம் மூக்கில் ஏறியது.*

*பாதாள அறையும் மங்கலான வெளிச்சத்தில் கண்ணுக் குப்பட்டது. அறை நடுவில் சிறிதாக ஒரு மண்டபம். அதில் பலகை ஒன்றின்மேல் அவர்கள் ஆவலாக பார்க்க வந்த குரு ஸ்வாமி.*

*யோக நிஷ்டையின் போதுமட்டும் அவர் கோவணம் தான் உடுத்தியிருப்பார். எனவே முழு உடம்பும் நன்கு தெரிந்தது.*

*அதில் தொழு நோயின் தீவிர ஆதிக்கம்! ஆவலாக தரிசிக்க வந்த சிவராமுக்கே குமட்டியது.*

## 7

**எ**ந்த ஒரு இடத்திலும் பூஜாபலம் இருக்க வேண்டும். ஒரு ஊருக்கே பூஜாபலத்தை தருபவைதான் தங்க விமான முள்ள கோபுரத்தின் கூர்மையான செம்பொன் கலசங்கள். கலசப்பார்வை உள்ள இடங்களில் தீப்பிடிக்காது. விஷ ஜந்துக்கள் குடியேறாது. மாந்தீரிகர்களும் அவ்வளவாக

tamilebooks.net

நடமாடமாட்டார்கள். குறிப்பாக துஷ்ட ஆவிகள் அறவே வராது. இருந்தும் இவைகளில் சில ஊருக்குள் குடியேறி விடலாம். அவைகளின் சக்தி குன்றிப் போகவேண்டு மானால் தெய்வீக சக்தி அங்கே ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

அதற்காகவே தேர்த்திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன. தேரிலும் ஸ்வாமி அமர்ந்து வந்து அருள்பாலித்தார். அந்த அருளும்கூட பெருமாளின் திருமேனியை அலங்கரிக்கும் நவரத்தினங்கள் மூலமாகவே வெளிப்பட்டது. எனவே தேர் உலா தரிசனம் நவரத்தின ஆலங்கனமாய் கொள்ளப் பட்டது.

பங்குனி உத்திரத்தில் தேரில் வரும் திருமுருக தரிசனம் செவ்வாயாலான பலவீனங்களைப் போக்கி ரத்தப் புத்துணர்ச்சிக்கு செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு.

தங்கரதமும், உத்திரரதமும் இழுப்பவர்கள் நிச்சயமாக வம்பு வழக்குகளுக்கு ஆட்படவேமாட்டார்கள்.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*அஷோக் கம்ப்யூட்டர்ஸ்!*

*மேலாளர் நாற்காலியில் பலரின் கைகுலுக்கலோடு போய் அமர்ந்தான் கதிர். மற்றவர்கள் சற்று அகன்ற நிலையில் பர்ஸைத் திறந்து உள்ளே பாதுகாப்பாய் வைத்திருந்த அந்த வைரமோதிரத்தை எடுத்து ஒரு பார்வை பார்த்தான். பின் கண்ணில் ஒற்றிக் கொண்டான். போதும் என்கிற மாதிரி இண்ட்டர்காம் சிணுங்கல். காதைக் கொடுத்தான்.*

*"சார்... எம்.டி. வந்துட்டார். நீங்க அவரைப் பார்க்க வருவீங்களாம்."*

*"ஷ்யூர்!"*

tamilebooks.net

அடுத்த நொடி அந்த அறையை விட்டு வெளியேறினான். எம்.டி.யின் அறை மாடியில் இருந்தது. முதல் தடவை பார்ப்பவர்களை அது நிச்சயம் பாதிக்கும். அப்படி ஒரு அழகு. கோவில் தூண்களுக்கு தங்ககவசம் போட்டு போர்த்திய மாதிரி அறை முகப்புச் சுவர் தாமிரத் தகடு வேயப்பட்டு பிராஸோபாலீஷ் அதில் ஜொலித்தது.

ஒரு இடத்தில் 'வீரேந்திர நாத் அஷோக்' என்கிற பெயர் எழுத்துக்கள். ஒட்டி ஒரு பிளைவுட் அரைவிட்ட மேஜை. அந்த மேஜைக்கு அப்பால் காற்றோட்டமான மார்பபோடு கட்டிப்போடாத கூந்தலோடு எம்.டி.யின் பி.ஏ. தர்ஷனி.

"வெல்கம் சார்... எம்.டி. வெயிட்டிங் ஃபார்யூ" -என்றாள் தன் ரோஸ் நிற லிப்ஸ்டிக் உதடு ஒட்டிப்பிரிய. கதிரும் மிடுக்காக உள்ளே நுழைந்தான்.

நுழைந்த நொடி ஒரு சின்ன மின் தாக்குதலுக்கு ஆளான மாதிரி தேங்கி நின்றான்.

எம்.டி. அருகில் அவனை சேற்றுக் குளியலுக்கு ஆளாக்கின புடவைப் பேரழகி!

"சிட் டவுன் மிஸ்டர் கதிர்... ஷீ ஈஸ் மை டாட்டர் ஸ்வேதா." -எம்.டி. இருக்கையைக் காட்டினார்.

"இவங்க உங்க டாட்டரா...?"

"ஆமாம்... உங்களை மெயின் ரோட்ல சஃபர் பண்ண வெச்சுட்டாளாமே...?"

"யெஸ் யெஸ்... நோ... நோ... அது சஃபர் இல்ல... எனக்கான லக்கி ஆஃபர்!" -அழகாக சமாளித்தான் கதிர்.

"ஓ... பியூட்டிஃபுல். உங்களுக்கு நல்ல வேர்ட் பவர்."

"தேங்க்யூ சார்..."

tamilebooks.net

"மிஸ்டர் கதிர். ஆக்சுவலா மேனேஜர்க்கு இங்க ஸ்ட்ரெயிட் அப்பாய்ண்மெண்ட் கிடையாது. வெரி ஃபர்ஸ்ட் டைம் எக்ஸ்பீரியன்ஸே இல்லாத உங்களை அப்பாய்ண்ட் பண்ணியிருக்கேன். பிகாஸ் ஸ்வேதா."

"தேங்க்யூ மிஸ் ஸ்வேதா. நான் ஸ்ட்ரெய்ட் ஃபர்ஸட்டா மட்டுமில்ல சார், ஜாப் ஃபர்ஸ்ட்டாவும் இருப்பேன்."

"Again Word Power! நான் உங்ககிட்ட இருந்து டேலண்ட் பவர், சைக்கலாஜிகல் பவர், டெசிஷன்பவர் எல்லாத்தை யும் எஸ்பெக்ட் பண்றேன்."

"ஐ வில் ட்ரை மை லெவல் பெஸ்ட் சார்..."

"ஓ.கே. யூ கேன் கோ நெள." –கச்சிதமாய் கத்தரித்தார். ஸ்வேதா என்கிற அவளும் சிரித்து வழியனுப்பி வைத்தாள். வெளியே வந்தான். தர்ஷினியைப் பார்த்தான். அவளும் சிரித்தாள்.

"உங்களை நான் விஷ் பண்ணவே இல்லை. ஆல் த பெஸ்ட் சார்." –என்று கை நீட்டினாள்.

அவனும் அதை கைப்பற்றினான். சூடான மல்லிப் பூ இட்லியை தொட்டது போல ஒரு மெதுமெதுப்பு. திரும்பினான். நாற்காலிக்கு வந்து அமர்ந்தான். அமர்ந்த நொடி தொலைபேசியின் கமறல். கொஞ்சம் சலிப்போடு காதைக் கொடுத்தான்.

"வணக்கம். நான் வசந்தி பேசறேன்."

"எந்த வசந்தி?"

"அருணாசலம் டாட்டர் வசந்தி..."

"ஓ... நீங்களா –என்ன விஷயம்?"

"உங்களுக்கே இது நியாயமா?"

tamilebooks.net

"நீங்க... நீங்க என்ன சொல்றீங்க?"

"மோதிரத்தை மாத்திட்டீங்களே -அதைச் சொன்னேன்."

"என்னது? மோதிரத்தை மாத்திட்டேனா?"

"பதட்டப்படாதீங்க. உண்மை தெரிஞ்சு போச்சேன்னு பொய் சொல்லவும் முயற்சிக்கவும் வேண்டாம். இந்த நிமிஷம் அந்த உண்மை எனக்கு மட்டும்தான் தெரியும்." -வசந்தி கொஞ்சம் நிம்மதி அளித்தாள்.

"அது... அது... நீங்க என்ன சொல்றீங்க?"

"பதட்டப்படாதீங்கன்னு சொன்னேன்ல?"

"மிஸ் வசந்தி அது வந்து..." -சமாளிக்கப் பார்த்தான் கதிர்."

"எது வந்து சார்.. பேராசை உங்களை திருடச் சொல்லிடிச்சாக்கும்?"

"மிஸ் வசந்தி.."

"இவ்வளவுக்கு பிறகும் நான் உங்க நல்லதுக்காகத்தான் போன் செய்யறேன். தொடர்ந்து அது உங்களுக்கு ஃபேவர் பண்ணும்னு மட்டும் நினைச்சிடாதீங்க. அந்த மோதிரம் பத்தி உங்களுக்கு சரியா தெரியாது. அதுக்கு பின்னால ஒரு கதையே இருக்கு."

"அப்டியா... என்ன கதை அது?"

"அந்த கதை தெரியணும்னா முதல்ல நான் மிஸ். வசந்தி இல்லை. மிஸஸ் வசந்தி ஸ்ரீராம்கறது தெரியணும்."

"வாட்... நீங்க கல்யாணம் ஆனவரா?"

"ஆமாம்... கல்யாணம் ஆகி இப்ப ஸ்ரீராமை ஒரு விபத்துல பலிகொடுத்துட்டு நிக்கற ஒரு விடோயர் நான்!"

tamilebooks.net

*"அப்படியா...?"*

*"ஆமாம்... மற்ற விஷயங்களை நான் உங்களுக்கு நேர்ல சொல்றேன். இன்னிக்கு ஈவினிங் விக்டோரியா லைப்ரரிக்கு முன்னால இருக்கற வில்சன் பார்க்குக்கு வாங்க... வராம இருந்து பெரிய அபாயத்துல சிக்கிக்காதீங்க. டொடக்!" வசந்தி மறுமுனையில் ரிசீவரை வைத்துவிட்டாள். கதிருக்கு ஏ.சி.யை மீறி வியர்த்திருந்தது. அதன்பின் நெடு நேரம் கைகளைப் பிசைந்தபடியே உட்கார்ந்திருந்தான்.*

*மிகமிகச் சாமர்த்தியமாக அச்சு அசலாக அந்த வைர மோதிரத்தை போலவே இன்னொரு மோதிரத்தை தேடிப் பிடித்துக் கொடுத்தும் எப்படி வசந்தி அதை போலி என்று கண்டு பிடித்தாள்?*

*ஆச்சரியம் அப்பி எடுத்தது.*

*குட்டு உடைந்த வேதனை நெஞ்சைப் பிசைந்தது. மாலை பார்க்கில் என்னவெல்லாம் சொல்லப் போகிறாளோ என்கிற பயம் மனசில் கபடி விளையாடியது.*

*தன் வேலையின் முதல் நாள் துவக்கத்தில் இப்படி ஒரு சங்கடமா?*

*'திருட்டு ராஸ்கல்' என்று உள்ளுக்குள் அவனை அவன் மனசே திட்டியது.*

## 8

**நல்ல ஜாதி நீலக்கல்லுக்கு அஷ்டமச் சனியின் ஆக்ரமிப்பை ஒழுங்குபடுத்தும் சக்தி இருப்பதை நான் புரிந்து கொண்டேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருவர் பூர்வ கர்மவினை காரணமாய் அஷ்டமச்சனியின் போது அவனது கடும் பார்வையால் பாதிக்கப்பட்டார். செய்யாத ஒரு திருட்டுக்கு செய்த பழியை சுமந்தார். உள்ளேகூட**

tamilebooks.net

தூக்கிப் போட்டு விட்டார்கள். அவருக்கு நீலக்கல்லை தந்து சனி காயத்ரியை லட்சம் தடவை ஜெபிக்கச் சொன்னேன். எண்ணி எட்டு நாட்கள் உள்ளே இருந்தார். எட்டாவது நாள் அவர் திருடியதாக சொன்ன பொருளை போலீஸாரே வேறு ஒரு திருடனிடம் இருந்து கைப்பற்றி னார்கள். அவரையும் வெளியே விட்டனர். அவர்மேல் குற்றம் சொன்னவர் பரிகாரமாக அவருக்கு அச்சாபீஸை வைத்துக் கொடுத்து அவர் தொழில் செய்ய அடிகோலி னார்.

முதலில் தண்டித்த சனி பின்னர் பரிசை தந்து வாழ்க்கையிலும் அவரை உச்சிக்கு கொண்டு போனான். இந்த நவரத்தின சாராவளியைக் கூட அவர்தான் தன் அச்சகத்தில் அச்சிட்டுக் கொடுத்தார்.

நல்ல நீலக்கல்லுக்கு அப்படி ஒரு சக்தி

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*புத்தகத்திலேயே மும்முரமாக இருந்தான் ஸ்ரீவத்ஸன். கிட்டத்தட்ட படித்து முடித்துவிட்டான். கற்களின் சக்தி, அதை பயன்படுத்தியவர்களின் அனுபவங்கள், கோவில் களில் அதை ஆபரணங்களில் புகுத்தி நன்மை கிடைக்க பெரியவர்கள் செய்து வைத்திருந்த ஏற்பாடுகள் எல்லாமே பிரமிப்பாக இருந்தது.*

*ஆனால் எந்த ரகசியமும் புத்தகத்தில் இருப்பதாக தெரியவில்லை. பொட்டுச்சாமி இருக்குமிடம் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது.*

*சென்னைக்கு வெளியே திருப்பதி போகும் வழியில் பிச்சாட்டூருக்கும் நாராயணவனத்துக்கும் நடுவில் ஒரு மலைப்பகுதி வருகிறது. அங்கே ஒரு அருவியும் இருக்கிற தாம். அந்த அருவியை ஒட்டி ஒரு ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டு அதில் இருப்பதாக ஒரு குறிப்பில் தெரியவந்தது.*

tamilebooks.net

இறுதியாக இவரிடம் தான் லலாட வைரம் வந்து சேர்ந்ததாக தாத்தாவின் டைரிக் குறிப்பு சொல்லிற்று. ஆனால் புத்தகத்தில் அதைப்பற்றி எதையும் குறிப்பிட வில்லை.

ஏன்?

ஸ்ரீவத்ஸன் யோசிக்கும்போது அவன் அம்மா ராஜலக்ஷ்மி சற்றே இருமியபடி வந்தாள்.

"அந்த புஸ்தகத்தை இன்னுமா படிச்சு முடிக்கல நீ?" -கேட்டாள்.

"என்னம்மா விஷயம்...?"

"சாப்பிட வாடா... சாதம் சூடா இருக்கும்போதே சாப்ட்டா தானே நன்னாருக்கும்."

"சாப்பாட்ட விடும்மா... தாத்தா நவரத்தினங்கள் பத்தி என்னமா எழுதியிருக்கார் தெரியுமா?"

"தெரிஞ்சிண்டு என்ன பண்ணப்போறே? வெட்டி வேலை."

"என்னம்மா அப்படி சொல்லிட்டே... இந்த புத்தகத்துல ஒரு ரகசியம் இருக்காம். தாத்தாவே சொல்லியிருக்கார். அதை கண்டுபிடிச்சா கிட்டத்தட்ட நூறுகோடிரூபாய் மதிப்புக்கு ஒரு விஷயம் கிடைக்கும்னு எழுதியிருக்கார்."

"ஆமா... பெரிய ரகசியம். இப்படி எழுதினதாலேயே அவர் சீக்கிரமா செத்துப் போனார். அதுதான் நான் கண்டது. அது தெரியுமா உனக்கு?"

-ராஜலட்சுமி புதியதாய் ஒரு தகவலுடன் அவனுக்கு அதிர்ச்சியளித்தாள்.

"என்னம்மா சொல்றே?"

tamilebooks.net

"அது ஒரு பெரிய கதை. உங்கப்பாக்குகூட தெரியாது. ஆனா எனக்கு தெரியும்."

"ஆச்சரியமா இருக்கே... என்ன அது?"

"லலாட வைரம்னு ஒரு வைரம்..."

"தெரியும். தாத்தா தான் அப்படி ஒரு பேரை வெச்சாராம்."

"அந்த வைரத்தை உன் தாத்தா கொஞ்நாள் இந்த ஆத்துலையும் வெச்சுருந்தார்.

"அம்மா... அதைத்தான்மா நானும் இப்ப தேட்றேன்."

"நீ தேடினா கிடைக்க அது என்ன சுண்டைக்காயா வெண்டைக்காயா? பலகோடி ரூபாய் மதிப்புள்ள வைரம் ஆச்சே?"

"நூறுகோடி ரூபாய் மதிப்புன்னு தாத்தா டைரில எழுதியிருக்காரே... அவ்வளவு ஏன் இந்த புத்தகத்துலையும் எழுதியிருக்காரே...!"

"அதேதான்... அது ஒரு மூணு மாசம் இந்த ஆத்துல இருந்தது... அதோட பலாபலனை தெரிஞ்சுக்கறதுக்காக உன் தாத்தா அதை பொட்டுச்சாமியார்ங்கற ஒரு சாமி யார்கிட்ட இருந்து வாங்கிண்டு வந்து வெச்சிருந்தாராம். இந்த விஷயம் ஆத்துல யாருக்கும் தெரியாது. அப்ப உன் தாத்தாக்கும் வயசுகிட்டதட்ட அறுபது இருக்கும்."

"என்னம்மா என்னைப்போலவே அப்பவும் ரொம்ப தாமசமா பொறந்தவரா?"

"ஆமாம்... உங்கப்பாவோட ஐம்பதாவது வயசுல நீ பொறந்தே. அதே போல உன் தாத்தாவோட ஐம்பதாவது வயசுலதான் உன் அப்பா பொறந்தார். இதெல்லாம் இந்த ஆத்து ராசி. விஷயத்தைக் கேளு..."

tamilebooks.net

"சொல்லு சொல்லு..." -ஸ்ரீவத்ஸன் ஆவலானான்.

"அவர் வைரத்தை பொட்டுச்சாமியார்கிட்ட இருந்து டெவ்லப் பண்றதுக்காகத்தான் வாங்கிண்டு வந்துருந்தார். சாமியாரும் நம்பி அதை இவரண்ட கொடுத்திருந்தார். அந்த மூணு மாசம் இந்த ஆத்துல என்னென்னமோ நடந்துதாம்."

"என்னென்னமோன்னா...?"

"சிலருக்கு வைரம் ஆகாது. சிலருக்குத்தான் அது ஆகிவரும். இந்த ஆத்துக்கு வைரம் ஆகாது. அதனால இந்த ஆத்தை படாதபாடு படுத்திடுத்து. அதாவது அப்பதான், உன் பாட்டி செத்துப்போனா... கொல்லைல இருந்த ஒரு டஜன் பசுமாடுகளும் வியாதி வந்து செத்துப்போச்சு. ஒரு நாய் வளர்த்துண்டு வந்தார். அதுவும் செத்துப்போச்சு. உனக்கு அத்தை ஒருத்தி இருந்தா. அவ தோட்டக் காரனோட ஓடிப்போனா. இப்படி வரிசையா நடக்கக் கூடாதது எல்லாம் நடந்தது. அதெல்லாம் சாதாரணமா நடக்கறதா இல்லை வைரத்தாலதானான்னு ஒரு சந்தேகம் உன் தாத்தாக்கு.

வைரம் வீட்ல இருக்கற விஷயமோ உன் பாட்டிக்கு, உன் அப்பாக்குன்னு யாருக்கும் தெரியாது. சரியா மூணுமாசம் கழிச்சு அதை திரும்ப அந்த சாமியாரண்ட ஒப்படைச்சுட்டதுக்கு பிறகுதான், ஓரளவு நல்ல காரிய மெல்லாம் நடக்க ஆரம்பிச்சுது. எனவே எல்லா சிக்கலுக்கும் வைரம்தான் காரணம்னு புரிஞ்சுண்டார். அதை அந்த பொட்டுச்சாமியார் சும்மா கொடுத்தாகூட வேண்டாம்கற நிலைக்கு வந்துட்டார். ஆனா உன் பாட்டியோ அந்த வைரத்தின் மேல் பயங்கரமா ஆசைப்பட்டா. அதை நாம விலைக்கு வாங்கிக்கலாம். பதிலுக்கு பொட்டுச்சாமி மடத்துக்கு கட்டிடம் கட்டிக் கொடுத்துடலாம்னா. ஏன்னா சாமியாருக்கு அந்த வைரம் தானமா வந்த ஒண்ணுதானே?

tamilebooks.net

ஆனா உன்தாத்தா ஒத்துக்கலை. இது என் பரம்பரையை ஒழிச்சுடும்னு சொன்னார். உன்பாட்டி அதெல்லாம் உங்க நம்பிக்கைன்னு சண்டை போட்டான்னா பாத்துக்கயேன்."

"அப்புறம்?" -ஸ்ரீவத்ஸன் மேலும் ஆர்வமானான்.

"ஒரு ஆச்சரியமான விஷயம் என்னன்னா உன் தாத்தா சொல்ற விஷயங்களை இந்த உலகமே நம்பினது. பாராட்டவும் செய்தது. ஆனா உன் பாட்டி மட்டும் ஏத்துக்கவே இல்லை. எப்பப் பார் ஏழாம் பொருத்தமா சண்டை போட்டுண்டே இருந்தா."

"சரிம்மா விஷயத்துக்கு வா... தாத்தா அந்த வைரத்தை பொட்டுச்சாமியார்கிட்ட திருப்பிக் கொடுத்தாரா?"

"பின்ன... கொடுக்காம இருப்பாரா... சத்யசந்தனாச்சே?"

"அப்ப அந்த வைரம் சாமியார்கிட்டதான் இருக்கா?"

"ஆமாம்.... அது அவரோட மடத்துக்குன்னு சொந்தம் ஆயிடுத்து."

"சரி... புத்தகத்துல ரகசியமாயிருக்குன்னு எழுதப்போய் தாத்தாவுக்கு பிரச்சினை வந்ததுன்னியே என்ன அது?"

"அது ஒரு பெரிய கொடுமை..."

"என்னம்மா.. சீக்கிரம் சொல்லு -பீடிகை போடாதே."

"இந்த வைரம் அந்த சாமியாரண்ட போகவும் கொஞ்ச நாள்ளயே அவர் சமாதியாயிட்டார்."

"ஐமின் செத்துட்டார்னு சொல்லு."

"ஆமாம். வைரத்தை உன் தாத்தா சாமியாரண்ட கொடுத்தாரா இல்லையான்னு ஒரு சந்தேகம் சிலருக்கு வந்துடுத்து."

'யார் அந்த சிலர்?"

tamilebooks.net

"பொட்டுச்சாமியோட சிஷ்யர் ஒருத்தர் மும்பைல இருந்தார். ரொம்ப சின்ன வயசு. ஆனா இன்னிக்கு அவருக்கு 90 வயசு இருக்கலாம். அவருக்கும் அவரைச் சார்ந்தவாளுக்கும் சந்தேகம் வந்துடுத்து. அவா வந்து வைரம் எங்கேன்னு உன் தாத்தாவை கேட்டா. தாத்தா கொடுத்துட்டதா சொன்னாராம். அப்படின்னா மடத்துல இருக்கணுமேன்னா? அது எனக்குத் தெரியாதுன்னுட்டா ராம். அவா நம்பலை. விடாம தொணப்பினா, உன் தாத்தாவுக்கே சந்தேகம் வந்துடுத்து. பொட்டுச்சாமி அதை வெச்சுண்டுருக்காரா இல்லையான்னு..."

"வெரி இன்ட்ரஸ்ட்டிங். அது என்னதான் ஆச்சு? எங்க போச்சு?"

"இந்த நிமிஷம் யாருக்கும் தெரியாது. அதுதான் உண்மை."

"சரி புத்தகத்துல ஒரு ரகசியம் இருக்கு. அதோட மதிப்பு நூறு கோடின்னு தாத்தா சொல்லியிருக்காரே அது என்ன?"

"அதை புத்தகத்தை படிச்ச நீன்னா கண்டுபிடிக்கணும்."

"படிச்சேன். ரகசியம் இருக்கறதாவே தெரியலை."

"ரகசியம்கறது பளிச்சுன்னு தெரிஞ்சா அது ரகசியமி ல்லை ஸ்ரீவத்ஸா. அடடா இதுகூட எனக்கு தெரியாம போயிடுத்தேன்னு நினைக்கற மாதிரிதான் அது இருக்கும்."

"என்னம்மா நீ... என் க்யூரியாசிடியை கிளப்பி விட்டுறே? சரி அந்த மும்பை மடத்துக்காரர் அப்புறம் என்ன பண்ணினார்?"

"புத்தகத்தை காட்டி இதுல ஒரு ரகசியம் இருக்கறதா சொல்லியிருக்கீங்களே அது என்ன சொல்லுங்கோன்னு டெய்லி கேட்டுண்டே இருந்தா."

tamilebooks.net

"தாத்தா கடைசிவரை சொல்லலையா?"

"அதை நீங்களே கண்டு பிடிச்சுக்கோங்கோன்னுட்டார்."

"அது அந்த லலாட வைரம் பத்திதானே?"

"ஆமாம். அது இருக்கற இடத்துல என்னல்லாம் நடக்கும்கறதுதான் அதுல இருக்கற இம்பார்ட்டன்ட் மேட்டர். அதை படிச்சுட்டு அப்படி எல்லாம் எங்க இருக்குன்னு தேடுதேடுன்னு தேடினார். உன் தாத்தாவும் பார்த்தார். யாருக்கெல்லாம் புத்தகம் கொடுத்தாரோ அவாகிட்ட இருந்தெல்லாம் திருப்பி கேட்டார். கைல இருந்த சொச்ச புத்தகத்தையும் போட்டு ஒருநாள் கொளுத்திப்பிட்டார்.

"ஐய்யய்யோ..."

"ஐய்யய்யோன்னா... அவரால தொந்தரவு தாங்க முடியல. விஷயம் பூமராங் மாதிரி தன்னைத் தாக்கும்னும் அவர் எதிர்பார்க்கவில்லை."

"அப்பா ஃபாதர் கேபிரியேல்கிட்ட மட்டும் எப்படி புத்தகம் இருந்தது?"

"லைப்ரரிக்கு கொடுத்த சில புத்தகங்களை அவரால திரும்ப வாங்கமுடியலை. ஏன்னா அப்ப அதை சிலர் படிக்க எடுத்துண்டு போயிருந்தாளாம். அதனால அதுல சில புத்தகங்கள் தப்பித்தது. அதுதான் ஃபாதர்க்கு கிடைச்சு அவர் பாதுகாப்பா வெச்சிந்துருக்கணும்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன..? உன் தாத்தாவே அந்த லலாட வைரம் எங்க இருக்கும்-அந்த பொட்டுச்சாமி வேற யாருக்காவது கொடுத்துருக்காரான்னு விசாரணை பண்ணிண்டு தேட ஆரம்பிச்சார். அப்படி தேட்ற ஒரு

tamilebooks.net

சந்தர்ப்பத்துலதான் ஆக்சிடெண்ட்ல அநியாயமா செத்துப் போனார்.."

"அப்ப கடைசி வரை தாத்தாவாலேயே அதை கண்டுபிடிக்க முடியலையா?"

"அப்படித்தான் நான் நினைக்கிறேன்."

"என்னம்மா நீ குழப்பு குழப்புன்னு குழப்பறியே..."

"நான் ஒண்ணுத்தையும் குழப்பலை. என்ன நடந்ததோ அதை சொல்லியிருக்கேன்."

"சரி திரும்ப கேக்கறேன். கரெக்டா சொல்லு. தாத்தா யார்?"

"ஒரு நவரத்தின ஆராச்சியாளர்!"

"அவர் எழுதின புத்தகம் பேர்?"

"நவரத்தின சாராவளி!"

"குட்.... அதுல அவர் ஒரு ரகசியம் இருக்குன்னு எழுதியிருந்தாரா இல்லையா?"

"ஆமாம். எழுதியிருந்தார். புத்தகமும் இதோ உன் கைல இருக்கு."

"ரகசியம் இருக்குன்னு எழுதினவருக்கு அந்த ரகசியம் தெரிஞ்சிருக்கணும்தானே?"

"நிச்சயமா?"

"அப்படி தெரிஞ்சவரே கடைசிவரை லலாட வைரத்தை கண்டுபிடிக்க முடியலைன்னா என்ன அர்த்தம்?"

"ரகசியத்துக்கும் லலாட வைரத்துக்கும் சம்பந்தம் இல்லையோ என்னவோ?"

tamilebooks.net

"அப்ப நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு ரகசியம் இதுல இருக்குன்னு சொன்னது அந்த வைரத்தை வெச்சு இல்லேங்கறியா?"

"வைரத்தை வெச்சுதான்னா அதை அவர் கண்டு பிடிச்சிருப்பாரே. தேடி அலையும் போது ஆக்சிடெண்ட்ல செத்துப் போயிருக்க மாட்டாரே?"

"நீ அப்படி வர்றியா.. அப்ப வைரம் எங்க இருக்குங்கறது ஒரு ட்ராக். நூறு கோடி ரூபா மதிப்புள்ள ரகசியம் வேற ட்ராக். அப்படித்தானே?"

"அப்படித்தான் இருக்கணும்."

"அப்ப அந்த நூறுகோடிரூபா விஷயம் என்னவா இருக்கும்?"

"இந்த கேள்வியைக் கேட்டு மண்டை சிறுத்துப் போச்சு பலருக்கு. க்விஸ் பசல் (QUIZ PUZZLE) மாதிரி மண்டையைப் பிச்சிண்டாச்சு. செத்துப்போன உன்தாத்தா வந்து இதுக்கு பதில் சொன்னாதான் உண்டு. நீ சாப்பிடவரையா?"

- ஸ்ரீவத்ஸன் யோசித்தபடியே சாப்பிடச் செல்ல காலெடுத்தான். அதே சமயம் வீட்டு போனில் சிணுங்கல். போய் காதைக் கொடுத்தான்.

"மிஸ்டர் ஸ்ரீவத்ஸன்! நான் சிவராம் பேசறேன்."

"ஹலோ சார்... வந்துட்டீங்களா?"

"வந்துகிட்டே இருக்கேன். அதுக்குத்தான் போன் பண்ணேன்."

"வெல்கம் வெல்கம்..."

"புத்தகம் ரெடியா இருக்குல்ல...?"

tamilebooks.net

"இருக்கு... வாங்க...' -போனை கத்தரித்தான். சாப்பிடப்போனான். வெண்டை வத்தல் காரக்குழம்பு, பொன்னாங்கண்ணிக் கீரை கூட்டு, கேரட் சாலட், அம்மாமி அப்பளம்!

கும்மென்ற வாசம்... கமகமத்தது. சாப்பிடத் தொடங்கினான். ராஜலக்ஷ்மி கேட்டாள். "யார் போன்ல?"

"அந்த மும்பைக்காரர்!"

"யார் அது...? நேக்கு தெரியாதே..."

"அதாம்மா சிவராமன்னு ஒரு டயமண்ட் மெர்ச்சன்ட் தாத்தா புஸ்தகத்தை வேத புஸ்தகமா நினைச்சிண்டு அலையறவர்."

"தெரியாதுடா.. அவரைப்பத்தி நீ இப்பதானே சொல்றே?"

"அப்பா உன்னண்ட சொல்லல...?"

"சொல்லலியே..."

"சரி தெரிஞ்சு எண்ணத்த பண்ணப்போறே?"

"அதுவும் சரிதான். ஆனா மும்பைக்காரன்ன உடனே கடுக்குங்கறது."

"ஏன்? மும்பைக்காரான்னா ஏன் கடுக்குங்கறது...?"

"அங்க இந்த பொட்டுச்சாமி சிஷ்யர் இருக்கார். அவர்தான் இந்த வைரத்துக்காக அலைபாஞ்சவர்."

"இவர் வைரவியாபாரின்னா...?"

"சரி இவருக்கு எதுக்கு அந்த புத்தகம்?"

"வைர வியாபாரிகளுக்கு இது அவசியம் தேவைம்மா. எவ்வளவு டீடெய்ல்ஸ் தெரியுமா உள்ளுக்குள்ள? 40

tamilebooks.net

வருஷம் ஆராய்ச்சி பண்ணி தாத்தா எழுதியிருக்கார். ஆனா அதெல்லாம் சைன்ஸ் மாதிரி கட்டாயம் ப்ரூஃப் பண்ற மாதிரி இல்ல. முழுக்க முழுக்க நம்பிக்கை சார்ந்து இருக்கு."

"அது சரி அவருக்கு எப்படி உனக்கு புத்தகம் கிடைச்சது தெரியும்?"

"நான் தான் போன் பண்ணி சொன்னேன். ஏன்னா... இந்த புத்தகத்துக்கு 50,000னா தரேன்னுருக்கார்..."

"என்னது? 50,000மா?" -ராஜலக்ஷ்மி வாயைப் பிளந்தாள். "ஏம்மா? நம்ப முடியலையா?"

"அப்படி இல்லடா... மும்பைக்காரங்கறே-50,000 தரேங்கறாங்கறே. எனக்கு சந்தேகமா இருக்குடா."

"என்ன சந்தேகம்...?"

"அவர் வரட்டும். நான் பேசிட்டு சொல்றேன்."

-அதன்பின் இருவரும் சாப்பிட்டு முடித்தனர். சிவராமன் ஒரு வாடகைக் காரில் வாசலில் வந்து இறங்கினார். ஸ்ரீவத்ஸன் வரவேற்றான்.

"அவர் எப்படி இருக்கார்?" -நலம் விசாரித்தார்.

"அவர் வெளியே வரது கிடையாது. படுத்த படுக்கை..."

"ஓ... கூடிய சிக்கிரம் சரியாக பிரார்த்தனை பண்ணிக்கறேன். புத்தகத்தை கண்ணுல காட்றீங்களா?"

- ஸ்ரீவத்ஸன் உடனே புத்தகத்தை நீட்டினான் புரட்டியவர் கண்களில் விளக்கெரிந்தது.

"ஒண்டர்ஃபுல்- ஒண்டர்ஃபுல்." என்றது உதடு.

"அப்படியே நீங்க படிச்சுட்டீங்களா?" -என்றார்.

tamilebooks.net

"இல்ல... இதுல நான படிக்க என்ன இருக்கு?" என்று ஒரு பொய்யைச் சொன்னான் ஸ்ரீவத்ஸன்.

"அதுவும் சரிதான்..." - என்றவர் 50,000த்தை எடுத்து நீட்டினார்.

"ஒரு நிமிஷம்." - ராஜலக்ஷ்மி அவரை தன்பக்கம் இழுத்தாள்.

"என்னங்கம்மா...?"

"மும்பைய்ல உங்களுக்கு ஸ்வாமி சதானந்த மகராஜை தெரியுமோ?"

"தெரியும்... அவரை தெரியாதவங்களும் உண்டா என்ன?"

"அப்படியா... சந்தோஷம்."

அதற்குமேல் ராஜலக்ஷ்மி மேற்கொண்டு பேசவில்லை. அதே சமயம் சிவராமன் முகத்திலும் ஒரு குட்டிசலனம். அத்துடன் "அப்ப நான் கிளம்பறேன்..." என்றபடி புறப்பட்டார்.

அதிகபட்சம் 10 நிமிடம்கூட ஆகவில்லை. புத்தகம் கைமாறி ரூபாய் 50,000 இடம் மாறியது. சிவராமனின் கார் விலகிய அடுத்த நொடி ராஜலக்ஷ்மி சொன்னாள்.

"ஸ்ரீவத்ஸா! இந்த ஆள் புத்தகத்தை படிச்சுட்டு வைரத்தை தேடப்போறான். அனேகமாக பொட்டுச்சாமி ஆஸ்ரமத்துக்கு போவான். எழுதிக்கோ."

- அவள் சொன்னதில் அசாத்ய அழுத்தம்!

ஸ்ரீவத்ஸன் அம்மாவை உற்றுப்பார்த்தான். பார்வையே 'எதைவைத்து நீ அந்த முடிவுக்கு வந்தாய்' என்று கேட்டது.

tamilebooks.net

"எதை வெச்சுண்டு இப்படி சொல்றேன்னு பாக்கறியா? பொட்டுச்சாமியாரோட சிஷ்யர்தான் இந்த மும்பை சாமி யார். அவரை இந்த வைர வியாபாரிக்கு தெரியும்னா என்ன அர்த்தம்?"

"அவர்தான் அப்பவே தேடி கிடைக்கலையே...! இன்னுமா அதே வேலையா இருப்பார்னு நீ நினைக்கறே?"

"50,000 ரூபாய் கொடுத்து புத்தகத்தை வாங்கிண்டு போறான்னா நிச்சயமா அந்த ரகசியத்தை கண்டு பிடிக்கறதுக்காகத்தான் இருக்கணும்.

"எனக்கும் தெரியல-உனக்கும் தெரியல-அவாளுக்கு மட்டும் எப்படிம்மா தெரியும்! அந்த புக்குல ரகசியமெல்லாம் இல்லைம்மா..."

"திரும்பவும் சொல்றேன். ரகசியம்கறது சுலபமா கண்டுபிடிச்சுட்ற மாதிரியோ இல்லை பளிச்சுன்னு தெரியற மாதிரியோ நிச்சயமா இருக்காது. அது ஒரு கூட்டல் கழித்தல் கணக்கு. இதை ஞாபகத்துல வெச்சுண்டு பேசு."

"அப்ப ரகசியம் இருக்குங்கிறியா இதுல?"

"இருக்கு. ஆனா கண்டுபிடிக்கற திராணிதான் உனக்கோ இல்லை எனக்கோ இல்லை."

- ராஜலக்ஷ்மி சொல்லிவிட்டு விலகினாள். ஸ்ரீவத்ஸனுக்குள் திரும்பத்திரும்ப அவள் சொன்னதே எதிரொலித்தது.

புத்தகத்தின் ஒரிஜினல் காப்பி கையில் இருந்தது. ஜெராக்ஸை தான் சிவராமுக்கு விற்றிருந்தான். அந்த ஒரிஜினலைப் புரட்டினான். விஸ்தாரமான முன்னுரை, பின் நவரத்னங்கள் பற்றிய விளக்கம். அவைகளின் பலாபலன்கள்-இதனுள் எங்கே இருக்கிறது நூறுகோடி ரூபாய் ரகசியம்?

tamilebooks.net

## 9

ஒன்பது ரத்தினங்களைப் பற்றி சிந்தித்து அவைகளின் சக்தியைப் பற்றியும் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ள நான் அதிர்ஷ்டம் பற்றியும் யோசித்துப் பார்த்தேன். அது இஷ்டத்துக்கு வருவதால்தான் அதற்கு அந்த பெயர் வந்ததாக சொல்வார்கள். அதுதான் உண்மையோ என்று நான் எண்ணிப் பார்த்தது உண்டு. ஆனால் சில கிரகங்கள் சேரும் போது நேரிடும் ஒரு விளைவு அது என்றார் திருக்கோவிலூர் சந்தானகோபாலன். இவர் ஒரு தேர்ந்த ஜோதிடர். என் நவரத்தினக்கற்களின் ஆராய்ச்சிக்கு பேருதவி புரிந்தவர்.

சுருக்கமாய் சொல்வதானால் அதிர்ஷ்டம் என்பதும் கர்ம பலன் என்பதும் ஒன்று என்றார். ஒருவன் மண்ணோடு மண்ணாக கிடக்கும் போதும் அவனுக்கு போய்சேர வேண்டியது போய்ச்சேரும் என்றார்.

இதற்கான ஒரு கதையையும் சொன்னார். ஒருவனை ஒரு பணக்காரர் மிகப்பெரிய எதிரியாக பாவித்தார். அவனை சிலரது துணையோடு அடித்து மயக்கமடையச் செய்துவிட்டார். ஆனால் அவன் இறந்துவிட்டதாகத் தவறாகக்கருதி அவனைக்குழி தோண்டிப் புதைக்க முயன்றார். அப்போது அவரது கையில் ஒரு வைரமோதிரம் இருந்தது. அது புதைக்கும் முயற்சியில் கழன்று அந்த குழியில் அவனோடு விழுந்துவிட்டது. அதே சமயம் ஒரு கூட்டம் அந்தபக்கம் வரவும் பயந்து போய் புதைப்பதை அரைகுறையாக செய்துவிட்டு ஓடி விட்டார். கூட்டமாய் வந்தவர்கள் குழியில் புதைக்கப்பட இருந்தவனைப் பார்த்து ஆச்சரிப்பட்டனர். அதே சமயம் அவனது புருவம் அசைவதைப் பார்த்து உயிருடன் இருப்பதை உணர்ந்து அவனை காப்பாற்றினர். அப்போது அந்த வைரமோதிரம் கண்டெடுக்கப்பட்டு அது

tamilebooks.net

அவனுடையதாக இருக்க வேண்டும் என்று அவனுக்கு அணிவித்து மருத்துவ சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்தனர்.

அவனும் பிழைத்துக்கொண்டான். பிழைத்துக் கொண்டவன் கையில் வைரமோதிரம். அதே சமயம் புதைக்க முயற்சி செய்த பணக்காரரோ ஒரு விபத்தில அடிபட்டு இறந்தும் போனார். பிழைத்தவனோ பிறகு பெரிய பணக்காரன் ஆனான் என்றார்.

இது மேலோட்டமாக பார்த்தால் அதிர்ஷ்டம். ஆனால் இதன் பின்னே கர்மபலன் இருக்கிறது என்றார். உண்மைதான். கிடைக்கவேண்டும் என்று ஒன்று இருந்தால் அது கிடைத்தே தீரும். கிடைக்கக்கூடாது என்றால் எவ்வளவு முயன்றாலும் கிடைக்காது. அதற்கேற்ப ஒவ்வொருவருக்கும் சம்பவங்கள் நிகழும்.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீலிவத்ஸவா.*

## *வில்சன் கார்டன்*

*வசந்தி போனில் சொன்னதைப் போலவே அங்கு வந்து காத்திருந்தான் கதிர். வசந்தியும் வந்து சேர்ந்தாள். அவளை நேருக்குநேர் பார்க்க என்னவோ போல் இருந்தது கதிருக்கு.*

*அவன் அமர்ந்திருந்த சிமெண்ட் பெஞ்சிற்கு எதிரில் உள்ள பெஞ்சில் அமர்ந்தவள் அவனையே உற்றுப்பார்த்தாள்.*

*"அப்படிப் பாக்காதீங்க வசந்தி. எனக்கு சங்கடமா இருக்கு." –அவன் பேச்சைத் தொடங்கினான்.*

*"உங்களை நினைச்சு எனக்கு சிரிக்கறதா அழறதான்னே தெரியலே..." – இது அவள்.*

*"ப்ளீஸ்... வந்த விஷயத்தை சொல்லுங்க."*

*"அது சரி எங்க அந்த மோதிரம்?"*

tamilebooks.net

அவன் அதை அவளிடம் விரலிருந்து உருவி நீட்டினான்.

"போட்டுங்குங்க. இதை வாங்கிட்டு போறதுக்காக நான் வரலை. சில உண்மைகளை சொல்றதுக்காகத் தான்' வந்தேன்.

அவன் அவளையே வெறித்தான். அதில் அதீத ஆச்சரியம்.

"மனுஷன்னா பேராசை புடிச்சவன்னு ஆயிடிச்சு. நீங்களும் வி:திவிலக்கில்லை அதுக்கு..."

"ப்ளீஸ் வசந்தி... இதை சொல்லத்தான் வந்தீங்களா?"

"இதையும் சொல்ல வந்தேன். மிஸ்டர் கதிர். இன்னொரு சேதி-நீங்க மட்டும் பேராசைக்காரர் இல்ல. என் தாத்தாவும் ஒரு பேராசை பிடிச்சவர்தான்!"

கதிர் அவளை ஒரு திடுக்கிடலோடு பார்த்தான். அவள் தொடர்ந்தாள்.

"நீங்க திருடியிருக்கற இந்த வைரமோதிரத்துக்கு எப்பவுமே ஒரு ராசி - அது யாராலையாவது எப்பப்பார் திருடப்பட்டுகிட்டே இருக்கும்..."

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று அவனுக்கு புரியவில்லை. குழப்பத்தை முகத்தில காட்டினான்.

'நான் சொல்றது உங்களுக்கு புரியலையா?"

"ஆமாம்!"

"சரி புரியும்படியாவே சொல்றேன். உங்ககிட்ட இருக்கற இந்த வைரம் எங்களுக்கு எப்படி வந்ததுன்னு தெரியுமா?"

"யாரோ ஒரு சாமியார் உங்கப்பாவுக்கு கொடுத்தாக உங்கப்பாதான் சொன்னார்."

tamilebooks.net

"அந்த சாமியார் கொடுக்கலை. அது எங்க தாத்தாவால திருடப்பட்டது!"

"நிஜமாவா?"

"ஆமாம்... என் தாத்தா பேர் தண்டபாணி. பொட்டுச்சாமியார் ஆஸ்ரமத்துல காரியதரிசியா இருந்தார். அந்த சாமியாருக்கு இந்த வைரம் தானமா தரப்பட்டது... மும்பைல இருக்கற ஒரு தொழிலதிபர்தான் இதை சாமியாருக்கு தானமா கொடுத்தவர். பெரிய அளவு அதிர்ஷ்டத்தை அவருக்கு கொடுத்த இந்த வைரம் கூடவே சொல்ல முடியாதளவுக்கு வியாதிகளையும் கொடுத்தது. வியாதிக்கு காரணம் இந்த வைரம்னு தெரிஞ்சுகிட்ட அந்த தொழிலதிபர் இதை பொட்டு சாமியாருக்கு தானமா கொடுத்து வியாதியில் இருந்து மீண்டதா சொல்வாங்க..."

–வசந்தி ஒரு பழைய கதையின் பக்கங்களை மிகச் சுருக்கமாக புரட்டினாள்.

"என்னால நம்பவே முடியலை..." –என்றான் கதிர்

"எதை?"

"வைரம் வியாதியையெல்லாமா தரும்?"

"அது உடம்பு ராசியை பொறுத்ததுன்னு சொல்வாங்க."

"இத்தனூண்டு கல்லுக்குக்கு இப்படி ஒரு சக்தியா?"

"அளவுக்கும் விளைவுகளுக்கும் எப்பவுமே சம்மந்தம் கிடையாது கதிர். விஷம் ஒரு சொட்டுதான். அது பல உயிர்களை போக்குமில்லையா?"

"சரி இப்ப எதுக்கு இதை எல்லாம் சொல்றீங்க. நான் இதை உங்களுக்கே திருப்பிக் கொடுத்துட்றேன்."

"வேண்டாம். இது எங்களுக்கு வேண்டாம். இதால நான் பல சிக்கல்களை சந்திச்சுகிட்டிருக்கேன். உங்க

tamilebooks.net

வரையில ராசியாயிட்ட இது உங்ககிட்டையே இருக்கட்டும். அதே சமயம் எச்சரிகையாகவும் இருங்க."

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு. இதை சொல்லத்தான் கூப்டீங்களா?"

"இல்லை. இன்னொரு முக்கியமான விஷயமிருக்கு.

"என்ன வசந்தி."

"வைரத்தை நீங்க திருடிட்ட உண்மை என் அப்பாவுக்கு தெரியாது. அவர் உங்களை கூப்பிட்டு என் கல்யாணம் பத்தி பேசலாம்."

"உங்க கல்யாணம் பத்தி எதுக்கு என்கிட்ட பேசணும்?"

"உங்களை மாப்பிள்ளைன்னு முடிவு செய்துட்டா உங்ககிட்டதானே பேசணும்?"

"என்ன சொல்றீங்க வசந்தி?"

"மிஸ்டர் கதிர்... சும்மா ரோட்ல போய்கிட்டிருந்த உங்களுக்கு எங்கப்பா ஒண்ணும் சும்மா உதவி செய்துடலை. என்னை மனசுல வெச்சுகிட்டுதான் உதவி செய்தாரு."

"இது அடுத்த சர்ப்ரைஸ்..."

"நீங்களே யோசியுங்க. ஒண்ணேகால் லட்சம் மதிப்புள்ள இந்த வைரத்தை தெருவுல போற ஒருத்தரை கூப்பிட்டு யாராவது தருவாங்களா?"

"அப்ப அது சுயநலத்துக்காகவா?"

"ஆமா... உங்களுக்கு நல்ல வேலை கிடைச்சா வந்து நன்றி சொல்ல மாட்டீங்களா... அதுக்கு காரணமான வைரமோதிரம் உங்ககிட்டையே இருந்தா பெட்டரா இருக்கும்னு ஃபீல் பண்ணமாட்டீங்களா?"

tamilebooks.net

"அதனால?"

"வைரமோதிரம் வேணும்னா என் மகளை மனைவியாக்கிக்கணும்னு சொல்றதுதான் அவரோட பிளான். ஆனா நீங்க வேற மாதிரி முந்திகிட்டீங்க."

"உங்களுக்கு மாப்பிள்ளையா கிடைக்கமாட்டாங்க? இப்படியா முயற்சி செய்யணும்?"

இந்த மாதிரி கேள்விக்கு மட்டும் எப்பவும் பதிலே கிடையாது. என்ன இல்லைன்னு திருடினீங்க. அந்த புத்தியை என்னன்னு சொல்றது?

அப்படித்தான் இதுவும்... அதோட நான் ஒரு விடோயர். அத நீங்க மறந்துட்டீங்க."

"ஓ... அ'யம் சாரி..."

"சாரியோ இல்லை சம்மதமோ நீங்க எதைச் சொன்னாலும் ஏத்துக்க முடியாது. சுயநலத்துக்காக நீங்க எதையும் செய்யறவர்ங்கறது என் அபிப்ராயம். என்னால உங்களைப்போல் ஒரு சுயநலமியை நேசிக்கவே முடியாது. கல்யாணம் செய்துக்க முடியாது.

அப்பா கூப்பிட்டு பேசறதுக்கு முந்தி அந்த வீட்டை காலி பண்ணிடுங்க.

நீங்க திருடின வைரமோதிரம் உங்களுக்கு நல்லது செய்தாலும் கெட்டது செய்தாலும் இனி அது உங்கபாடு.

இதை சொல்லத்தான் கூப்பிட்டேன்." - வசந்தி படபடவென்று சொல்ல வேண்டியதை சொல்லி முடித்துவிட்டு புறப்பட்டாள்.

கதிருக்கு முகம் செத்துவிட்டிருந்தது.

மோதிரத்தைப் பார்த்தான்.

tamilebooks.net

'அந்தப் பெண் அவன் கேரக்டரை இகழ்ந்துவிட்டுப் போகிறாள். சாரி என்று சொல்லி கேரக்டரில் படிந்த அழுக்கை நீக்கிக் கொள்ளாமல் இப்படி வேடிக்கையா பார்ப்பது?' அவன் மனமே அவனிடம் கேள்வி கேட்டது!

அதுதான் நல்லவேலை கிடைத்து விட்டதே... இன்னும் எதற்கு இது? போதும். இதை அவளிடமே திருப்பிக் கொடுத்துவிடுவோம். குறைந்த பட்சம் திருட்டுக்கு ஒரு பரிகாரமாவது தேடிக்கொள்வோம்.'

முடிவோடு நிமிர்ந்து அவளைக் கூப்பிடுவதற்காக பார்த்தான். அவள் ஒரு ஆட்டோவில் ஏறியிருக்க அதுவும் புறப்பட்டு விட்டிருந்தது.

"சரி... வீடு தேடிப்போய் அவள் அப்பாவிடமே இதைக்கொடுத்து காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொள்வோம்!'

ஒரு முடிவுக்கு வந்தான். எழுந்து வெளியே வந்தான். எதிரில் விக்டோரியா லைப்ரரி. மனச்சலனத்துக்கு எதையாவது படித்தால் சற்று ஆறுதலாக இருக்கும் என்று தோன்றியது. உள்ளே நுழைந்தான்.

முகப்பில் ஒரு அறிவிப்புப் பலகை. அதில் ஒரு அறிவிப்பு.

"இந்த நூலகத்து புத்தகங்கள் நாளை ஞாயிறன்று ஏலம்விடப்பட உள்ளன. விரும்புகின்றவர்கள் நேரில் வரவும். உறுப்பினர்கள் வாசிக்க எடுத்துச் சென்றிருந்த புத்தகங்களை தயவு செய்து இன்று மாலைக்குள் திருப்பிக் கொடுத்துவிடவும்."

–அறிவிப்பை வாசித்தவன் உள்ளே நுழைந்தான்.

அந்த நாளைய தோசைக்கல் போன்ற லண்டன் கடிகாரத்தில் மணி ஆறாகி விட்டிருந்தது.

tamilebooks.net

ஒரு மேஜைமேல் ஃபாதர் ஒருவர் திரும்பிய புத்தகங்களைப் பார்த்து குறித்தபடி இருந்தார்.

அதில் அவன் பார்வையில் படும்படி பளிச்சென்று தெரிந்தது ஸ்ரீவத்ஸவாவின் அதே புத்தகம்.

*'நவரத்தின சாராவளி!'*
*'40 வருட ஆய்வு ரகசியங்கள்,'*
*ஸ்ரீவத்ஸவா.*

-என்கிற பழுப்பேறிய அட்டையே சுண்டி இழுத்தது.

"எக்ஸ்யூஸ்மீ ஃபாதர். நான் இதை படிச்சுட்டு தரலாமா?"

"வித் ப்ளெஷர்!" என்றார் ஃபாதர். எடுத்துக்கொண்டு வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்தான். ஆவலாக வாசிக்கத் தொடங்கினான். முதல் பக்கத்தை அடுத்து இரண்டாவது பக்கத்திலேயே பொட்டுச்சாமியாரின் படம். அந்த கறுப்பு வெள்ளைப்படம் சட்டென்று அருணாசலம் வீட்டில் பார்த்த படத்தோடு அவன் நினைப்பை இணைத்தது. ஆச்சரியமாகிப்போனது.

'இந்த ஆய்வு நூலை மகான் பொட்டுச்சாமி அவர்களுக்கு சமர்பிக்கிறேன்' என்று புகைப்படத்தின் கீழ் ஒரு குறிப்பு. கதிரை ஆர்வம் தொற்றிக்கொண்டது.

## 10

"நவரத்தினக்கற்களை எப்பொழுதும் தங்கத்தில் பதித்து அணிவதே சிறந்தது. தங்கம் குருவினுடைய ஆதிபத்யத்தை உடையது. கற்களின் சக்தியை அதன் கதிர் வீச்சை முழுமையாகவும் வளமையாகவும் 'வெளிப்படுத்த ஆதாரமாய் இருக்கும். வெள்ளி சுக்ர மண்டலக் கதிர் உலோகமாகும். இது கற்களின் கதிர் வீச்சை சற்று சிதைத்து

tamilebooks.net

அனுப்பும். ஜாதகத்தில் சுக்ரன் உச்சம் பெற்றிருப்பின் அந்த ஜாதகரை பாதிக்காது. இருப்பினும் நானறிந்த வரையில் தங்கமே சாலச் சிறந்தது! நல்ல விருந்தை நல்லவிதமாகவும் பரிமாறுகின்ற மாதிரி கற்களை நல்ல உலோகத்துடன் இணைத்துக் கொள்வதும் அவசியம்.

*–ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

**பை**குல்லா துர்க்கா பீடம்.

சிவராமன் கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் பார்த்து அஞ்சலிமாதா ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"இதுதான் ஸ்வாமிஜி தேடின புத்தகமா?"

"ஆமாம் மாதஜி... என்னுடைய வைர வியாபாரத்துக்கு இது துணையாக இருக்கும்னு சொல்லித்தான் வாங்கிட்டு வந்துருக்கேன். இது இருந்தா அந்த ரகசியத்தைக் கண்டு பிடிச்சு சொல்லிடுவேன்னு ஸ்வாமிஜி சொல்லியிருந்தார். நான் படிச்சவரைல எந்த ரகசியமும் எனக்கு பிடிபடலை. ஸ்வாமிஜிதான் அதைக் கண்டு பிடிச்சு சொல்லணும்."

"வாங்க போய் ஸ்வாமிஜிகிட்டையே இதைக் கொடுத்து அது என்னன்னு கேப்போம்."

–அஞ்சலி மாதா சிவராமனை ஸ்வாமிஜீ தியானம் செய்யும் பாதாள அறைக்கு அழைத்துச் சென்றாள். போகும்போது ஆதித்தனும் சுந்தரமும் வரவில்லையா என்று கேட்டாள்.

"நான் ஏர்போர்ட்ல இருந்து நேரா இங்க வந்துட்டேன். அவங்களுக்கு இன்னும் தகவல் கொடுக்கலை மாதாஜி..." –என்றார் சிவராமன்.

"எப்படியோ புத்தகத்தை கொண்டு வந்துட்டீங்க..." –அவளிடம் பாராட்டு.

tamilebooks.net

"எல்லாம் ஸ்வாமிஜி அனுக்ரகம் மாதாஜி." அவர்கள் இருவரும் பேசியபடி வருவது அறையில் அமர்ந்திருந்த சுவாமிஜி காதிலும் விழ பட்டு வஸ்திரத்தால் மூடியிருக்கும் உடலோடு இருவரையும் பார்த்தார்.

சிவராமன் அவரை சமீபித்த நொடி சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினார். பின் எழுந்திருந்து புத்தகத்தை நீட்டினார். புத்தகத்தை பார்க்கவும் சுவாமிஜிக்கு கண்கள் இரண்டும் அகண்டு விரிந்தன.

புத்தகத்தின் பக்கங்களை மளமளவென்று புரட்டினார். சட்டென்று ஒரு கட்டத்தில் முகம் மாறியது. ஒரு குறிப்பிட்ட பக்கத்தை மட்டும் திரும்பத்திரும்ப படித்தவர் கைகளை கூப்பியபடி நிமிர்ந்தார். சிவராமனையும் ஏறெடுத்தார்.

"சுவாமிஜி... என்னால எதையும் கண்டுபிடிக்க முடியலை. உங்களால முடிஞ்சுதா?" - சிவராமன் பணிவாகக் கேட்டார்.

"இந்தா இந்த பக்கங்களைப் படி..." -ஸ்வாமிஜி குறிப்பிட்ட பக்கத்தைக் காட்டினார்.

அதில்...

"வைரத்தை வைத்து நான் ஆய்வு செய்வதற்கு மகான் பொட்டு ஸ்வாமிகள் பெரிதும் காரணமாயிருந்தார். பொதுவில் மகான்களுக்கு ரசமணிகள் பேருதவி செய்யக்கூடியவை. அதை அவர்கள் இடுப்பில் கட்டியபடி யோக நிஷ்டைகளும், யோகாப்பியாசங்களும் புரிவார்கள். பிரிந்தால் ஒன்று படுத்த முடியாத பாதரசத்தை பிரியாதபடி கெட்டிக்க வைத்து பல மூலிகைச் சாறுகளைக் கொண்டு கட்டுவதே ரசமணியாம்.

இது சரீரத்தின் மின்சாரத்தை, வெப்பத்தை உகந்த அளவு நிறுவுவதாகும். இத்துடன் லலாடவைரம் சேர்ந்ததில்

tamilebooks.net

தன்னால் குண்டலினியோகப் பயிற்சியை அநாயசமாய் செய்ய முடிந்தது என்று கூறிய பொட்டு ஸ்வாமிகளுக்கு அந்த பெயர் வந்த காரணத்தையும் நான் பின்னர் அறிந்தேன்.

அவரை தரிசிக்கையில் நமது நெற்றிப் பொட்டுத் திறந்து ஞான விலாசம் நமக்கு கை கூடுகிறது. அவரது பார்வையும் தீட்சையும் இதை நமக்கு சாதித்து அருளுகிறது. இதனாலேயே இந்தப் பெயரை அவர் பெற்றிருந்தார்.

குறிப்பாக யோகிகளாக விரும்புகின்றவர்களுக்கு பொட்டு ஸ்வாமிகளின் தரிசனமே ஒரு பேருபகாரம். பொட்டு ஸ்வாமிகள் ஒரு ராஜயோகி.

மற்ற யோகிகளைப் போல காவி உடுத்திக் கொண்டு பத்தியம் காப்பவரில்லை. ஸ்ரீ சாரதா பீடம் போல இவர் சக்தி பீடம் அமைத்து தேவி உபாசனை புரிபவர். நவராத்திரி முடிந்த விஜயதசமியில் தங்க கிரீடம் அணிந்து அருளாசி வழங்குவார். இதெல்லாம் தெரிந்தே அந்த மும்பை தொழிலதிபர் தனக்கு ஒவ்வாத வைரத்தை இவருக்கு அளித்துவிட்டார். அது இவரிடம் இருப்பதாலேயே இவரை தரிசிக்கையில் நமது மனதுக்கு அமைதி ஏற்படுகிறது. ஆரவாரம் அடங்குகிறது.

குறிப்பாக ஸ்வாமிகளின் பாதங்களை தொழுபவர் களுக்கும், அவர் திருப்பாதம் யார் சிரசின்மேல் படுகிறதோ அவர்களுக்கெல்லாம் ஞானவிலாசம் சித்திக்கக் கண்டேன். காலில் கைபருமணில் தண்டை, கழுத்திலும் ஆபரணங்கள்... தங்கத்தலான அதன் மதிப்பை ஒரு நாள் ஸ்வாமிகளிடம் கேட்டேன். இதற்கு ஏது மதிப்பு? என் குருநாதரவர்கள் வழிவழியாக போட்டிருந்து எனக்குத் தந்தார். எனக்குப்பின் இது யாருக்குமில்லை. என்னோடு என் பிருந்தாவன சமாதியில் அடங்கிவிடும் என்றார்.

tamilebooks.net

*தங்கள் சிஷ்யர்களுக்கு தரலாமே என்று கேட்டேன். நான் தரமாட்டேன். எனக்கு பின்வரும் சிஷ்யர்கள் தேடிக் கண்டடைவார்கள் என்றார். (மறுபக்கம் 100ல் தொடர்ச்சி) சதம், கோடி, எல்லாமே என் திருவடியில்தான் இருக்கிறது. பாதம் பற்றிட பாவம் தீரும். செல்வம் சேரும் என்றும் சொன்னார்.*

*அங்கே நான் ஒரு உண்மையை புரிந்து கொண்டேன். உலகில் ரத்தினங்களுக்கு தெய்வீக சக்தி தரும் வல்லமை இருக்கிறது என்பதல்ல. பொட்டு ஸ்வாமிகள் போன்ற மகான்களின் திருவடிக் குறடான பாதரட்சைக்கும் அத்தகைய மகாசக்தி இருக்கவே செய்கிறது. பெரும்பாலும் பாதக்குறடுகள் ஜாதி பத்திரி மரத்தாலோ இல்லை புன்னைமரத்தாலோ ஆகியிருக்கும். இந்த மரத்தண்டுகளும் கூட மகோன்னதமானவையே...'*

-சிவராமன் அந்த பக்கத்தை தொடர்ந்து படித்தபடி செல்ல, ஸ்வாமிகளின் கரம் தடுத்தது. முக்கியக் குறிப்பை நீ தாண்டிச் சென்று விட்டாய் என்று அது சொல்லாமல் சொல்லிற்று.

"சாமி! நீங்க காட்டுன பக்கத்தை படிக்கச் சொன்னீங்க படிச்சேன். இதுல எங்க அந்த ரகசியக் குறிப்பு இருக்கு?"

"உனக்குத் தெரியலையா?"

"தெரியல சாமி. சதம், கோடிங்கற வார்த்தை இருக்கு. எல்லாமே என் திருவடில இருக்கு. அதாவது என் என்காலைப் பிடிச்சுக்கோ அதெல்லாம் உனக்கு கிடைக்கும்னு சொல்றாரு. இது உங்களைப் போல எல்லா சன்யாசிகளும் சொல்றது தானே சாமி?"

"அப்ப உன்னால அதுக்கு மேல புரிஞ்சுக்க முடியலையா?"

tamilebooks.net

ஸ்வாமிகள் கேட்கும் விதத்தை பார்த்தால் அதற்கு வேறு பொருளும் இருப்பது சிவராமனுக்குப் புரிந்தது.

"சாமி நீங்களே சொல்லிடுங்க. என் அறிவுக்கு இவ்வளவுதான் எட்டுது..."

-ஸ்வாமிகள் உடனே சிரித்தார். அப்படியே சுட்டு விரலால் சதம், கோடி என்கிற வார்த்தைக்கு மேல் உள்ள பக்க எண் 100ஐ சுட்டிக் காட்டினார். அதோடு சேர்ந்து பார்த்தபோது சதம் கோடி என்கிற ஒரு வார்த்தை முழுமையாக கிட்டியது.

தொடர்ந்து படிக்க சதம் கோடி என் திருவடியில் இருக்கிறது என்று வந்தது. சிவராமன் புருவத்தில் வளைசல்!

"சிவராமா... சதம் கோடியும் திருவடியில் இருக்குன்னா இரண்டு அர்த்தம். அளவில்லாத செல்வத்தையும் ஆனந்தத்தையும் தருவது என் திருவடிகள்ங்கறது ஒரு அர்த்தம். ஆகையால அதை பிடித்துக்கொண்டு பக்தி செலுத்துன்னு சொல்லாம சொல்றார். இது நேரடிப்பொருள். இன்னொரு பொருள் சதம் கோடி மதிப்புள்ள வைரம் என் காலடி தங்கத் தண்டைல இருக்குன்னும் பொருள்!"

-ஸ்வாமிகளின் விளக்கம் சிவராமனை நிமிர்த்தியது. "சாமி... அப்படின்னா...?"

"தானமா வந்த அந்த லலாடம் தண்டைல அடக்கம். அவர் பூத உடல் அழிஞ்சு போனாலும் தண்டையும் பாதக்குறடும் அதை வணங்கறவங்களுக்கு லலாடக் கதிர்வீச்சால் ஞானத்தை தந்தபடி இருக்கும்கறதுதான் அதனுடைய உட்பொருள். இப்ப புரியுதா என் குருநாதருடைய பிருந்தாவன மகிமை?"

"அப்படின்னா வைரம் சமாதியிலையா?"

tamilebooks.net

-சிவராமன் காற்றுக் குரலில் கேட்டார்.

"ஆமாம். இதை என்னால என்னுடைய ஆரம்பகால நாட்கள்ல உணரமுடியல. இந்த உடம்பு அழுக ஆரம்பிச்ச பின்னாலதான் உள்ளுணர்வு சொன்னது. உறுதிப்படுத்திக்கத்தான் புத்தகத்தை கேட்டேன். நல்லவேளை என் குருநாதர் ஆசீர்வாதத்தால அது கிடைச்சது. விஷயமும் உறுதியாச்சு.

இனி எனக்கு இந்த மும்பைல வேலை இல்ல. என்குருநாதர் ஆஸ்ரமத்துலதான் வேலை. இந்த உண்மையை உறுதிப்படுத்திக்க அவர் தான் உன் மூலமா வந்துருக்கார்.

இனி என்மீதமுள்ள காலம் நாராயணவனத்துல உள்ள என் குருநாதர் சமாதியிலதான் கழியும்."

-ஸ்வாமிகளின் குரலில் ஏகப்பட்ட நெகிழ்ச்சி. சிவராமனிடம் இருந்தும் ஒரு சந்தேகம் துளிர்விட்டது.

"சாமி இது எப்படி இந்த புத்தகத்தை எழுதின ஸ்ரீவத்ஸவாக்கும் மட்டும் தெரிஞ்சிருந்தது?"

"அவரும் வைரத்தை மனசுலவெச்சு இதை சொல்லலை. ஸ்வாமிகள் சொன்னதை அப்படியே எழுதியிருக்கார். ஸ்ரீவத்ஸவா நூறுகோடி கிடைக்கும்னு சொன்னது பணம் காசை அல்ல... பொட்டு ஸ்வாமிகளோட ஆசீர்வாதத்தை! ஆனா மறைமுகமான பொருள் இதுதான்."

"அப்படின்னா நீங்க அந்த சமாதிக்குப்போய் அந்த வைரத்தை..."

"அது பாதுகாப்பா களவு போகாத நிலைல குருவருளோட கலந்து பலன் தந்துகிட்டு இருக்கு. அதுதான் முக்கியம். அது இருக்கற இடத்துக்கு போனாலே போதும். என்னோட இந்த கர்ம வியாதி கட்டுக்கு வந்துடும்."

tamilebooks.net

"நல்லது சாமி..."

-சிவராமன் மீண்டும் விழுந்து வணங்கிவிட்டு வெளியேறத் தொடங்கினார். கூட வந்த அஞ்சலி மாதாவுக்கு தமிழ் தெரியாது. அவர்கள் பேசி கொண்டிருந்ததும் அவளுக்கு புரியவில்லை. இந்தியில் சிவராமனிடம் கேட்டாள்.

"சிவராம்... குருநாதர் என்ன சொல்றார்?"

"அவர் இனி இந்த மும்பை ஆஸ்ரமத்துல இருக்கமாட்டார். நாராயணவனம் போயிடுவார்."

"ஏன்?"

"அங்கதான் அவர் உடம்பு குணமாகுமாம்... அதனால!"

"அப்ப வைரம்?"

"அதப்பத்தி ஒண்ணும் தெரியல..."

-சிவராம் அப்படி ஒரு பொய்யை அஞ்சலி மாதாவிடம் சொன்னதுதான் ஆச்சரியம்!

வெளியே வந்த போது ஆதித்தனும் சுந்தரமும் காரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தனர்.

சிவராமைப் பார்த்துவிட்டு ஓடிவந்தனர்.

"என்ன சிவராமன், புத்தகம் கிடைச்சிடுச்சா...?"

"புத்தகம் கிடைச்சிடுச்சு. வைரம் இருக்கற இடமும் தெரிஞ்சு போச்சு."

"அப்படியா... ஸ்வாமிஜி கண்டு பிடிச்சுட்டாரா?"

"ஆமாம். பலகோடி மதிப்புள்ள அது நாம நினைச்சமாதிரி வெளியே எங்கையோ இல்லை."

"அப்படின்னா...?"

tamilebooks.net

"அதை நான் ஸ்வாமிஜி என்கிட்ட சொன்னமாதிரி அவ்வளவு சாதாரணமா உங்ககிட்ட சொல்லமுடியாது ஆதித்தன். வைர வியாபாரிகளான நமக்கெல்லாம் லலாட வைரம்கறது ஒரு கனவு. காமதேனு கற்பக விருட்சம் மாதிரி கதை பேசற ஒரு விஷயமாத்தான் அது இருந்தது. அந்த கனவு இப்ப கைகூடப் போகுது. தலைமுறை தலைமுறையா தமிழ்நாட்டுல இருந்து இந்த மகாராஷ்ட்ராவுக்கு வந்து வைரவியாபாரம் செய்யற எந்த வைர வியாபாரிக்கும் தெரியாத ஒரு ரகசியம் 75 வருஷத்துக்கு பிறகு இப்பதான் தெரியவந்தது.

–சிவராமன் கண்களில் ஆசை மின்னியது.

"சிவராமன்! நாம மூணுபேருமே அதை இருபது வருஷமா தேட்றோம். கடைசியா தான் ஸ்வாமிஜி கிட்டவந்து புத்தகம் பத்தி தெரிஞ்சுகிட்டு அதை தேட ஆரம்பிச்சோம். இவ்வளவு நாள் ஒத்துமையா இருந்து தேடினோம். ரகசியம் உங்களுக்கு தெரிஞ்ச உடனே பிச்சுக்க பாக்கறிங்களே."

"பிச்சுக்கலை சுந்தரம்...இனிதான் நமக்கு நிறைய வேலை இருக்குன்னு சொல்லவரேன்."

"அப்ப மூணுபேரும் ஒண்ணாதானே ● அதை தேடிப்போகப்போறோம்?"

"அதுல என்ன சந்தேகம்? ஆனா வைரம் கைக்கு வர்றவரை ரகசியம் தெரியவந்த மாதிரியே காட்டிக்கக் கூடாது."

"அதை என்னமோ ஒரு சர்வதேச கும்பலே தேட்ற மாதிரி பேசறீங்களே சிவராம்."

"அப்படி இல்லை... லலாட வைரம் ஒரு கற்பனைன்னு சிலர் நினைச்சுகிட்டிருக்காங்க. அதனாலதான் அதன்மேல யாருக்கும் பெரிசா பார்வை இல்லை. ஆனா அது

tamilebooks.net

எவ்வளவு சக்தி வாய்ந்ததுன்னு ஸ்ரீவத்ஸா எழுதின புத்தகம் ஒண்ண படிச்சாபோதும். ஒரு புத்த பிட்சுகிட்ட இருந்து திருடு போக ஆரம்பிச்ச அது பல கைகள் மாறி இப்ப ஒரு சமாதிக்குள்ள இருக்கு. அந்த சமாதியில இருந்து அதை வெளிய எடுக்கற ஒரு பெரிய வேலை நமக்கு இருக்கு. அது சாதாரண வேலை இல்லை. அதை வீடியோவும் எடுக்கணும். அப்பதான் நம்ம ஃபாரின் கஷ்டமருங்களுக்கு அதை போட்டுக் காட்ட நம்மோட சேஸிங்கை புரியவைக்க முடியும்."

"அருமையான ஐடியா... ஆமாம்... இந்த ரகசியம் இப்ப சுவாமிஜிக்கும் தெரியும் தானே?"

"தெரியும். இருந்தாலும் நாம முந்திகிட்டா நமக்கு பாதகம் இல்லை."

"எப்படி?"

"வாங்கச் சொல்றேன்."

–சிவராமன் சுந்தரத்தோடும், ஆதித்தனோடும் குசுகுசுவென்று பேசியபடி நடக்கத் தொடங்கினான். அஞ்சலிமாதா பார்த்தபடி இருந்தாள். இருவரும் எப்பொழுது ஆசிரமத்துக்கு வந்தாலும் சுவாமிஜியை தரிசிக்காமல் போகமாட்டார்கள். இன்று வந்த வழியே திரும்பிப்போவது சந்தேகத்தை தந்தது. அதன் எதிராலிகள் அவள் முகத்தில்!

## 11

'ஒவ்வொரு வைரத்தின் பின்னாலும் கல்பகோடி காலங்கள் அடங்கியுள்ளன. உலகில் அழிந்த ஒன்று ஒளியோடு திரும்புவது என்பது நவரத்தினங்களில் மட்டுமே. அதிலும் வைரம் ஒரு அற்புத விஷயம். இதன் வலிமை இதை பட்டை தீட்டுவதில் தான் இருக்கிறது.

tamilebooks.net

பொதுவில் ஒரு வைரத்தில் எத்தனை பட்டைகள் சமமான அளவில் உள்ளதோ அந்த அளவுக்கு 360 கோணத்தில் அதன் தீவிர செயல்பாடும் இருக்கும். உள்ளே கரும்புள்ளிகள் இருந்தால் வைரத்தின் நடுமையத்தில் இருந்து வீச்சுகள் வராது. அதை அந்த புள்ளிகள் கட்டிப்போட்டுவிடும்.

உலகில் மிக சுத்தமானவைரம் என்பது பத்து சதம்தான் தொண்ணூறு சதம் கரும்புள்ளிகள் மற்றும் சரியாக பட்டை தீட்டப்படாதவையே உள்ளது. எனவே அதன் சக்தியை நாம் உணர முடியாமல் பொருளாதார மதிப்பில் மட்டுமே அது பார்க்கப்படுகிறது"

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா.*

*மணி எட்டு! விக்டோரியா லைப்ரரி!*

*அதிசயமாக அவ்வளவு நேரம் வரை புத்தகத்தை படிக்க கதிர் அனுமதிக்கப்பட்டிருந்தான்.*

*மறுநாள் ஏலம் என்பதால் ஒருபக்கம் புத்தகங்களை எடுத்து அடுக்கியபடி இருந்தனர்.*

*அவ்வப்போது சவரிமுத்து மட்டும் வந்து வந்து "கிளம்புங்க தம்பி... நாளைக்கு வந்து அந்த புத்தகத்தை ஏலத்துலையே எடுத்துட்டு போங்க..." என்றபடி இருந்தான்.*

*புத்தகத்தின் சுவாரஸ்யம் கதிருக்கு... யார் பேசுவதும் காதில் விழவில்லை.*

*அதேசமயம் லைப்ரரிக்குள் ஸ்ரீவத்ஸனும் நுழைந்து கொண்டிருந்தான். அவனிடம் ஃபாதர் காபிரியேல் தந்த புத்தகம்.*

*அவர் கேட்டுக் கொண்டபடி திருப்பித் தருவதற்காகத் தான் வந்திருந்தான்.*

tamilebooks.net

உள்ளே நுழையும்போது யாரையுமே பார்க்கவில்லை. புத்தகங்களுக்கு எண்களைப் போட்டபடி இருந்த ஃபாதர் கேபிரியேல் தான் கண்ணுக்கு தெரிந்தார். நேராகப் போய் புத்தகத்தைத் தரவும் சந்தோஷமாய் "வார்த்தையை காப்பாத்திட்டே" என்றார்.

"என்ன ஃபாதர்... என்னமோ லட்ச ரூபாயை திருப்பித்தர்ற மாதிரி சொல்றீங்களே..."

'அஃப்கோர்ஸ்... புத்தகங்களை வாங்கிட்டு போறவங்களவிட அத திருப்பித்தர்றவங்க ரொம்ப ரொம்ப குறைவு. அந்த டிசிப்ளின் பலர்கிட்ட கிடையாது. அதை கசக்கறது. சுருட்டிப் பிடிச்சுக்கறது. கண்ட இடத்துல வைக்கறது இதெல்லாம்தான் பலரோட ஹேபிட்ஸ்.

அது ரொம்ப தப்பு. இன்ஃபாக்ட் என்வரைல சின்னதோ பெரிசோ புத்தகங்கள் ஒவ்வொண்ணுமே லட்ச ரூபாய்க்கும் மேலானவைதான். ஆனா இங்க பாத்தியா?"

-ஃபாதர் எலிகளால் கடிபட்ட புத்தகங்களை காட்டினார். ஸ்ரீவத்ஸனுக்கும் வருத்தமாய் இருந்தது.

"நல்லவேளை... இந்த புத்தகத்தை நீங்க தனியா எடுத்து வெச்சிருந்தீங்க. இல்லேன்னா இது எனக்கு கிடைக்காமலே போயிருக்கும்."

"அதுசரி...புத்தகத்தை ஜெராக்ஸ் எடுத்துகிட்டியா?"

"எடுத்துகிட்டேன். ஒரு காப்பியை நல்ல விலைக்கும் வித்தேன்."

"ஈஸ் இட்..."

"ஆமாம் ஃபாதர். இன்னிக்கு இந்த புத்தகத்தை நீங்க சொன்ன மாதிரி லட்சரூபாய்க்கெல்லாம் வாங்க ஆட்கள் இருக்காங்க..."

tamilebooks.net

உடனேயே ஃபாதர் கேபிரியேல் சிரித்தார். அது சற்று கேலிச்சிரிப்பாகக்கூட இருந்தது.

"ஏன் ஃபாதர் அப்படி சிரிக்கிறீங்க... இதை நம்ப முடியலையா?"

"அதுக்காக சிரிக்கலை. உன் தாத்தா கெட்டிக்காரர் அதை நினைச்சு சிரிச்சேன்."

"எப்படி?"

"இதுல நூறுகோடி ரூபாய்க்கு ஒரு சீக்ரெட் இருக்கறதா எழுதியிருப்பாரே..."

"ஆமாம்...!"

"நீ அதை உண்மைன்னு நம்பிட்டியா?"

-ஃபாதர் கேபிரியேல் கேட்பதைப் பார்த்தால் அது பொய் என்னும் தொனி.

"அப்ப அது..."

"அது உண்மை இல்லை. அது ஒரு வியாபார தந்திரம்."

"வியாபார தந்திரமா?"

"ஆமாம். உன் தாத்தா தன் 40 வருட ஆராய்ச்சி பெரிசா மதிக்கப்படணும்னு ஆசைப்பட்டார். அதனால புத்தகத்தை எல்லாரும் டீப்பா படிக்கறதுக்காக ஒரு தந்திரம் செய்தார். அதுதான் அந்த நூறு கோடி ரகசியம்."

"அப்ப உண்மையா எந்த ரகசியமும் இல்லையா?"

"இல்லைன்னுதான் சொல்வேன். உன் தாத்தாவே இதை என்கிட்ட சொல்லியிருக்கார்." - ஃபாதர் கேபிரியேல் சற்று நடுங்கும் குரலில் சொன்னது ஸ்ரீவத்ஸனைக் கீறியது.

"அப்படின்னா அந்த லலாட வைரம்...?" -வேகமாய் கேட்டான்.

tamilebooks.net

“லட்டு உருண்டை சைஸுக்கு இருக்கும்னு சொல்லி எழுதியிருக்காரே அதா...”

“அதே தான்...”

“நோ நோ... அது ஒரு மோதிர அளவுதான் இருக்கும். ஆனா இட்ஸ் வெரி பவர் ஃபுல்!”

“அளவை விடுங்க.. வைரம் உண்மைதானே?”

“அது உண்மைதான்... அதுகூட அப்பவே திருடு போயிடிச்சு.”

“என்ன ஃபாதர் என்னென்னவோ சொல்றீங்க?”

“எனக்கு தெரிஞ்ச உண்மைகளை சொல்றேன் சைல்ட். அந்த பொட்டுச் சாமியார் எனக்கும் நல்ல ஃப்ரெண்ட். அப்ப நான் லண்டன் சுவிசேஷ கல்லூரியில் வேதாகமம் படிச்சுட்டு திரும்பியிருந்தேன். எனக்கு இருபத்தியிரண்டு வயசு. உன் தாத்தாவுக்கோ நியர்தேன் 50 வருஷம். உன் அப்பா பொறந்திருந்த நேரம்.”

-ஃபாதர் கேபிரியேல் புத்தகங்களை அடுக்கியபடி பட்டவர்த்தனமாய் சொல்லிக் கொண்டுவந்தார்.

“இன்ஃபாக்ட் அந்த வைரமோதிரத்தை உன் தாத்தா என்கிட்ட கொடுத்துகூட டெஸ்ட் பண்ணினார்!

இந்த வைரம் நவரத்தனம்லாம் ஜஸ்ட் வேல்யபுள் திங்க்ஸ். பிகாஸ் பூமியில இருந்து ரொம்ப குறைவா கிடைக்கற எதுக்குமே மதிப்பு அதிகம் இருக்கும். அவ்வளவுதான். அடுத்து அதெல்லாம் ஒரு காமன் எலிமெண்ட்ஸ்.

இந்தியனும், அமெரிக்கனும், ஆஸ்திரேலியனும், ஆப்பிரிக்கனும் சாமியைக்கூட, வேறு வேறா கும்புடுவாங்க. ஆனா காமனா ஒத்துக்க ஒரு விஷயம் வேணும் இல்லையா... அதுதான் நவரத்தினங்கள். தட்ஸ் ஆல்!”



tamilebooks.net

"சரி உங்ககிட்ட கொடுத்து டெஸ்ட் பண்ணினதா சொன்னீங்களே... உங்களுக்கு எதுவும் ஆகலையா?"

"ஐ சஃபர்டு லாட். அதாவது ரொம்ப கஷ்டப்பட்டேன். நான் அதை உணர்ந்தேன். அப்பதான் அந்த வேல்யபுள் திங்க்ஸுக்கும் ஒரு கேரக்டர் இருக்கு - கலச்சர் இருக்கு-பவர் இருக்கு- அது நம்ம மைண்டை டாமினேட் பண்ணுதுங்கறத ஒத்துகிட்டேன். ஸீ... அந்த மோதிரத்தோட நான், உன் கிரேண் ஃபாதர், சர்ச்சோட சீஃப் ஃபாதர் எல்லாரும் எடுத்துகிட்ட போட்டோ..."

-ஃபாதர் கேபிரியேல் லைப்ரரியில் அழுக்கடைந்து தொங்கும் ஒரு கறுப்பு வெள்ளை படத்தைக் காட்டினார். ஸ்ரீவத்ஸன் கிட்டே நெருங்கிச் சென்று பார்த்தான். மோதிரம் சுமாராக தெரிந்தது. திரும்பி வந்தான்.

ஃபாதரை படுவியப்போடு பார்த்தான். அவர் தொடர்ந்தார்.

"ஆனா உன் தாத்தா அந்த வியாபாரத் தந்திரத்துக்கே பலியாகிவிட்டார்...." என்றார் ஃபாதர்.

"எப்படி?"

"அந்த புத்தகம் அப்ப ரொம்ப பரபரப்பா படிக்கப்பட்டு உன் தாத்தாவை ரொம்ப தொந்தரவு பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. இன்ஃபாக்ட் அதுக்குகூட அந்த வைரமோதிரம் தான் காரணம். அது உன் தாத்தாவை ஒரு ஆட்டு ஆட்டிவெச்சுச்சு."

'அதோட வேல்யு அப்ப எவ்வளவு ஃபாதர்?"

"காரட் வேல்யூ பார்த்தா லட்ச ரூபாய்லதான் வரும். ஆனா அது ஹிஸ்டாரிகல் வேல்யூ உள்ளது. அதன்படி பார்த்தா நூறுகோடி எல்லாம் கூட கம்மி. கிளியோபாட்ரா கவுன் பல லட்சம் போகும்போது இது கோடிகள்தான்.

tamilebooks.net

அக்சுவலா அது பாபிலோனியாவுல ஒரு மெர்ச்சன்ட் கிட்டயிருந்து கை மாறி கை மாறி கடைசியா ஒரு புத்தபிச்சுகிட்ட வந்து சேர்ந்தது. ஸோ... இட்வாஸ் வெரி ஏன்ஷியண்ட். அப்புறம் அங்க இருந்தும் உருண்டு ஓடிகிட்டேயிருந்தது. திருடப்பட்றது அதோட ராசி கூடவே, திருட்றவங்களை அது கொன்னுடும். அதாவது நல்லது செய்யற மாதிரி செய்து உயிரை வாங்கிடும்."

–ஃபாதர் கேபிரியேல் சொல்லிக் கொண்டேபோனது உயிரைத் திருகிற்று.

"இன்னொரு விஷயம்... அது பெரும்பாலும் சாமியார்ங்கிட்டதான் இருந்தது. அவங்ககிட்ட இருந்தவரை அது நல்லதுதான் செய்தது. நோ பிராப்ளம்."

"இதெல்லாம் உண்மையா... ஃபாதர்!"

–ஃபாதர் கேபிரியேல் மீண்டும் சிரித்தார்.

"நீ சின்ன பையன். மிராகிள்ஸ் எப்பவும் மிராகிள்ஸ் தான். எக்ஸ்பிரியன்ஸ் பண்றது மட்டும்தான் நமக்கு புரிய வைக்கும். நான் ஒரு ட்ரு கிறிஸ்டியன். பொய் சொல்வேனா...?"

–கன்னத்தை செல்லமாய் தட்டி ஒரு சிரிப்பு சிரித்தார். ஏனோ காற்றுப்போன பலூன்போல ஆகிவிட்டிருந்தது ஸ்ரீவத்ஸன் மனது.

அந்த வைரம் எங்கோ இருக்கிறது... அது யார்கையில் அகப்படப் போகிறதோ என்று நினைத்ததெல்லாம் பிசுபிசுத்துப் போனது–

பாவம் சிவராம்!

புத்தகத்தை வைத்துக் கொண்டு மிஸ் கைடாகப் போகிறார்.

tamilebooks.net

நினைத்துச் சிரித்தபடி திரும்பினான்.

-எதிரில் கதிர்!

அவனோடு கல்லூரியில் ஒன்றாய் படித்தவன்.

"ஹேய் கதிர்..."

கதிரும் நிமிர்ந்தான்.

"ஹாய் வத்ஸன்..."

'என்னப்பா இங்க?"

"அப்படியே வந்தேன். ஒரு இன்ட்ரஸ்ட்டான ஓல்ட் புக். உக்காந்துட்டேன்..."

"அப்படி என்ன புத்தகம்...?"

-கதிர் உடனே புத்தகத்தைக் காட்ட ஸ்ரீவத்ஸனுக்கு நெஞ்சையடைத்தது.

ஃபாதர் கேபிரியலிடம் ஒப்படைத்த அதே புத்தகம். ஒரு காபி இன்னும் அழியமல் லைப்ரரியில் இத்தனை நாள் ஒளிந்திருக்கிறது.

"இந்த புக்கோட ஆதர் பேர்கூட உன் பேர்தான்!"

-கதிர் கண்களை சிமிட்டினான்.

'பேர்மட்டுமா- பேரனே நான் தானே?"

"வாட்!"

"அது என் தாத்தாடா..."

"ரியலி... வாட் எ ப்ளசன்ட் சர்ப்ரைஸ்!"

"சர்ப்ரைஸ்தான். இன்னிக்கு எல்லாமே எனக்கு சர்ப்ரைஸ்தான்."

tamilebooks.net

"அது சரி... இதுல ஏதோ நூறுகோடி ரூபாய்க்கு ஒரு ரகசியம் இருக்கறதா எழுதியிருக்காரே- உண்மையா?"

"அப்ப பொய்யா...?"

"இல்ல... நானும் புரட்டிப் புரட்டி பாக்கறேன். ஒரு க்ளுகூட கிடைக்க மாட்டேங்குது-அதான் கேட்டேன்." கதிர் சிரித்தான்.

"கடைசி காப்பி உள்ளவரை இந்த மண்டையை பிச்சுக்கறது தொடரும் போல இருக்கு." கமென்ட் அடித்தான்.

"என்ன சொல்றே வத்ஸன்."

"ஏய் இதெல்லாம் சும்மா. தாத்தா புக்கை எல்லாரும் டப்பா படிக்கறதுக்காக அடிச்சு விட்றுக்கார். நூறுகோடி ரகசியம்-அப்புறம் லாடம்-லலாடம் எல்லாம் சும்மா..."

"எதை வெச்சு நீயே இப்படி சொல்றே?"

"எதை வெச்சுன்னா... இதோ பார் நான் இப்பதான் இதோட பிரமிப்பு, தாக்கம், அழுத்தம் எல்லாத்துல இருந்தும் விடுபட்டிருக்கேன். நீ வேற குழப்பாதே. புத்தகத்தை மூடிவெச்சுட்டு கிளம்பு. நாம பார்த்துகிட்டு ரொம்ப நாளாச்சு."

"அப்ப நீ இந்த புத்தகத்துல இருக்கற உண்மைகளை பொய்ங்கறியா?"

"அது உண்மையோ பொய்யோ நமக்கு எந்த பிரயோஜனமும் இல்ல. விட்டுத் தள்ளு."

"அப்படி எல்லாம் விடமுடியாது வத்ஸன். ஏன்னா லலாட வைரம் ஒரு உண்மை."

– கதிர் அழுத்தமாய் பேசியது ஸ்ரீவத்ஸனை பெருமூச்சில் புகுத்தியது.

tamilebooks.net

"சரிசாமி. உண்மை. அதுக்கு இப்ப என்ன பண்ணச் சொல்றே?"

"இல்லடா. நான் இப்ப பெரிய மன உளைச்சல்ல இருக்கேன். உன் தாத்தா இந்த புத்தகத்துல குறிப்பிட்டிருக்கிற லலாட வைரம் இதோ..."

–கதிர் தன் மோதிர விரலை நீட்டினான். அதில் அந்த மோதிரம்.

ஸ்ரீவத்ஸனுக்கு குபீர் என்று வியர்த்தது.

சில நொடிகள் வெறித்தவன் நேராக கதிரை ஃபாதர் கேபிரியல் காட்டிய புகைப்படத்தின் அருகே அழைத்துச் சென்றான்.

அந்த மோதிரத்தையும், கதிரின் விரல் மோதிரத்தையும் மாறி மாறி பார்த்தான்.

ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

"டேய் இது எப்படி உன்கிட்ட...?" –உதடு பதறத் தொடங்கியது.

"தேடி வந்த ஒரு தலைவலி வத்ஸன்."

"என்ன உளற்றே?"

"உளறலை. உண்மையை சொல்றேன். ஒரு க்ளார்க் வேலை கிடைச்சா போதும்னு அலைஞ்ச நான் இதால மேனேஜர். அதே சமயம் ஒரு அஞ்சு பைசாகூட திருடியிராத நான் இதால ஒரு திருடனும்கூட..."

"புரியற மாதிரி சொல்லு..."

"சொல்றேன். அதுக்கு முந்தி ஒரு உண்மையை நீ தெரிஞ்சுக்கோ. இந்த புத்தகத்துல உன் தாத்தா எழுதியிருக்கற எல்லாமே 100சத உண்மை. இன்க்ளூடிங் இந்த

tamilebooks.net

லலாட வைரம்... இதை திருடிட்டு இப்ப நான் தவிச்சிக்கிட்டிருக்கேன்."

"என்னது? திருடினியா?"

"ஆமாம்... வா விபரமா சொல்றேன்." -கதிர் வத்ஸனை லைப்ரரியை விட்டு வெளியே அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

அவன் திருடினேன் என்று சொன்ன நொடி ஃபாதர் கேபிரியேல் சொன்னதுதான் ஸ்ரீவத்ஸனுக்குள் எதிரொலிக்க ஆரம்பித்தது. 'திருட்றவங்கள அது கொன்னுடும். நல்லது செய்யற மாதிரி செய்து உயிரை வாங்கிடும்' என்ற அந்த கருத்து அவன் மனதில் பீதியை உருவாக்கிற்று. அதன் எதிரொலிகள் முகம் கொள்ளாமல் வழிந்தது. கதிரை வெறித்தான்!

## 12

'உலகம் முழுவதும் நவரத்தினங்கள் உள்ளன. ஆனால் இந்திய மண்ணில் மட்டும்தான் அது பூஜிக்கவே படுகிறது. நமது மண்ணின் மகரிஷிகள் நவரத்தினங்களின் சக்தியைக் கண்டறிந்து அதை உரிய தெய்வங்களுக்கும் பொருத்தி அதன் பலன் காலகாலத்திற்கும் நிலைத்திருக்கும்படி செய்தனர்.

குறிப்பாக கடவுளர்களுக்கு சாற்றப்படும். கிரீடங்களில் நவரத்தினங்கள் பெரிய அளவில் இடம் பெற்றன. அதனாலயே அவை மிக மதிப்பாக பார்க்கப்பட்டது.

ரத்தினங்களை பார்க்கும் பாவனையும் மிக முக்கியம்.

பக்தியோடு பார்த்தால் நமது சரீரம் அதன் கதிர் வீச்சை அதிகம் ஈர்க்கும். ஆடம்பர நோக்கோடு பார்த்தால் அது

tamilebooks.net

குறையும். 'நமது உணர்வு நிலைக்கும், உடம்பின் சுரப்பிகளுக்கும் மிகப் பெரிய தொடர்பு உள்ளது!"

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*வில்சன் பார்க்!*

*இருளில் ஏதோ எரியும் சில விளக்குகளில் ஒளியில் சிமெண்ட் பெஞ்சுகளோடு கிடந்தது.*

*ஸ்ரீவத்ஸன், கதிரோடு அங்கே போய் அமர்ந்தான்.*

*இருவருமே உணர்வு பூர்வமாக ஏராளமான சிந்தனை களில் இருந்தார்கள்.*

*ஸ்ரீவத்ஸன் சற்று கூடுதல் பயத்தோடு இருந்தான்.*

*கையில் அந்த புத்தகம்!*

*அதை பார்த்த நொடி ஸ்ரீவத்ஸனுக்கு தாத்தாமேல் ஒரு இனம்புரியாத கோபம்கூட வந்தது.*

*ஒரு புத்தகம் அழுத்தமாய் பார்க்கப்பட வேண்டும் என்பதற்காக தாத்தா அதில் நூறுகோடி ரூபாய் ரகசியம் இருப்பதாக எழுதியிருப்பது ஒரு மெல்லிசான கோபத்தைக் கூட உருவாக்கியது! கூடவே அந்த மோதிரம் பற்றிய சிந்தனைகள்...*

*"கதிர்... பேசுடா! ஏன் மௌனமா இருக்கே?"*

*"என்ன பேசறதுன்னே தெரியலடா. ஒரு இரண்டு மூணு நாளைக்குள்ள என் வாழ்க்கைல பெரிய பெரிய திருப்பங்கள்.*

*"உண்மைதான். ஆனா இந்த திருப்பமெல்லாம் ஒண்ணு மில்லே. இந்த வைர மோதிரத்தை நீ உரியவங்ககிட்ட திருப்பிக் கொடுக்காட்டி இன்னும் பெரிய பெரிய திருப்பமெல்லாம் உனக்கு காத்திருக்கு."*

tamilebooks.net

"அது நல்லதா இருக்குமா... கெட்டதா இருக்குமான்னு ஒரே குழப்பமா இருக்கு. அந்த வசந்தி என்னடான்னா இது வேண்டாம். நல்லதோ கெட்டதோ நீயே அனுபவிச்சுக் கோன்னுட்டு போயிட்டா..."

"யார் அது வசந்தி?"

"இந்த மோதிரத்தை எனக்கு போட்டுவிட்டு அனுப்பின அருணாசலம் சார் மகள்!"

"மேற்கொண்டு என்ன சொன்னா?"

"அது ஒரு பெரிய கதை. அருணாசலமும் ஒண்ணும் பெரிசா உதவற நோக்கத்துல இதை செய்யலை. அவர் வரையில் இந்த மோதிரம் ஒரு தூண்டில். என்னை இந்த தூண்டில் மூலமா பிடிக்கறதுதான் அவரோட நோக்கம்."

"உன்னைப் பிடிச்சு அவருக்கு என்ன ஆகணும்?"

"என்னைப் பிடிக்கறதுன்னா -அந்த வசந்திக்கு என்னை கல்யாணம் பண்ணி வைக்கறதுன்னு அர்த்தம்"

"அப்படிப் போகுதா கதை... அது சரி... நீ திருடினது எப்படி அந்த பொண்ணுக்குத் தெரியும்?"

"எப்படியோ கண்டுபிடிச்சுட்டா. கூடவே திருடப் பட்றது தான் இதோட ராசின்னும் ஒரு கருத்தையும் சொன்னா... இது பல கை மாறின மோதிரமாமே..."

-கதிர் ஃபாதர் கேரியேல் சொன்னதை வழிமொழிகிற மாதிரி பேசினான். "உண்மைதான் கதிர். இது பலருடைய கைகளுக்கு போயிடிச்சு. ஃபாதர் கேபிரியேல்கூட இதப்பத்தி சொன்னப்போ நீ சொன்ன மாதிரிதான் சொன்னார்."

"ஃபாதருக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?"

tamilebooks.net

"ஃபாதருக்கு என் தாத்தாவையே தெரிஞ்சிருக்கு. என் தாத்தா இந்த லைப்ரரியிலதான் எப்பவும் பழியா கிடப்பாராம். இன்னொரு விஷயம். இந்த மோதிரம் ஃபாதரைக்கூட அவஸ்தைப்படுத்தியிருக்கு."

"வத்ஸா... இவ்வளவுநாள் கழிச்சு நீ என்னைச் சந்திச்சது இப்படி எல்லாம் மிரட்டத்தானா?"

-கதிர் மிக பரிதாபமாகக் கேட்டவிதத்தில் சொல்ல முடியாத அளவு குழப்பம்- பயம்!

"போடா ஃபூல்! நீ என்னை இப்ப சந்திக்காம போயிருந்தா எவ்வளவு கஷ்டப்படுவேன்னு சொல்லவே என்னால முடியலைடா. இதோட முடிவு உன் சாவாகூட இருக்கலாம். ஞாபகம் வெச்சுக்கோ..."

"சாவா?"

"ஆமாம். இதை உன்கிட்ட சொல்லக்கூடாது நினைச்சுக்கிட்டிருந்தேன். சொல்ல வெச்சுட்டே..."

"இது எனக்கு அதிர்ஷ்டத்தை தந்திருக்கற வைரம். இதுவா என்னைக் கொல்லும்னு சொல்றே?"

"அதுசரி... உனக்கு இது உதவும்போது நீ இதுக்கு சொந்தக்காரன் இல்லை. ஆனா இப்ப நீ சொந்தக்காரன். அதாவது உனக்கு உதவின ஒரு எஜமானனை நீ இப்ப உன்னோட வேலைக்காரனா ஆக்கிக்கிட்டே. உன் ஸ்தானம் இதால மாறிப்போச்சுல்ல. பலனும் மாறத்தானே செய்யும்?"

"டேய்! புரியும்படியா சொல்லுடா. குழப்பமா இருக்குடா. எஜமான்-வேலைக்காரன்னு நீ சொல்றதை பார்த்தா இந்த வைரத்துக்கு புத்தி இருக்கற மாதிரியும் அது அந்த புத்தியைக் கொண்டு யோசிச்சு நடத்துக்கற மாதிரியும்ல அர்த்தமாகுது.

tamilebooks.net

இது ஒரு விலை உயர்ந்த வெளிச்சமான கரி. அவ்வளவு தான். எதுக்கு இப்படிப்பட்ட விளக்கங்கள்?"

–கதிர் கொஞ்சம் விஞ்ஞானம் பேசினான். ஸ்ரீவத்ஸன் கூர்மையாகப் பார்த்தான்.

"எதுக்கு அப்படி பாக்கறே?"

'இல்ல... ஒரு பக்கம் அதிர்ஷ்டத்தை தந்த வைரம்னு இதுக்கு ஒரு உயர்ந்த மதிப்பைத் தரே-மறுபக்கம் வெளிச்ச மான கரின்னு வியாக்யானம் பண்றே. உன்னை என்னால புரிஞ்சுக்க முடியலே."

–அந்த பதில் கதிரைக்கூட கொஞ்சம் யோசிக்கத்தான் வைத்தது.

"வாஸ்தவம்தான் வத்ஸன். நான் இப்ப இரண்டு விதமாத்தான் இருக்கேன். என் அனுபவம் என்னை ஒரு விதமா பேசவைக்குது. என்புத்தி என்னை இன்னொரு விதமா பேசவைக்குது."

"ஒரு விலை மதிப்பே இல்லாத ஒரு புத்தகம் உன் கைல இருந்து அதை படிச்ச பிறகுமா இந்த குழப்பம்?"

"இதை எழுதினதும் ஒரு மனிதர்தானே... இதுல அவரோட கற்பனை எவ்வளவு இருக்கோ?"

"அப்ப இந்த புத்தகத்தை சந்தேகப்பட்றியா?"

"இல்ல ஸ்ரீவத்ஸன்! முழுசா ஒத்துக்கறதுக்குதான் தயங் கறேன். ஒரு தற்செயலான சம்பவத்தைக்கூட நான் இந்த வைரம் தந்த அதிர்ஷ்டம்னு நினைக்கலாம் இல்லயா?"

"சரி கதிர்... ரொம்ப போட்டுக் குழப்பிக்காதே. எனக்கும் உன் வயசுதான். உன் சிந்தனைகள் எனக்கும் இல்லாம இல்லை. கண்மூடித்தனமா எதையும் ஒத்துக்கக்கூடாது. அதே சமயம் புத்தின்னு ஒண்ணு இருக்கறதே நல்லது கெட்டதை பிரிச்சுப் பார்த்து நல்லதை பயன்படுத்திக்கத்

tamilebooks.net

தான். அந்த கண்ணோட்டத்தோட இந்த புத்தகத்தைப் பார். இது என் தாத்தாவோட நாற்பது வருஷம் ஆராய்ச்சி. அதை சாதாரணமா கற்பனைன்னு ஒதுக்கித் தள்ளிடாதே."

"அதான் சொன்னேனே... ஒதுக்கித் தள்ளற புத்திசாலி யும் நான் இல்ல, அதே சமயம் கண்மூடித்தனமா இதை ஒத்துக்கற முட்டாளும் நான் இல்லை."

"எதுக்கு இப்படி டபுள் ஸ்டேண்ட். ஒரு தெளிவான முடிவுக்குவா. ஒண்ணு இதை டோட்டலா ஒதுக்கித் தள்ளு. 'புத்திசாலித்தனம்தான் வாழ்க்கை. நான் புத்திசாலி'ன்னு போய்கிட்டே இரு. இல்லையா... இந்த புத்தகத்தை நம்பி இந்த வைர மோதிரத்தைக் கடவுளா நினைச்சு மதிச்சு அதுக்கு தகுந்த மாதிரி நடந்துக்கோ. இல்லேன்னா உனக்குதான் ஆபத்து.

"ஆபத்தா...?"

"ஆமாம். இது தன்னை அபகரிச்சவங்களை உயிரோட விட்டு வெச்சதில்லையாம். நீயும் இதை அபகரிச்சவன். ஞாபகம் இருக்கட்டும்."

- ஸ்ரீவத்ஸன் அந்த முக்கியமான எச்சரிக்கையை நேருக்கு நேர் பொட்டில் அடிக்கும் விதமாக விட்டான். கதிரும் நெடுநேரம் யோசித்தான். பிறகு வாயைத் திறந்தான்.

"வத்ஸா... நான் இதை திருடினது உண்மை. அதுக்கா வெட்கப்பட்டதும்-திருப்பிக் கொடுக்க நினைச்சதும் உண்மை. ஆனா அவ்வளவையும் ஒருவித பேராசையால் தான் செய்தேன். இதுக்கு ஒரு நல்ல மதிப்பு இந்த உலகத்துல இருக்கு... இப்பவே போய் இதை வித்தாலும் லட்ச ரூபாய்க்கு குறையாதுங்கற பொருளாதார மதிப்போட மட்டும்தான் இதைப் பார்த்தேன். இதாலதான் நல்லது நடந்ததா இல்லையாங்கறதெல்லாம் இந்த நிமிஷம் என்

tamilebooks.net

வரையில சந்தேகத்திற்குரிய விஷயங்கள்தான். நடந்தா நல்லது- நடக்காட்டி கவலை இல்லை- இதுதான் என் நிலைப்பாடு.

நீ சொல்ற மாதிரி இதுக்கு சக்தி இருந்தா இது என்னை கொல்லட்டும். இல்லேன்னா இது ஒரு அதிக விலையுள்ள கரின்னு மட்டும் நீ ஒத்துகிட்டாபோதும் ஓ.கே.?"

-கதிர் இப்படி ஒரு முடிவை எடுப்பான் என்று ஸ்ரீவத்ஸன் எதிர்பார்க்கவேயில்லை. இதைத்தான் விதி என்கிறார்களா?

"என்ன ஸ்ரீவத்ஸன் பாக்கறே... இதுதான் என் முடிவு-நீ என்ன சொல்றே?"

"ஒண்ணுமில்லை... ஒண்ணுமில்லை..."

"சும்மா சொல்லு- என் முடிவு தப்பா...?"

"தப்பில்ல... புத்தியுள்ள இந்த உலகத்து மனுஷங்கள்ல நூத்துக்கு தொண்ணூறு பேர் இப்படித்தான் யோசிப்பாங்க. இப்படித்தான் முடிவுக்கும் வருவாங்க. வந்துகிட்டும் இருக்காங்க. எது எப்படியோ அறிவை நம்பற உன்னை பாராட்றேன். ஆல் த பெஸ்ட்"

"தேங்க்யூ... உன்கூட பேசினதுல கொஞ்ச நஞ்சமிருந்த குழப்பமும் விலகிப் போச்சு. ஆனா ஒண்ணு. இதை நான் நிச்சயம் வெச்சுக்க மாட்டேன். என் வரையில இது மிஸ்டர் அருணாசலத்தோட சொத்து. அவர்கிட்ட நிச்சயமா கொடுத்துடுவேன்.

அது வரை வைரமா இல்லை, என் புத்தியான்னு பாத்துடுவோமே..."

"பார்ப்போம்... பார்ப்போம்..."

tamilebooks.net

*ஸ்ரீவத்ஸனின் பதிலில் அத்தனை சுரத்தில்லை- கூடவே அவ்வளவு பேசியும் அந்த மரண பயம்.*

*கதிரை சாவு நெருங்கிவிடுமா.*

## 13

"ஒரு வகையில் நவரத்தினங்களும் மரங்களும் ஒன்று என்று கருதுகிறேன். மரத்தைப் பார்த்தால் ஜடம் போல அமைதியாய் தெரியும். அதில் அமைதியாய் நடப்பது தெரியாமல் எல்லம் நடக்கும். பூக்கும், காய்க்கும், உதிர்க்கும்- அதன் வேரோ புதைந்து கிடக்கும் நிலையிலும் ஒரு வேட்டையை நடத்திக் கொண்டிருக்கும். நிலத்தடி நீரை உறிஞ்சுவதில் இருந்து அதை மரத்தின் உச்சந் தலைக்கு ஏற்றுவது வரை ஒரு பெரிய இயக்கமாய் அது நிகழும். துளி சப்தம் கிடையாது. ஆர்ப்பாட்டம் கிடையாது. இத்தனைக்கும் மரம் புறத்தில் பலரால் வெட்டப்படும்- கிளைமுறியல்- இலைகள் பிய்க்கப்படும். ஆனால் கூப்பாடு போடாது. தாங்கிக் கொள்ளும். அதே சமயம் செயல்பாடும் நிற்காது.

இது நவரத்தினங்களுக்கும் பொருந்தும். இதன் செயல் பாடும் இப்படித்தான். ரத்தினங்களின் செயல்பாட்டை- சம்பவங்களை வைத்துத்தான் எடையிட முடியும். அது மூன்றாவது கண்ணால்கூட பார்க்கமுடியாது. புலனுக்கு வசப்படாத ஒன்று இது.

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*அந்த கார் நாகலாபுரத்தைக் கடந்து பிச்சாட்டூர் வழியாக நாராயண வனம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது.*

*உள்ளே சிவராமன், ஆதித்தன், சுந்தரம்!*

tamilebooks.net

சிவராமனே காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஆதித்தனும், சுந்தரமும் பேச்சுக் கொடுத்தபடி அமர்ந் திருந்தனர். அதில் நிறைய வியாபார ரகசியங்கள்.

"ஷிவ்ராம்ஜீ... உங்க மன்த்லி டர்ன் ஓவர் எவ்வளவுன்னு, தெரிஞ்சுக்கலாமா?"

"எதுக்கு கேக்கற ஆதித்...?"

"பரம்பரை வைர வியாபாரியாச்சே. நிறைய கஸ்டமர் கள் வேற இருப்பாங்க. அதான் எவ்வளவுன்னு தெரிஞ்சுக் கறதுக்காக கேட்டேன்."

"சொன்னா ரொம்ப ஆச்சரியப்படுவே ஆதித்... இப்பல் லாம் வியாபாரம் ரொம்ப டல்."

"காரணம்?"

"தங்க- வைர மோகம் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சு கிட்டு வருது. அந்த காலத்துல வைரம் வெச்சுக்கிட்டிருக் கறது ஒரு ஸ்டேட்டஸா இருந்தது. இப்பா கார் வெச்சுக் கறதும், ஃப்ளாட் வாங்கிப் போட்றதுன்னும் அது மாறிப் போச்சு."

"அப்ப வைர மார்க்கெட் எதிர்காலத்துல அழிஞ் சுடுமா?"

"அப்படி நான் நினைக்கல. இப்பல்லாம் ஜனங்களுக்கு பழைய விஷயங்கள்ல நம்பிக்கைகள் அதிகமாக ஆரம்பிச் சிருக்கு. ஜோசியம், ஜாதகம், வாஸ்து சாஸ்திரம் இதெல்லாம் இப்ப சக்கை போடு போடுதுல்ல...?"

"அப்ப வைர வியாபாரம் டெவலப் ஆகுமா?"

"நிச்சயமா... வைரத்தை ஒரு காஸ்ட்லி மெடீரியலா மட்டும் பார்க்காம அதை கிட்டதட்ட ஒரு சாமியாவே

tamilebooks.net

பாக்கற ஒரு மனோபாவம் வளர ஆரம்பிச்சிருக்கறதால நவரத்தின பிசினஸ் நிச்சயமா சக்கைபோடு போடும்."

"ஆமா... இந்த நவரத்தினங்களுக்கு சக்தி இருக்குன்னு சொல்றது உண்மையான ஷிவ்ராம்ஜி...?"

"அது இந்த லலாட வைரம் கிடைக்கறதுல இருக்கு சுந்தரம்."

"இதை விடுங்க... நீங்க எத்தனையோ விதமான வைரங்கள் வாங்கி விக்கறவர் ஆச்சே. உங்க அனுபவம் என்ன சொல்லுது?"

"அதுக்கு சக்தி இருக்கறது உண்மைன்னா... அதை நானும் நம்பியிருந்தா சாமியார்கிட்ட அதை கண்டு பிடிக்கறதுக்காகவே ஒரு பக்தனா பழகியிருப்பேனா?"

"அப்ப உங்க அனுபவப்படி வைரங்கள் சக்தி இல்லாதவை. அப்படித்தானே?"

"ஆமாம்..."

ஆனா இந்த லலாடம் கிடைச்சுட்டா தன்னோட பெருவியாதி சரியாகி தனக்கும் சில சித்திகள் கிடைக்கும்னு சுவாமிஜி நினைக்கறாரே- அவர் முட்டளா?"

"நம்பிக்கை உள்ளவங்கள முட்டாள்னும், இல்லாதவங் களை அறிவாளிகள்னும் சொல்றத நான் வெறுக்கறேன் ஆதித். மனுஷன் எப்பவுமே சுயநலமானவன். இதால உனக்கு நல்லது நடக்கும்னு சொல்லி ஒரு தலைமுடியை கொடுத்துப்பார். நடக்குதா பாக்கலாம்னு அதை வாங்கி பரிசோதனை செய்து பார்ப்பான். யானை முடில மோதிரம் செய்து போட்டுக்கறதெல்லாம் அப்படித் தானே?"

"அப்ப இதை என்னன்னு சொல்றது- பேராசைங்க லாமா?"

tamilebooks.net

"பேராசைதான்... வேற என்ன?"

"அதனால பேராசைக்காரங்கள நம்ம புத்திசாலித்தனத்தால தண்டிக்கறது தப்பு இல்லை. அப்படித்தானே?"

"அது தண்டனையா இல்ல ஏமாத்தறதாங்கறத பத்தியெல்லாம் நான் யோசிக்கறதேயில்லை. எனக்கு என் வியாபாரம்தான் குறி. வியாபாரத்துக்கு அடிப்படை கொஞ்சம் சாமர்த்தியம்-கொஞ்சம் தைரியம்-கொஞ்சம் நேர்மை... இது என்கிட்ட இருக்கு சுந்தரம்."

"அப்ப லலாட வைரத்தைத் தேடி திருடப்போறோமே இதுக்கு பேர் என்ன?"

"ஒரு சமாதிக்குள்ற வீணாகிகிட்டு இருக்கற ஒண்ணை எடுத்து பலகோடிக்கு விக்க நினைக்கறதுக்கு பேர் திருட்டு இல்ல ஆதித்... இது சாமர்த்தியம்.

அதோட லலாட வைரம் ஒண்ணும் பொட்டுசாமி யார்க்கு சொந்தமில்லை. அது அவருக்கே சும்மா வந்த ஒண்ணுதானே?"

"ஷிவ்ராம்ஜி... இந்த லலாடவைரம் பத்தி உங்களுக்கு எப்படி தெரியும்?"

"நான் சின்ன புள்ளையா இருக்கும்போதே கேள்விப்பட்டிருக்கேன். என் அப்பாவால இது எங்க இருக்குன்னுகூட தெரிஞ்சுக்க முடியலை. எனக்கு தெரிய வந்துருக்கு. அவ்வளவுதான்."

"நமக்குன்னு சொல்லாம எனக்குன்னு பிரிச்சு பேசறீங்களே ஷிவ்ராம்ஜி."

"சரி. நமக்கு..."

"இதை முந்தியே சொல்லியிருந்தா நல்லா இருக்கும்."

tamilebooks.net

"சாரி டியர் பார்ட்னர்ஸ். நீங்க என்வரைல என் பிசின ஸோட புரோக்கர்ஸ். உங்க மூலமா நான் இந்த வைரத்தை இந்த மண்ணுக்கே சொந்தமில்லாதவங்களுக்கு விக்கப் போறேன்.

அப்படி வித்துவரப்போற பணத்துல உங்களுக்கும் கமி ஷன் தந்துடப்போறேன். நம்ம உறவு அவ்வளவுதான்." –சிவராமன் மிகத்தெளிவாக எந்தவித பதட்டமும் தடுமாற்ற மும் இன்றி பேசினார்.

கார் நீண்ட மலைச்சாலையில் கிட்டதட்ட நாராயண வனத்தை நெருங்கிவிட்டது போல தோன்றியது. ஆதித்தனும், சுந்தரமும் ஒரு குத்து வாங்கினது போல ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்ன பாக்கறீங்க... கமான். எதுவா இருந்தாலும் கேளுங்க..."

"ஒண்ணுமில்ல... நீங்க ரொம்ப தெளிவா இருக்கீங்க. பட்டுபட்டுன்னு பதில் சொல்றீங்க. ஆனா..."

"என்ன ஆனா?"

"இந்த உண்மையை தெரிஞ்சுகிட்ட நாங்க உங்களை முந்திகிட்டு சமாதிக்குப் போய் வைரத்தை திருடிகிட்டு போயிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க...?"

"அது முடியவே முடியாது மிஸ்டர் ஆதித்தன். லலாட வைரத்தை சாமியார் சமாதியில இருந்து எடுக்கறது அவ்வளவு சுலபமில்ல. அது தனியா ஒரு நபரால செய்யக் கூடிய செயல் இல்ல. இது தெரிஞ்சுதான் இந்த விஷயத்துல நான் உங்ககூட கூட்டணி வெச்சுகிட்டேன். அடுத்து இந்த சேசிங்கை வீடியோ எடுக்கற வேலையெல்லாம் இருக்கு. அந்த வீடியோவை பார்த்துதான் இது பல நூற்றாண்டுக்கு முந்தின பழைய வைரம்கறத பார்ட்டியும் ஒத்துக்குவான்.

tamilebooks.net

இல்லேன்னா ஏதோ ஒரு வைரத்தை காட்டி இதுதான் அதுன்னு சொல்லி வித்திட்டு போக எவ்வளவு நேரமா யிடும். ஆகையால் இது ஒரு கூட்டு முயற்சியாலதான் சாத்யமாகும். இது தெரியாம கூட இருந்தே குழி பறிச்சுடாதீங்க.

யார்கிட்ட ஒத்துமை இருக்கோ இல்லையோ களவுக்கு போறவங்க ஒத்துமையா இருந்தே தீரணும். இல்லேன்னா அவங்க இந்திய நண்டாயிடுவாங்க...”

“இந்திய நண்டா?”

“ஆமாம்... இந்திய நண்டுகள் நாலை ஒரு டப்பால போட்டுப் பாருங்க தெரியும். ஒரு நண்டால கூட டப்பாவைவிட்டு வெளியே வருமுடியாது.

ஒண்ணோட காலை இன்னொண்ணு பிடிச்சு இழுக்கும். எதுவும் வெளிய போகாது. நாம அப்படி இருக்கணுமா...?”

-சிவராமன் அழகாகக் கேட்டார். சுந்தரமும், ஆதித்தனும் மறுபேச்சு பேசவில்லை.

கார் மெயின் ரோட்டில் இருந்து விலகி ஒரு மலையடி வாரம் நோக்கி மண் சாலையில் இறங்கி விட்டிருந்தது.

“பல தடவை இந்த இடத்துக்கு நீங்க வந்த மாதிரி தெரியுதே?”

“பல தடவைல்லாம் இல்ல- ஒரே ஒரு தடவை. அதுவும் என் அப்பாவோட...”

“அப்பவும் வைர வேட்டைக்குத்தான் வந்தீங்களா?”

“ஆமாம். அப்பா இங்க ஒரு வாரம் தங்கி இருந்து எங்கெங்கியோ போய்ட்டு வந்தார். தொலைச்ச இடத்துல தேடினாதான் கிடைக்கும்னு சொல்வாங்க. வேற எங்க தேடினாலும் விடை பூஜ்யம்தானே?”

tamilebooks.net

"எப்படியோ... காலம் கடந்தாவது இப்ப, தெரிஞ்சதே..."

"அவசரப்படக்கூடாது..."

-சிவராமன் சற்று அதிர்ச்சியளித்தார்.

"என்ன சொல்றீங்க ஷிவ்ராம்ஜி?"

"இந்த ரகசியம் இப்ப நம்ம சுவாமிஜிக்கும் தெரியும் தானே?"

"ஆமாம்..."

"அவரும் இதை எடுக்க முயற்சிப்பார்னு நினைக்கிறீங்களா?"

"மூடின சமாதியை திறக்க எந்த பக்தனும் துணிய மாட்டாங்க. அதுலையும் பொட்டுச்சாமி ரொம்ப பிரபலமான ஒரு ராஜயோகி. அவரோட ஆத்மா சும்மா விடாதுன்னு ஒரு பயம் இருக்கும். அதனாலதான் சுவாமிஜியும் தன்னோட நாட்களை இங்க வந்து கழிக்கப்போறதா சொன்னார்."

"அப்புறம் என்ன?"

"விஷயம் தெரிந்த சுவாமிஜி மறைமுகமா சமாதியை பாதுகாக்க சொல்லியிருக்கலாம் இல்லையா?"

"நமக்கு பயந்துகிட்டா?"

"பயப்பட்றவர் கிடையாது சதானந்த் மகராஜ். பொட்டுச்சுவாமிகளோட சிஷ்யர்கள் அகராதியிலையே அதெல்லாம் கிடையாது. இருந்தாலும் ஒரு எச்சரிக்கைக்காக சொல்லியிருக்கலாம். இது என் யூகம்..."

"வேடிக்கையா இருக்கு... சமாதிக்குகூட அதுக்குள்ள இருக்கற சங்கதியை வெச்சுத்தான் மதிப்புன்னா இதை என்னான்னு சொல்றது?" -சுந்தரம் தோளைக் குலுக்கிக் கொண்டு சிரித்தான். ஆதித்தனும் சேர்ந்து கொண்டான்.

tamilebooks.net

கூடவே குசும்பாக ஆதித்தனும் சேர்ந்து கொண்டான். கூடவே குசும்பாக ஒரு கேள்விக்கும் தாவினான்.

"ஷிவ்ராம்ஜி... தினம் பூஜை புனஸ்காரம் யோகம் தவம்னு இருக்கற நம்ம சுவாமிஜிக்கு கூட வைரம் இருக்கற இடத்தை புத்தகத்தை பாக்காம சொல்ல முடியலை பாத்தீங்களா?"

"அவரும் நம்மபளப் போல மனுஷர்தான் ஆதித்தன். சாமியார்ங்கறதாலேயே அவங்களுக்கு மூணு காலமும் தெரியணும். நாம ஆசைப்பட்டா அதுக்கு அவங்க என்ன பண்ணுவாங்க..."

"உண்மைதான்... பெருநோய் அவருக்கு வந்திருக்கறத பார்த்தாலே தெரியுமே- அவரும் ஒரு சராசரி மனுஷர் தான்னு..." -இது சுந்தரம்.

"எப்ப நம்மையெல்லாம் பரம பக்தர்னு அவர் நினைச்சாரோ அப்பவே அவர் சராசரியாயிட்டார். நிஜமான சாமியாரா இருந்தா நம்மை கிட்டவே சேர்த்திருக்க மாட்டாரே...?" -திரும்பவும் ஆதித்தன்.

இருவரையும் மீண்டும் ஒரு அர்த்த புஷ்டியுள்ள பார்வை பார்த்தார் சிவராமன்.

"க்யாஜி... தப்பா எதாவது சொல்லிட்டோமா?"

"நிச்சயமா... நீங்க ஏன் இன்னும் புரோக்கர்களாவே இருக்கீங்கன்னு இப்பதான் புரியுது."

"என்னஜி... எதுக்காக இப்படி எங்களை மட்டமா நினைக்கிறீங்க?"

"பின்ன... உங்களை அவர் புரிஞ்சுக்கலைன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?"

"புரிஞ்சிருந்தா நம்மை கிட்ட விட்ருப்பாரா?"

tamilebooks.net

"ஏன் நம்மை பயன்படுத்திக்கறதுக்காக விட்டு வெச்சிருக்கக்கூடாது?"

"எப்படி... எப்படி?"

"லுக் ஆதித்தன்... நமக்கு அவரோட தயவு தேவைப்பட்ட மாதிரி அவருக்கும் நாம தேவைப்பட்டிருக்கோம். இதுதான் உண்மை.

அந்த புத்தகத்தை தேடி அலைய நம்மால, குறிப்பா என்னால தான் முடிஞ்சது. ஆனா அதுல இருக்கற ரகசியத்தை அவராலதான் சொல்ல முடிஞ்சது.

ரகசியம் தெரிஞ்சுட்ட நிலைல வைரத்தை அவர் காப்பாத்திட்டா அவர்தான் புத்திசாலி. அதை கைப்பற் றிட்டா நாமதான் புத்திசாலி. இதுதான் மேட்டர் விஷயம் இப்படி இருக்க அவரை மட்டமா எடை போட்றதும் உங்க காலரை நீங்களே தூக்கிவிட்டுக்கறதும் முந்திரிக் கொட்டைத்தனம்!"

–சிவராமன் நன்றாகவே போட்டார்.

பொட்டுச்சாமி ஆஸ்ரமும் மலையாடிவாரக் காட்டில் ஒரு தோட்டத்துக்குள் கண்ணில்பட்டது.

கார் தோட்டத்துக்குள் நுழைந்தது.

ஆதித்தனும், சுந்தரமும் இனி சிவராமன் சொல்கிறபடி கேட்க வேண்டியதுதான் என்கிற தீர்மானத்தோடு அந்த ஆஸ்ரமத்தைப் பார்த்தனர்.

ஆயிரக்கணக்கில் தென்னை, புன்னை, புங்கை, வில்வம், வேலம் என்று மரக்கூட்டம். அற்புதமான சூழ்நிலை.

காரைவிட்டு இறங்கினார்கள். நடந்தார்கள். ஆஸ்ரம் அவ்வளவாய் கூட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

எதிரில் ஒரு பெரியவர் வந்து ெகாண்டிருந்தார்.

tamilebooks.net

சிவராமன் அவரைப் பார்த்து வணங்கினார்.

"நமஸ்காரம்!"

"நமஸ்காரம்... நீங்க?"

"என் பேர் சிவா. சென்னைல இருந்து வரேன்."

சிவராமன் 'சிவா' என்று தன்னை சொல்லிக் கொள்ளவும் ஆதித்தனும், சுந்தரமும் கொஞ்சம் அதிர்ந்தனர். சென்னையில் இருந்து வருவதாக சொன்னதும் மேலும் இடித்தது.

"அப்டியா? சந்தோஷம்.. ஆசிரமத்து தரிசனத்துக்கு வந்திருக்கீங்களோ?"

"ஆமாம்... இவங்க பேர் பாஸ்கர், சந்தர்... இவங்களும் தரிசனத்துக்காகத் தான் வந்திருக்காங்க."

"ரொம்ப சந்தோஷம்... சென்னை எங்கையோ இருக்கு. ஆனா அங்க இருந்தெல்லாம் நீங்க வந்திருக்கறதை நினைச்சா 'மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. போங்க போங்க." - அந்தப் பெரியவர் ஆஸ்ரம பில்டிங்கை காட்டிவிட்டு அவர் பாட்டும் போகத் தொடங்கினார்.

ஆதித்தனும், சுந்தரும் சிவராமனை அதிர்ச்சி விலகாமல் பார்த்தனர்.

"என்ன சுந்தரம்- ஆதித்தன். என்பேர், உங்கபேரல்லாம் மாறிடிச்சேன்னு பாக்கறீங்களா...? மாறணும். அதுதான் புத்திசாலித்தனம். பேரும் மாறணும், நம்ம ஊரும் மாறணும். அதே சமயம் நானும் பொய் சொல்லலை! சிவராமனை சிவான்னு கூப்பிட்றது சகஜம். ஆதித்தனுக்கும் இன்னொரு பேர்தான் பாஸ்கரன். அதாவது சூரியன்னு அர்த்தம். சுந்தரம் எளிமையா சுந்தர் ஆகியிருக்கு. அவ்வளவுதான். பொய்யுமில்லை மெய்யுமில்லைம்பாங்களே இது அந்த ரகம்?"

tamilebooks.net

“எல்லாம் சரி... எதுக்கு ஜி இந்த மாற்றம்?”

“ஒரு எச்சரிக்கைக்குதான். நாம வந்த வேலை முடிஞ்ச போன பின்னாலே நமக்கு பிரச்சினை வரக்கூடாது பாருங்க.” -கண்களை சிமிட்டினார் சிவராமன்.

சுந்தரமும் ஆதித்தனும் அசந்துவிட்டனர்.

ஆஸ்ரமக் கட்டிடமும் காற்றாடியது. யாரையுமே பார்க்க முடியவில்லை.

‘ஆபீஸ் ரூம்’ என்கிற பெயரோடு அறை ஒன்று கண்ணில் பட்டது. எட்டிப் பார்த்தனர். உள்ளே மார்பைத் தொடும் தாடியோடு மேஜைமேல் மித்ரானந்தா என்கிற நேம் போர்டுடன் ஒருவர். அவரும் நிமிர்ந்தார்.

“நமஸ்காரம்...”

“ப்ளீஸ் கம் இன் சைட்... உள்ள வாங்கோ...”

“இங்க நீங்கதான் நிர்வாகியா?”

“ஆமாம்... உங்களுக்கு என்ன வேணும்?”

“மன அமைதிக்காக ஒரு நாலு நாள் இந்த ஆஸ்ரமத்துல தங்கறதுக்கு வந்திருக்கோம்.”

“அப்படியா- ரொம்ப சந்தோஷம்! உக்காருங்கோ...”

“இங்க தங்கறதுக்கு ஏதாவது புரசிஜர்ஸ் உண்டா? இடமிருக்கா...?”

“தாராளமா... இப்போதைக்கு ஒரு நாலஞ்சு பேர்தான் இருக்கோம். புரசிஜர்னு பெரிசா எதுவும் கிடையாது. தினமும் காலை, மாலை சுவாமிகளோட சமாதிக்கு பூஜை. அப்புறமா பஜனை. ஏழுமணிக்கு மேல கூட்டம் இருந்தா டிஸ்கர்ஸ். இல்லேன்னா தியானம்.

tamilebooks.net

எங்க... இப்பல்லாம் கூட்டம் வர்றது ரொம்ப குறைஞ்சு போச்சு."

–அவர் பதில் சிவராமனுக்கு தேனாக இனித்தது. நாலைந்து பேர் மட்டுமே இருப்பதாக சொனனதும் மனதில் பாலை வார்த்தது. வந்த காரியத்தை கச்சிதமாக' முடித்துவிடலாம்.

அவர் தொடர்ந்தார்.

"நீங்க முதல்ல ரெஸ்ட் எடுங்க. குளியுங்க. பிறகு பேசலாம். ஆங்... உங்கபேர் அட்ரஸை இந்த லெட்ஜர்ல எழுதிடுங்க முதல்ல."

–சிவராமன் பலமாக தலையை ஆட்டினார். பெயரையும் முகவரியையும் எழுதும்போது மட்டும் சற்று சிந்தனை.

சென்னை முகவரியை தரவேண்டும். அது நம்பும் விதமாகவும் இருக்கவேண்டும். என்று இரண்டு விதமாயும் யோசித்தபோது பளிச்சென்று ஸ்ரீவத்ஸன் வீட்டு முகவரி ஞாபகத்தில் வந்தது.

அதையே எழுதினார்!

## 14

"எனது ஆய்வில் கோமேதகமும், மாணிக்கமும் எனக்கு பல உண்மைகளைப் புரியவைத்தன. கோமேதகம் ஒரு ரிக்கார்ட் ரூம் போன்றது. இதில் ஆகர்ஷண சக்தி அதிகம். இதை அணிந்தவர்கள் யாகங்கள், ஹோமங்களில் பங்கு கொண்டால் அங்கு உருவாகும் மந்திரக் கதிர்களை கோமேகம் தன் வசம் நிறையவே ஆகர்ஷிக்கும் என்பது தெரிந்தது. கோமேகம் தரித்தவர்களிடம் சூட்சுமபுத்தி அதிகம் இருந்தது. சூட்சுமம் என்பது ஞானம் சார்ந்தது. யாரும் எதையும் சொல்லித் தராமல் நாமாக சில விஷயங்

tamilebooks.net

களைப் புரிந்து கொள்வதுதான் சூட்சுமம். ஒருவருக்கு, பிறக்கும் குழந்தையெல்லாம் இறந்துபோனது. ஒரு நாள் அவர்தன் சூட்சுமபுத்தியால் புள்ளையால் தனக்கு சுகமோ பாதுகாப்போ கிடைக்கக்கூடாது என்பதாலேயே இவ்வாறு ஆகிறது என்பதை அவராகவே உணர்ந்தார். உடனே தனக்கு குழந்தை பிறந்தாலும் அவர்களை தன் சொந்த மாக நினைக்காமல் இறைவனின் பிள்ளையாக்குவேன் என்று நேர்ந்து கொண்டார். அதன்பின் அவருக்கு குழந்தை பிறந்து அது தங்கியது. இந்த உணர்தல் தான் சூட்சுமம்!'

*-ஆராய்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*மும்பை- பைகுல்லா!*

*ஸ்ரீஸ்ரீ துர்க்கா மாதா பீடம்*

*இரவு மணி எட்டு...*

*துர்கா மாதா சன்னதிக்கு வரும் கூட்டமெல்லாம் குறைந்து அந்த மடத்து கதவையும் வாட்ச்மேன் இழுத்து மூடும் நேரம். பக்கத்து கட்டிடத்தில் அஞ்சலி மாதாவும் நிஷ்டைக்கு தயார் ஆகிக்கொண்டிருந்தாள். அப்போது இன்ட்டர்காம் கமறியது.*

*"அஞ்சலி! இந்த சிவராம், ஆதித்தன், சுந்தரம் இவங்க மூணு பேரும் இன்னிக்கு நம்மபீடத்துக்கு வந்தாங் களா?"-சதானந்த மகராஜிடம் இருந்துதான் கேள்வி.*

*"நை மகராஜ்... அவங்க மூணு நாளாகவே நம்ம பீடத்துக்கு வர்றதில்ல."*

*"சரி... நீ கொஞ்சம் என் அறைக்கு வர்றியா?"*

*-அஞ்சலி மாதா உடனேயே புறப்பட்டு விட்டாள்.*

*சுவாமி சதானந்த மகராஜின் அறை!*

tamilebooks.net

கதவை தட்டிவிட்டு "ஆவோ..." என்கிற பதிலைக் காதில் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

சுவாமிஜி பத்மாசனத்தில ஒரு யோகப்பயிற்சி செய்த படி இருந்தார்.

அஞ்சலிமாதா தூரவே நின்றாள். கைகளையும் பணிவாக கட்டிக்கொண்டாள். சுவர் கெடிகாரத்தில் மணி எட்டைக் கடந்து விட்டிருந்தது. சுவாமிஜியோ, எதுவும் பேசாமல் தன் பயிற்சியிலேயே இருந்தார்.

அஞ்சலிமாதா அவரை மிக புரிந்தவள்.

எனவே சரியான காரணமிருக்கும் என்று காத்திருக்கத் தொடங்கினாள்.

இரண்டு நிமிடங்கள்தான் கழிந்திருக்கும். அவரது அறையின் கார்ட்லெஸ் சிணுங்கியது. சுவாமிஜி அஞ்சலி மாதாவைப் பார்த்தார். அவளும் போய் ரிசீவரை எடுத்து காதைக் கொடுத்தாள்.

"திஸ் ஈஸ் பைகுல்லா துர்கா மாதா பீடம்?"

"யெஸ்... ஹூ ஈஸ் ஸ்பீக்கிங்."

"மாதாஜி... ஐ ஆம் மித்ரானந்தாஸ் பீக்கிங்."

"மித்ரானந்தா... ஓ... ஹவ் ஆர் யூ?" -அவர்களின் உரையாடலின் தமிழாக்கம்.

"நான் நல்லா இருக்கேன் மாதாஜி. சுவாமிஜி தூங்கிட்டாரா?"

"இல்ல... யோகாப்பியாசத்துல இருக்கார்."

"பேச முடியுமா?"

"இருங்க கொடுக்கறேன். அப்புறம்... எப்படி இருக்கு ஆஸ்ரம பணிகளெல்லாம்?"

tamilebooks.net

“ஒரு பிரச்சனையுமில்ல. சுவாமிஜி சொன்ன மாதிரி இனிமேல் வந்தாதான் உண்டு.,”

“என்னது... பிரச்சினை வரும்னு சுவாமிஜி சொன்னாரா?”

“ஆமாம்... பிரச்சனையும் வந்தாச்சு.”

“சரி... நீங்களே சுவாமிஜிகிட்ட பேசுங்க...”

–அஞ்சலிமாதா அந்த கார்ட்லெஸ் போனை சுவாமி ஜியை நெருங்கிச்சென்று நீட்டினாள்.

சுவாமிஜியும் வாங்கி காதைக் கொடுத்தார்.

“சுவாமி மஹராஜிக்கு மித்ரானந்தாவோட அனந்த கோடி நமஸ்காரம்.”

“சொல்லு மித்ரா...”

“நீங்க சொன்ன மாதிரியே அந்த டயமண்ட் மெர்ச் சண்ட் சிவராமனும், ஆதித்தன், சுந்தரம்கற இரண்டு பேரும் இங்க வந்திருக்காங்க. பேரையும் ஊரையும் மாத்தி வெச்சிகிட்டு தங்கியிருக்காங்க...”

“நல்லது மித்ரா... அவங்கள நல்லா கவனிச்சுக்கோ. அவங்க சமாதிக்கு புத்துயிர் கொடுக்க வந்திருக்காங்க...”

“நல்லது மஹாராஜ்...”

“நான் அடுத்த மாசத்துல இருந்து அங்கதான் தங்கப் போறேன். இனிமேல்தான் அந்த மடத்துக்கு பெயரும் புகழும் வரப்போகுது.”

“ரொம்ப சந்தோஷம் மஹாராஜ்!”

“விபரீதமா, எதாவது நடந்தா போலீசுக்கு போயிடாதே. எனக்கு தகவல் கொடு...”

“மஹராஜ்... என்னென்னமோ சொல்றீங்களே!”

tamilebooks.net

*“என்னென்னமோ நடக்கப்போகுதே...”*

*“அப்படியா?”*

*“பயப்படாதே. நம்ம சுவாமிஜி அனுக்ரகம் நல்லதையே செய்யும். ததாஸ்து.”*

*“நல்லது மகராஜ். நமஸ்காரம்!”*

*–சுவாமிஜி கார்ட்லெஸை திரும்ப அஞ்சலிமாதாவிடம் நீட்டினார். அவள் முகத்தில் லேசான கலவரம். மனதுக்குள் ஏகத்துக்கும் கேள்விகள்.*

*“அஞ்சலி... நீ தான் இனிமே இந்த துர்காபீடத்தை கவனிச்சாகணும். எனக்கு நாராயணவனத்துல பணிகள் இருக்கு.”*

*“போன்ல என்னென்னவோ பேசினீங்களே மஹராஜ்”*

*“என்னென்னமோ நடக்கும்போது பேசத்தானே வேணும்!”*

*–சதானந்த மகராஜ் முகத்தில் மர்மப்புன்னகை.*

## 15

**‘மாணிக்கம்: இது சக்தி அம்சம் மிகக்கொண்ட ஒரு ரத்தினமாகும். அம்பிகையின் நகை அலங்காரத்தில் உள்ளங்கையிலும் கிரீட மையத்திலும் இதை பதித்து நாம் தரிசிக்கும் போது நமது நேத்திரம் வழியாக இது நம் உடலை அடையும்படி செய்திருப்பது மிக நுட்பமான செயல்.**

**சில சித்தர் நல்ல மாணிக்க கற்களைப் பாம்புகளை விழுங்கச் செய்து பின் அது உமிழும்போது எடுத்து வைத்து அதை சக்தி பீடங்களில் வைத்து பயன்படுத்துவார்கள்**

tamilebooks.net

என்றும் அறிந்தேன். இதையே. நாகமாணிக்கம் என்கிறார்களோ என்னவோ?

இந்தச் செயலின் பின்னால் ஒரு வித சூட்சுமம் ஒளிந்துள்ளது. மாணிக்கம் துஷ்ட சக்திகளை சாளக்கிராமம் போல வாசற்படியிலேயே தடுத்து நிறுத்தும். மாந்திரீக சக்திகளையும் எதிர்க்கும்!'

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*படுக்கையில் தடுமாறிக் கொண்டிருந்தார் சேஷாத்ரி. ஓடிவந்தாள் ராஜலட்சுமி.,*

*"ஏன்னா.... என்ன பண்றது?"*

*"நெஞ்சையடைக்கற மாதிரி இருக்கு ராஜி. ஸ்ரீவத்ஸன் எங்கே?"*

*"அவன் அந்த புத்தகத்தையே கட்டிண்டு அலை மோதிண்டு இருக்கான்."*

*"கூப்பிடு செத்த..."*

*– அடுத்த ஐந்தாவது நிமிடம் மாடியில் இருந்து இறங்கி வந்தான் ஸ்ரீவத்ஸன்.*

*"என்ன பண்ணிண்டிருக்கே?"*

*"உங்களுக்கு நான் என்னப்பா பண்ணனும்?"*

*"என் கேள்விக்கு நீ பதிலைச் சொல்லு..."*

*"சும்மாதான் இருக்கேன்."*

*"கைல என்ன... தாத்தாவோடபுத்தகமா?"*

*–அவன் தலையை ஆட்டினான்.*

*"அந்த நூறுகோடி ரூவா கிறுக்கு உனக்கும் புடிச்சுடுத்தா?"*

tamilebooks.net

அவன் மௌனமாக அவரை வெறித்தான்.

"போறும் ஸ்ரீ... இந்த ஆராய்ச்சி. அப்புறம் புத்தகம்னு உன்தாத்தா பேரெடுத்ததைவிட இழந்ததுதான் அதிகம்."

–அவன் வெறிப்பு தொடர்ந்தபடி இருந்தது.

"அதை தூக்கிப்போட்டுட்டு செத்த டாக்டரை கூப்டுண்டு வா."

"என்னப்பா பண்றது?"

"நெஞ்சையடைக்கறது..."

"சரிப்பா... இப்பவே நம்ம டாக்டரை கூப்பிட்றேன்."

'ஸ்ரீவத்ஸன் ஓடினான். அரைமணியில் டாக்டரோடு வந்தான். டாக்டரும் சோதித்து பார்த்து முடித்துவிட்டு அவனோடும் ராஜலட்சுமியோடும் சற்று வெளியில் வந்தார்.

"அவருக்கு மைல்டு அட்டாக் ஏற்பட்டிருக்கு. ரொம்ப ஜாக்ரதையா பாத்துக்கணும்." 'அதிச்சியை தந்தார்.

'ஐயோ... காத்தாலகூட நன்னா பேசிண்டிருந்தாரே...! கையும் காலும் இழுத்துண்ட நிலைல நெஞ்சிலையும் பிரச்சினைன்னா... நாராயணா!" அலறினாள் ராஜ லட்சுமி. அடுத்த க்ஷணம் அவளுக்கு நெஞ்சைக்குத்தியது. கப்பென்றும் வியர்க்கத் தொடங்கியது.

"டாக்டர் என்னன்னு பாருங்கோ... டாக்டர்... பாருங்கோ..." 'ஸ்ரீவத்ஸன் பதறினான். டாக்டர் சுறுசுறுப் பானார். சில நிமிட பரிசோதனைக்குப் பிறகு நர்சிங் ஹோமுக்குப் போன் போட்டார்.

பதினைந்தாவது நிமிடம் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது.

சேஷாத்திரி, ராஜலட்சுமி இருவருமே அதில் அடங்கிட ஆம்புலன்ஸ் ஆஸ்பத்திரி நோக்கி ஓடத் தொடங்கியது.

tamilebooks.net

கூடவே அதிர்ச்சியோடு ஸ்ரீவத்ஸன்!

இன்டென்சிவில் ராஜலட்சுமியும், சேஷாத்ரியும் அனுமதிக்கப்பட்ட நிலையில் வெளியில் வந்தார் டாக்டர். குறுக்கும் நெடுக்குமாய் நடந்தபடி ஸ்ரீவத்ஸன்.

"கலப்படாதே... காப்பாத்திடலாம்!" - அவர் வார்த்தை சற்று ஆறுதலாக இருந்தது.

"நான் ஜீனியர் டாக்டரா இருந்தப்போ இதே மாதிரி தான் உன் பாட்டி அட்மிட் ஆனா. அப்பா உன் தாத்தா ஒரு வைரத்தை வெச்சுண்டு ஆராய்ச்சி பண்ணிண்டிருந் தார். இப்ப அதே மாதிரி ஒரு நிலை உங்கப்பா அம்மாவுக்கு. அப்ப என் அப்பா அட்டெண்ட் பண்ணார். இப்ப நான் பண்ணியிருக்கேன்."

-அவர் எதை வைத்துக் கொண்டு அப்படி சொன் னாரோ தெரியாது. ஸ்ரீவத்ஸனுக்கு சுருக்கென்றது. இன்று இப்படி ஆனதற்கும் அந்த வைரத்தை நேற்று தான் பார்த்ததற்கும் தொடர்பு இருக்குமோ..?" -க்ஷணத்தில் குறுக்கில் ஓடிவந்து கேள்வி கேட்டது புத்தி. 'சேச்சே.. இதெல்லாம் அபத்தம்!' -கேட்ட புத்தியே ரிவர்ஸில் போய் சமாளித்தது.

"சரி ஸ்ரீ... நீ போய்ட்டு நாளைக்கு வா. எந்தக் காரணத் தைக் கொண்டும் அவாளைப் பாக்க- பேசக்கூடாது. இங்க நீ இருக்கறது வேஸ்ட்."

-அவனை அவர் துரத்தாத குறை. அவனும் பைக்கை கிளப்பிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். வந்து உள்ளே நுழைந்த நொடி தொலைபேசியின் அழைப்பு. அதை எடுக்கவே பயமாக இருந்தது. 'அது ஆஸ்பத்திரியில் இருந்து தான் வந்திருக்கவேண்டும். நாம் கிளம்பி வந்துவிட்ட நிலையில் அப்பா அம்மாவுக்கு அட்டாக்கில் உயிர் போயிருக்க வேண்டும்- அதை சொல்லத்தான் அலறுகிறது

tamilebooks.net

இந்த தொலைபேசி!' -மனதில்-கற்பனையில் விழுந்து புரண்டான். கைகள் நடுங்க ரிசீவரை எடுத்தான்.

"திஸ் ஈஸ் மிஸ்டர் ஸ்ரீவத்ஸன்?"

"யெஸ்... ஸ்பீக்கிங்!"

"உங்களுக்கு கதிர்னு நண்பர் இருக்காரா?"

"ஆமாம்... ஏன்? என்ன விஷயம்?"

"சீக்கிரமா கிளம்பி ஜி.எச்.க்கு போங்க. அங்க அவர் ஆக்சிடெண்டாகி உயிருக்கு போராடிக்கிட்டிருக்காரு. உங்களைப் பார்க்கணும்னு ஆக்சிடெண்ட் ஸ்பாட்ல உங்க பேரை மட்டும் சொன்னார். போன் நம்பர் அவருக்கு தெரியல. நான் ஒரு வெல்விஷர். டைரக்டரில ஸ்ரீவத்ஸன் கற பேருக்கெல்லாம் போன் பண்ணி-நல்லவேளை உங்களைப் பிடிச்சேன்."

-ஸ்ரீவத்ஸனுக்கு தலை நடுவில் யாரோ ஆணியில் அடித்தது போல் இருந்தது.

"மைகாட்!" -உதடு கூவிற்று.

ஜி.எச்!

அங்கேயும் இன்டென்சிங் கேரில்தான் கதிர்.

வெளியே பிரபு, கௌதமன். வியர்த்து வடிய ஸ்ரீவத்ஸன் வரவும் பிரபுதான் கேட்டான். "நீங்கதான் ஸ்ரீவத்ஸனா?"

"ஆமாம்... கதிருக்கு எப்படி இருக்கு?"

"ரொம்ப க்ரிட்டிகல். பை த பை ஒரு முக்கியமான விஷயம்."

"என்ன?"

-கௌதமன் ஸ்ரீவத்ஸனை தள்ளிக்கொண்டு சற்று ஒதுங்கினான்.



tamilebooks.net

"என்ன சார்? என்ன விஷயம்?"

"கையை நீட்டுங்க சொல்றேன்."

"அட... என்ன சார்..."

"இந்தாங்க... முதல்ல இந்த வைர மோதிரத்தைப் பிடிங்க." -கௌதமன் கையில் அந்த லலாட வைர மோதிரம்.

"இது... இது... உங்ககிட்ட எப்படி?"

"அவன்தான் கழட்டிக் கொடுத்தான். உங்க தாத்தா எழுதினது. யாரோ ஒரு பாதிரியார் சொன்னது எல்லாமே உண்மையாம். இதை நீங்க சேக்கற இடத்துல சேர்த்துடு வீங்களாம்."

"நான் மாட்டேன்..." -அலறினான். சட்டென்று ஒரு நான்கைந்தடி ஒதுங்கி ஓரம் கட்டினான்.

"ப்ளீஸ் சார்... இதை பார்க்கவே எங்களுக்கு பயமா இருக்கு. இது வைரம் இல்ல சார். சாத்தான்!"

-கௌதமன் அப்படி சொன்னபோது அருணாசலமும் வசந்தியோடு வந்து கொண்டிருந்தார்.

கையில் மோதிரத்தோடு கௌதமனும், ஸ்ரீவத்ஸனும் நிற்பதைப் பார்த்து நெற்றியைத் தேய்த்தார். கௌதமன் உடனே அந்த மோதிரத்தை அவரிடம் நீட்டினான்.

"சார் இந்தாங்க... இது உங்களுதுதான்!" -அவரும் அடுத்த நொடி நான்கடி விலகினார்.

"என்னசார்... இது உங்களதுதான்- நீங்களே பயந்தா எப்படி?"

"பயந்துதான் ஆகணும். இதை பூஜிக்காம இதை பயன் படுத்திக்கப் பார்த்தவன் நான். அதுக்கு நான் நிறைய விலையும் கொடுத்துட்டேன். இதை நான் பொட்டுச்சாமி

tamilebooks.net

காலடியில் இருந்து எடுக்காம இருந்திருக்கணும். எடுத்து கதிருக்கு கொடுத்தது என் தப்பு. அது இவ்வளவு தூரம் கொண்டு வந்துவிடும்னுல்லாம் நான் எதிர்பார்க்கல."

"சார்! நாம் பேசிக்கறத வெளியே இருக்கறவங்க பார்த்தாலோ, கேட்டாலோ சிரிப்பாங்க. இதுக்கு உண்மையான மதிப்பு நூறு கோடிக்கும் மேலேயாமே... ஆனா இதை வாங்கிக்க இரண்டு பேருமே பயப்பட்றீங்களே..."

"சரி... அப்பா நீயே வெச்சுக்கோ..."

"ஐய்யோடா... நானே இப்பதான் ஆஸ்பத்திரியில இருந்து வெளியே வந்துருக்கேன். எனக்கு வேண்டாம் சார்."

"அப்ப தூக்கி எறி." - நெருங்கி வந்த பிரபுதான் அப்படிச் சொன்னான்.

சட்டென்று ஸ்ரீவத்ஸனிடம் ஒரு பொறி.

அருணாசலத்தைப் பார்த்தான். "சார் அதை வாங்கிக் கோங்க. ஒரு நல்லவழி இருக்கு. அதுவும் இப்ப நீங்க பொட்டுச்சாமியோட காலடில வெச்சிருந்தேன்னு சொன்னதுலதான் தெரிய வந்தது.

என் தாத்தா தன்னோட புத்தகத்துல பொட்டுச்சாமி திருவடிகளை பிடிக்கறவாளுக்கு நூறுகோடி கிடைக்கும்ற மாதிரி எழுதியிருக்கார். தாத்தா எந்த அர்த்தத்துல எழுதினாரோ தெரியாது. ஆனா நான் அவர் ரகசியம்'னு சொல்லி எழுதினதை நிஜமாக்கப்போறேன். கமான் அதை வாங்கிண்டு கிளம்புங்க."

"எங்க தம்பி?"

"கிளம்புங்க சொல்றேன்!" -இருவரும் வேகமாக புறப்பட்டனர்.

tamilebooks.net

## 16

நவரத்தினங்களுக்கும் தான்யங்களுக்கும்கூட தொடர்பு இருக்கிறது. நவக்கிரகங்களின் பிரதிநிதிகள்தான் ரத்தினங்கள். இந்த ரத்தினங்களின் பிரதிநிதிதான் தான்யங்கள். சூரியனுக்கு உகந்த கோதுமையில் சூரியக்கதிரின் தன்மைகள் அடங்கியும் அது சூரியனை மிக ஆகர்ஷித்தும் வளருவதைப் பார்த்தேன்.

இதேபோலத்தான் ஒவ்வொரு தானியங்களும் ஒவ்வொரு விதமான கிரகத்தின் தனித்த தாக்கத்தைப் பெற்றுள்ளன. ஜாதகத்தில் கிரகங்களின் உச்ச—நீச்சம் பார்த்து அதற்கேற்ப இந்த நவதானியங்களை சாப்பிடு வதன் மூலம் உடம்பின் இயக்கச் சக்கரத்தை உரிய வேகத்தில் சுழல வைக்கலாம்.

நம் முன்னோர்கள் கற்கள், தான்யங்களில்கூட வான்வெளி கிரகங்களின் தொடர்பைக் கண்டறிந்து அதை பகுத்து வைத்திருந்த உண்மையில் மிக ஆச்சரியமான விஷயம்!"

*—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா*

*அருணாசலமும், ஸ்ரீவத்ஸனும் புறப்பட்ட அதே நேரம்! நாராயணவனம் பொட்டுச்சாமி ஆஸ்ரமம் தாராளமான அமைதியில் இருந்தது.*

*இருப்பது ஒரு நான்கைந்து பேர். அவர்களும் ஆன்மீக புத்தகங்களை வாசித்தபடி படுத்துவிட்டனர்.*

*சமையற்காரப் பெண் அங்காளம்மா கூட சமையல் பாத்திரங்களைக் கழுவி கவிழ்த்து வைத்துக்கொண்டிருந் தாள்.*

tamilebooks.net

அப்பொழுது ஆதித்தன் சமையல் கட்டுக்குள் நுழைந் தான். "பால் வேணும்- கிடைக்குமா?" -கேட்டான்.

'இப்ப பாலெல்லாம் கிடைக்காது. ராத்திரியில இங்க பால் தருவது வழக்கமில்லை." என்றாள் அங்காளம்மா.

"அப்படியா..." என்று ஆச்சரியத்தோடு கேட்டுகிட்டு திரும்பினான்.

அறையில் சிவராமனும், சுந்தரமும்...

"என்ன ஆதித்... என்ன சொன்னா?"

"பால் தர்ற வழக்கம் இங்க கிடையாதாமே..."

"நினைச்சேன். ராத்திரியில பால் சாப்ட்டா அஜீரணம் கறது யோகிகள் கருத்து. பால், தயிரை எல்லாம் இரவுல சேர்க்கமாட்டாங்க. சரி இப்ப என்ன பண்ணலாம்."

"வேற வழியே இல்ல... ஸ்ப்ரேயரை யூஸ் பண்ண வேண் டியதுதான். பால்ல மயக்க மருந்து கலக்கறதுங்கறது தான் சாத்யமில்லேன்னு ஆயிடிச்சே?"

"சரிசரி... எல்லாரும் படுத்த பிறகு ஸ்ப்ரேயரோட ஒரு ரவுண்ட் போய்ட்டு வா. இன்னிக்கு ராத்திரி நாம காரியத்தை கச்சிதமா முடிச்சுடணும்."

மணி பன்னிரெண்டு.

ஆதித்தன் மயக்கம் வர வைக்கும் ஸ்பேரயரைக் கொண்டு ஆஸ்மரத்தில் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த மயக்கத்தில் கிடத்திவிட்டு அறைக்கு வந்தான். கையில் வீடியோ கேமரா, ஃபோகஸ் லைட், கடப்பாரை, இரும்புக் கம்பிகள், பாலீதீன் தாள், ஒயிட் சிமெண்ட் என்று ஏராள மான ஐட்டங்களுடன் தயாராக இருந்தனர், சிவராமனும், சுந்தரமும்.

tamilebooks.net

ஆதித்தன் வந்து கட்டை விரலை உயர்த்தவும் இருவரும் ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்தனர்.

"யாரையும் பாக்கி வைக்கலையே..."

"இன்னும் இரண்டு பேர் பாக்கி ஜீ."

"யார் அது?" -சிவராமனிடம் ஒரு உச்சபட்ச திடுக்.

"நீங்களும், சுந்தரமும்தான்!"

-அடுத்த நொடி அந்த பதில் சிவராமனை இலேசாக்கி சிரிக்க வைத்தது.

"பரவாயில்ல... இந்த டென்ஷன்லையும் நீ ஜோக் அடிக்கறே ஆதித்..."

"எல்லாம் நீங்க இருக்கற தைரியம்தான் ஷிவ்ராம்ஜி..."

"நீ தமிழன்தானே... ஏன் இந்திக்காரன் மாதிரி ஷிவ்ராம்கறே? சிவராமன்னு கூப்பிட வராதா?"

"மும்பைலையே பிறந்து வளர்ந்துட்டேனா... அவங்களோட ஷ, ஷி, ஹி, ஹை எல்லாம் நல்லாவே ஒட்டிக்கிச்சு.

"நானும் தான்யா மும்பைல பிறந்தவன். உன்னை மாதிரியா பேசறேன்? சரிசரி புறப்படு- கேமராவை நீ ஆப்பரரேட் பண்ணு. சுந்தரம் நீ எனக்கு உதவி பண்றே."

"ஓ.கே. சார்...!"

-மூவரும் ஒரு யுத்தத்துக்கு கிளம்புகின்ற மாதிரி கிளம்பினர்.

**ச**மாதி தென்னந்தோப்பில் அமைந்திருந்தது.

சமாதி என்றாலே சலவைக் கற்கள் என்கிற நியதி அங்கும் மீறப்படவில்லை. அந்த சலவைக்கற்களின் மேல் ஏராளமான மாலைகள். அவை காய்ந்து போயிருந்தன.

tamilebooks.net

சமாதிக்கு மேல் ஒரு மண்டபக் கூரை.

முன்னாலும் அதன் தொடர்ச்சி. மொத்தத்தில் சமாதி ஒரு சன்னதி போலவே இருந்தது. மண்டபத்தில் அமர்ந்து சமாதியைப் பார்த்தபடியே தியானிக்கலாம். அப்படி ஒரு ஏற்பாடு.

மூவரும் சமாதியை நெருங்கினர். மண்டபத்தை நெருங்கும் போதே ஆதித்தன் கேமராவை ஆன்செய்து விட்டான்.

சமாதி முன் சென்று இருவரும் நின்றனர். பின் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து அதை ஒதுக்கி வைத்துவிட்டு காய்ந்த மாலைகளை அகற்றினர்.

சமாதியின் மேற்கூரைக்கல் ஜில்லென்று கையை அப்பியது.

ஒரு குறிப்பிட்ட இடம் மட்டும் ஆச்சரியப்படும்படி இலேசாக சுட்டது.

சிவராமனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அங்க சூடா எதையாவது வெச்சிருந்திருப்பாங்க. விளக்கு இருந்துச்சோ?"

"இல்ல சுந்தரம்... எதுவும் இல்லை..." - என்று யோசித்த சிவராமன் தொடர்ந்து மேற்கூரை கடற்பாரையால் தகர்க்கத் தொடங்கினார். சப்தம் இரவு நேரத்தில் நன்றாகவே எதிரொலித்தது. அந்த நாளைய பூச்சு... திடமாகவே இருந்தது. அவ்வப்போது கத்தியால் கீறி, கம்பியால் நெம்பி மேற்கூரையை மட்டும் பெயர்த்து எடுக்க வேண்டும்.

"அட என்ன ஜி நீங்க.... ஓங்கி ஓரே போடு- நகருங்க. நான் அந்த கல்லை உடைக்கறேன் பாருங்க."

-என்று சுந்தரம் பொறுமையிழந்து கத்தினான்.

tamilebooks.net

"ஏய்... அப்புறமா எடுத்தது தெரியாம மூடணும்... அத மறந்துட்டியா?"

-அந்த முட்டாளைக் கட்டிப்போட்டவராக தொடர்ந்து மேல்கூரைக் கல்லை மெல்ல நெம்பி ஒரு வழியாக விலக்கினார் சிவராமன்.

உள்ளிருந்து ஒருவித வெப்பக்காற்று!

குப்பென்று முகத்தில் அறைந்தது.

சிலவிநாடிகள் என்ன செய்கிறோம் என்கிற நினைப்பே இல்லாமல் போய்விட்டது.

அதே சமயம் யாரோ வரும் சப்தம்.

திடுக்கிட்டுத் திரும்பியபோது 'ஹக்'கென்றது.

நாக்கைத் தொங்கப்போட்டபடி ஒரு நாய்! சதா தோப்பைச் சுற்றி வந்தபடி இருக்கும்.

"ஜி... நாய்!" -சுந்தரம் கூவினான்.

"டென்ஷனாகாதே... கிட்ட வந்தா ஒரே போடு போட்டுடு!" -என்றபடி ஆதித்தனை அருகில் அழைத்தார்.

"ஆதித்தா வா.. அந்த -போகஸ் லைட்டை உள்ற காட்டு. கமான்."

-ஆதித்தனும் நெருங்கிச்சென்று ஃபோகஸ் லைட்டை உள்புறம் காட்டினான்.

வாவ்!

உள்ளே ஒரு பலகைமேல் பொட்டுச்சாமியின் உதிர்ந்த எலும்புக்கூடுகள். மண்டை ஓடு மட்டும் ஒரு உதைபந்து போல நடுவில்...

"ஜி.. இதுல அந்த வைரத்தை எங்கன்னு தேடுவீங்க?

tamilebooks.net

"உஸ்ஸ்... எதுவும் பேசாதே. அப்படி ஷூட் பண்ணு." -என்றபடியே உள்ளே குதித்தார் சிவராமன். சிறிய இடம். குதித்த வேகத்தில் கால்பட்டு சில எலும்புகள்கூட நொறுங்கிப் பொடிப் பொடியாயிற்று. நல்லவேளை சுவாமி யின் கால் எலும்போடு அந்த செப்பு வளையம் மட்டும் சற்று பச்சை பிடித்த நிலையில் எந்த பாதிப்பிற்கும் உள் ஆகாத நிலையில் கண்ணில் பட்டது.

"யுரேகா..." என்றபடி அதைக் கையில் எடுத்தார்.

"ரொம்ப சந்தோஷம்." -என்று சட்டென்று ஒரு குரல் அப்போது காதில் விழுந்தது. உடனேயே நிமிர்ந்து பார்த்தார். ஆதித்தன் கேமராவில் கண்ணாக இருந்தான். அப்படியே "சார் கிடைச்சிடிச்சா சார்...? சூப்பர் சார்." என்றான்.

"ஆமா... இப்ப எதுக்கு 'ரொம்ப சந்தோஷம்'னே...?"

"நான் சொல்லலையே சார்..."

"காதுல விழுந்திச்சே..." -சற்று நடுங்கியது சிவராமனின் குரல். அதே சமயம் வெளியே அந்த ஒற்றை நாயோடு இப்பொழுது மேலும் பல நாய்கள்!

சுந்தரம் மிரளத் தொடங்கிவிட்டான்.

"ஷிவ்ராம்ஜி... ஒண்ணுக்கு பத்தா நாயுங்க. ஓமன்ங்கற சினிமாவுலகூட இப்படித்தான் வரும்!" -என்று எக்ஸ்ட்ரா கமெண்ட் அடித்தபடி அவைகளை வெறித்தான்.

நாய்கள் சொல்லிவைத்த மாதிரி மிலிட்டரியில் வரிசை யில் நிற்கிற மாதிரி நின்று கொண்டிருந்தன.

நாவில் அந்த ஹ.... ஹ... ஹ... இளைப்பு.

அதிலும் ஒரு கறுப்பு நாய்க்கு மிக நீளமான நாக்கு. அதன் நடுவில் எச்சில் எண்ணெய் சொட்டுபோல் சொட்டிக்கொண்டிருந்தது.

tamilebooks.net

இருபுறமும் நன்கு விளைந்த கோரைப் பற்கள்!

சுந்தரத்துக்கு வயிற்றில் அமிலச் சுரப்பு.

"ஜி... சீக்கிரம் வெளிய வாங்க. இங்க ஒரு நாய் பட்டாளமே வந்து காத்துக்கிட்டிருக்கு."

அவனது அலறலைத் தொடர்ந்து சமாதிக்கு வெளியில் வந்து விழுந்தார் சிவராமன்.

கையில் இறுக்கிப் பிடித்திருந்த நிலையில் அந்த செப்பு வளையங்கள்!

ஆதித்தன் மிக ஷார்ப்பாக அதை ஜூம் செய்து வாரிக்கொண்டான் தன் கேமராவில்.

சுந்தரமும்கிட்டே நெருங்கி வந்தான்.

"ஜி... கிடைச்சிடிச்சா...?"

"கிடைச்சிடிச்சி. இரு பாக்கறேன்."

-சிவராமன் அந்த செப்பு வளையத்தை ஆட்டிப் பார்த்தார். பின் இணைத்தபடி இருக்கும் ஒரு க்ளாம்ப் போன்ற பாகத்தை விலக்கிவிட்டு உள்ளே பார்த்தார். எதுவுமேயில்லை!

வாயில் வைத்து ஊதிப் பார்த்தார்.

காற்று உள்ளோடி மறுபுறம் வெளியில் வந்தது-

"மைகாட்... இதுல எதுவுமே இல்லை!" - கோபமாய் சப்தித்தார்.

"நல்ல பாருங்க... எங்கே?" -சுந்தரம் அதை வாங்கி ஆட்டிப்பார்த்தான். அவர் செய்த எல்லாவற்றையும் செய்தான்.

பின் "ஆமாம். உள்ற எதையும் காணோம்." என்று சிவ ராமனைப் பார்த்தான். ஆதித்தனும் எடுத்தவரை போதும்

tamilebooks.net

என்று கேமராவை வைத்துவிட்டு வந்து வளையத்தை வாங்கிப் பார்த்தான்.

முகத்தில் ஏமாற்றம் பரவத் தொடங்கிற்று. "நகருங்க..." –சுந்தரம் சமாதிக்குள் மீண்டும் குதித்தான்.

"லைட்... லைட்..." என்று கத்தினான். ஆதித்தனும் ஃபோகஸ் லைட்டை திருப்பினான்– எலும்புத் துண்டுகள் நொறுங்கிக் கிடந்தன. அவன் கால் பட்டு மண்டை ஓடு ஒரு பந்துபோல உருண்டு ஓடியது. மொத்தத்தில் தேடலில் எதுவும் அகப்படவில்லை. "ஜி... எதுவும் இல்லஜி. நம்ம சாமி எதையோ உளறியிருக்கார். அதான் இங்க எதுவும் இல்ல..." –என்கிற அவன் குரல் எதிரொலிகளோடு ஒலித்து அடங்கியது. அதே நொடிப்போதில்–

"இல்லாதது எப்படி கிடைக்கும்?" என்று சட்டென்று ஒரு குரல்.. சுந்தரம் விக்கித்துப் போனான். யார் பேசியது என்கிற சந்தேகத்தோடு அண்ணாந்து பார்த்தான். ஃபோகஸ் விளக்கொளியில் கண்கள் கூசின.

"ஆதித்... விளக்கை நகர்த்து. 'இல்லாதது எப்படி கிடைக்கும்'னு யாரோட கேட்ட மாதிரி இருந்துச்சு. உன் காதுல விழுந்துச்சா?"

"இல்லையே... என்னடா இது ஆச்சரியம்." –என்றபடி மேலேறினான்.

சிவராமன் தாடையை தட்டிக் கொண்டிருந்தார். நாய் களும் ஒன்றிரண்டு மூன்று நான்கு என்று அதிகரித்தபடி இருந்தன.

"ஜி... இங்க இல்லஜி... சுவாமிஜி சொன்னது பொய்..." –என்றான் சுந்தரம்.

"ஆமாம். அப்படித்தான் நினைக்கறேன்."

tamilebooks.net

*"சரி இப்ப என்ன பண்றது? அந்த பக்கம் பாருங்க நாயுங்களை..." ஆதித்தன் கை காட்டினான். அவ்வளவு தான். அதுதான் தங்களுக்கான சிக்னல் என்கிற மாதிரி அந்த நாய்கள் பாயத்தொடங்கின.*

*அவர்கள் மூவரும் பதிலுக்கு திரும்பி ஓட ஆரம்பித் தனர். கேமராவோடு ஓடுவது பெரிய தொல்லையாக இருந்தது ஆதித்தனுக்கு.*

*ஒரு கட்டத்தில் அதைக் கழட்டி எறிந்தபடி ஓடினான். அதுவும் தோப்புக் கிணறாக பார்த்து உள்ளே விழுந்து காற்றுக் குமிழ்களோடு அடங்கிப்போனது.*

*அவர்கள் மட்டும் ஓடியபடியே இருந்தனர்*

*நாய்களிடம் அசுரத் துரத்தல்!*

## 17

**பல வரலாற்றுப் புகழ்பெற்ற பேரரசர்களும் தங்கள் கரங்களில் நவரத்ன மோதிரங்களை அணிந்திருந்தனர்.**

**அது அவர்களுக்கு பெரிய வெற்றிகளை அள்ளிக் குவித்து கொண்டிருந்ததற்கு சான்றுகள் உண்டு. இந்த நவத்தின் அடுத்த கட்டம் பதினெட்டாகும்.**

**இந்த பதினெட்டிற்கும் ஒரு பெரிய சிறப்பு இருக்கிறது. சபரியில் படிகள் பதினெட்டு. சித்த புருஷர்களும் 18 பேர்தான்.**

**பதினெட்டு ஒரு சரித்திரச் சிறப்புடைய ஒன்று. ஆன் மீகச் சிறப்பும் இதற்கு உண்டு. இதன் பின்னேயும் பல மர்மங்கள் உள்ளன!**

***—ஆராய்ச்சியாளர் ஸ்ரீவத்ஸவா.***

tamilebooks.net

அதிகாலை மணி நான்கு.

ஒரு வாடகைக்காரில் ஆஸ்ரமத்துக்குள் நுழைந்தனர் அருணாசலமும், ஸ்ரீவத்ஸனும் வழியிலேயே அங்கங்கே ஆதித்தனும், சுந்தரமும், சிவராமனும் ரத்த விளாறாகக் கண்ணில் பட்டனர். என்ன நடந்தது என்றே யூகிக்க முடியவில்லை. ஆஸ்ரமம் முன் காரைவிட்டு இறங்கிபோது ஒருவர் எதிரில் தென்பட்டார்.

"வாங்க வாங்க" என்று வரவேற்றார். பார்க்க அச்சு அசல் பொட்டுச்சாமியார் போலவே இருந்தார்.

அருணாசலத்துக்கு திகைப்பாகிப் போனது.

"சாமி.."

"வா அருணாசலம்... என்ன வைரத்தை திருப்பித் தர்றதுக்காக வந்திருக்கியா?"

"ஆமாம் சாமி..."

"ஏன்... உன்னை ரொம்ப படுத்திடுச்சோ...?"

"......"

"முழிக்காத.. கொண்டா?" -கைநீட்டிக் கேட்டார். அவர் உள்ளங்கையில் மோதிரமும் அடங்கியது. அதை அவர்கள் பார்க்க காலில் உள்ள செப்பு வளையத்தில் அடக்கினார். பின் சிரித்தார்.

எப்பொழுதோ சமாதியானவர் இப்பொழுது எப்படி நேரில் வந்தார்...? இது அவர்தானா...? இல்லை வேறு யாராவதா...?' எதுவும் அருணாசலத்துக்கு கேட்கத் தோன்றவில்லை. அவரோ நடந்தார்.

திறந்து கிடந்த சமாதிக்குள்ளும் இறங்கத் தொடங்கினார். இருவரும் கிட்டே சென்று எட்டிப் பார்த்தனர். "மேல பழையபடி மூடிட்டு... இந்த குப்பையெல்லாம்

tamilebooks.net

அள்ளிப்போட்டுட்டு நீங்க போங்க. எல்லாம் இனி நல்லவிதமா நடக்கும்...'' -உள்ளிருந்து ஒலித்த குரல் அவர்களை இயக்கியது. அதேபோல் செய்துவிட்டு திரும்பும்போது சிவராமனும், ஆதித்தனும், சுந்தரமும் மண்சாலை நடுவில் நின்றபடி லிஃப்ட் கேட்டனர். மனிதாபிமானம் இடம் கொடுத்தது. காரும் சீறிக்கொண்டு புறப்பட்டது. வைரத்தை திருடவந்தவர்களும்-வைக்க வந்தவர்களும் ஒரே நேரத்தில் வெளியேற உள்ளே சமாதியில் ஒரு வித புத்தொளி. பார்க்க பார்க்க அந்த இடம் பரவசத்தைத் தந்தது.

**வி**டிந்து மித்ரானந்தா சமாதிக்கு வந்தபோது மிகப் பெரிய பூஜை நடந்ததுபோல விளக்கு எரிய பூமாலைகள் மணந்தபடி இருக்க தசாங்கவாசம் கமழ்ந்து கொண்டிருந் தது.

கீழே விழுந்து கும்பிட்டார் மித்ரானந்தர்.

திரும்பினார்.

இரவில் முதலில் வந்த அதே நாய்!

"வாடா பைரவா... என்னடா நடந்துச்சு?" -என்று கேட்டபடியே அதோடு நடக்க ஆரம்பித்தார்.

**—முற்றும்—**

tamilebooks.net